

# எழுத்துக் கவிதைக்
# ...ிகள்

...எம்.ஏ., டி.லிட்.

JPL
C7373

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக்
# கவிதைக் கனிகள்

KOHA
JPL

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

163438

தொகுப்பாசிரியர்
**சிலோன் விஜயேந்திரன் எம்.ஏ., டி.லிட்.**

7373CC

நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

163438 C.C

**குறிஞ்சி**

20ஏ, டீச்சர்ஸ் கில்டு காலனி,
இராஜாஜி நகர் விரிவு,
வில்லிவாக்கம், சென்னை-600 049.
தொலைபேசி: 26502086

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : 2003

உரிமை : பதிப்பகத்தாருக்கு

பக்கம் : 344

811

விலை : ரூ. 90.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.
KOHA
JPL

# பதிப்புரை

ஈழத்தில் தோன்றிய தமிழறிஞர்களும், கவிஞர்களும் தமிழ் மொழிக்கு மிகப்பெரிய தொண்டு ஆற்றியுள்ளார்கள். தொடர்ந்து தொண்டு செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களின் சிறப்பான பணிகள் உரிய முறையில் தமிழ்நாட்டில் அறிமுகம் பெறவில்லை!

அபிதான சிந்தாமணியை எழுதிய சிங்காரவேலு முதலியார் அவர்களும் மொழியகராதி எழுதிய கதிரை வேற்பிள்ளை அவர்களும் தமிழுக்கு ஆற்றிய தொண்டு மிகச் சிறப்பானது.

இப்பொழுது திரு. சிலோன் விஜயேந்திரன் அவர்கள் பல ஆண்டுகளாக முயன்று ஆர்வத்தோடும், நிறைவான முறையிலும் தொகுத்துள்ள "ஈழத்துக்கவிதைக் கனிகள்" என்ற நூலை வெளியிடுவதில் பெருமகிழ்வு கொள்கிறோம்.

தமிழ் மக்கள் இந்நூலை மிகுந்த ஆர்வத்தோடு வரவேற்பார்கள் என நம்புகிறோம்.

-பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்பாசிரியர் உரை

இது என் வாழ்வின் இன்ப நாள். இருபதாண்டுகளுக்கு மேலாகவே என் இதயத்தில் கனன்று கொண்டிருந்த இனிய கனவொன்று இன்று நிறைவேறுகிறது.

ஆம் ஈழத்தின் இருந்தமிழ்க் கவிஞர்களின் தனித்துவம் மேலோங்கிய கவிதைகளை எல்லாம் ஈழத்திலேயே தொகுத்து வழங்க வேண்டுமெனக் காலங்காலமாய்த் துடித்துக் கொண்டிருந்தேன்.

என்றன் இலட்சியக் கனா பல வருடங்களுக்குப் பின் தமிழகத்தில் நிறைவேறுகிறது.

ஈழத்தின் இணையற்ற மறுமலர்ச்சிக் கவிதைகளை (1940-2002) மிக அதிக அளவிலும், பழந் தமிழ் மரபை ஒட்டிப் பாடப்பட்ட கவிதைகளில் மிகப் பிரபலமானவற்றையும் உள்ளடக்கி இத் தொகுப்பை உருவாக்கி உள்ளேன்.

இந்நூலில் யான் எழுதியுள்ள ஈழத்து இலக்கியப் பாரம்பரியமும் இன்றமிழ்க் கவிஞர்களும் என்ற கட்டுரை, ஈழத்துக் கவிதை வளர்ச்சி பற்றியும் கவிஞர்களின் ஆளுமை பற்றியும் தெளிவாக உணர்த்துமென எண்ணுகிறேன்.

இந்தக்கவிதை நூலை, வாழ்ந்து மறைந்த ஈழத்தின் வண்டமிழ்க் கவிஞர்களுக்கும், வாழ்ந்து கொண்டிருக்கும் எழுச்சிக் கவிவாணர்களுக்கு காணிக்கையாக்குகிறேன்.

–சிலோன் விஜயேந்திரன்

243, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை
சென்னை-5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# பொருளடக்கம்

1. ஈழத்து இலக்கியப் பாரம்பரியமும்
இன்றமிழ்க் கவிஞர்களும்
(தொகுப்பாசிரியர்)

2. மொழி உணர்ச்சிக் கவிதைகள்

3. இன எழுச்சிக் கவிதைகள்

4. சமூக முன்னேற்றக் கவிதைகள்

5. பல்சுவைக் கவிதைகள்

6. கவிஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

7. கவிஞர்கள் அகரவரிசை
உதவிய நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



# ஈழத்து இலக்கியப் பாரம்பரியமும் இன்றமிழ்க் கவிஞர்களும்

இன எழுச்சியும், மொழி உணர்ச்சியும் கொண்டிலங்கும் தமிழ் ஈழத்தின் கவிதைச் சிறப்பானது, இரண்டாயிரம் ஆண்டுகள் பாரம்பரியம் கொண்டதெனலாம்.

சங்க காலந்தொட்டே ஈழத்துக் கவிதைப் பணி கம்பீரமாகத் தொடங்கிவிட்டது.

ஆம்! சங்கத் தொகை நூல்களான அகநானூறு, 68, 231, 307, குறுந்தொகை 34, 189, 360, நற்றிணை 366 ஆகிய பாடல்கள் ஈழத்துக் கவிஞர் பூதந்தேவனார் யாத்தவை ஆகும்.

"பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலுள்ள ஈழத்துத் தமிழ் முயற்சிகளை எழுதப் புகின் பெரியதோர் ஆராய்ச்சி நூலுக்கேற்ற ஏராளமான விடயங்கள் உள.

பாவலர் சரித்திர தீபகம், தமிழ்ப்புலவர் சரித்திரம், ஈழமண்டலப் புலவர் சரித்திரம் என்னும் நூல்களிலே எத்தனையோ புலவர் பெருமக்களைச் சந்திக்கிறோம்.

முக்கியமாக இரகுவம்சம் பாடிய அரசகேசரி, மன்னர்களாக இருந்தும் மருத்துவமும், சோதிடமும் ஆக்கித்தந்து தமிழ் வளர்த்த செகராச சேகரன், பரராச சேகரன் ஆகியோர்.

ஈழத்து இலக்கிய வாயிலுக்குப் 'பொன் பூச்சொரிந்து பொலிந்து செழுந்தாதிறைக்கும்' பறாளை விநாயகர் பள்ளு பாடிய சின்னத் தம்பிப் புலவர், யாழ்ப்பாண வைபவ மாலை இயற்றிய மயில்வாகனப் புலவர், பரசமயக் கண்டனமாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்கும்மி பாடிய முத்துக்குமார கவிராச சேகரர், நல்லைக்குறவஞ்சி பாடிய இருபாலை சேனாதிராச முதலியார் ஆகியோர் நம் மனத்தை விட்டு நீங்காமல் கொலுவிருக்கிறார்கள்".

மேற்கண்டவாறு ஈழத்து இலக்கிய வளர்ச்சி நூலில் குறிப்பிட்டுள்ளார் இரசிகமணி கனக செந்திநாதன்.

இரசிகமணி குறிப்பிட்டுள்ளதைப்போல ஈழத்து இலக்கிய வரலாற்றில் 19-ஆம் நூற்றாண்டு ஓர் உயரிய காலகட்டமாகும்.

அந்த நூற்றாண்டில்தான் நம் தமிழ் அன்னை செய்த நற்றவப்பேறாய் ஆறுமுக நாவலர் தோன்றினார்.

தமிழ் உரைநடைக்கு உயிரூட்டி அதற்கொரு திருவுரு நல்கிய உன்னதப் புருடர் அவர்.

ஐம்பது நூல்களுக்கு மேல் அவர் பரிசோதித்தும், உரை எழுதியும், இயற்றியும் வெளிக் கொணர்ந்தார்.

ஆறுமுக நாவலரின் பதிப்பு நூல்களும், அன்னார் உரையெழுதிய நூல்களும், இயற்றிய நூல்களும் 'மாசற்ற மாணிக்கங்கள்' என்று தமிழ்கூறு நல்லுலகச் சான்றோர்கள் ஒருமித்து ஒப்புவர்.

நாவலரைத் தொடர்ந்து தமிழ்ப்பணியாற்றப் புறப்பட்டவர் சி.வை. தாமோதரம் பிள்ளை ஆவார்.

இவரே தொல்காப்பியம் என்ற அரிய பொக்கிசத்தையும், கலித்தொகை என்ற உன்னத இலக்கியக் களஞ்சியத்தையும் முதன்முதல் பதிப்பித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னைப் பல்கலைக் கழகத்திலே முதன்முதலாக பி.ஏ. தேர்வில் சித்தியடைந்தவர் அவர்.

தமிழகத்தில் நீதிபதியாக உயர்பதவி வகித்தவர்.

பிள்ளை அவர்கள் பதினொரு அரிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். ஆறு நூல்களை எழுதியுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ்ப் பணியில் ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரன் பிள்ளை ஆகியோர்க்குப் பெரும் பங்குண்டு.

20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில், சுன்னாகம் குமாரசாமிப் புலவர் குறிப்பிடத்தக்கவர்.

வடமொழியிலிருந்து மேகதூதம், சாணக்கிய நீதி, இதோபதேசம், இராமோதந்தம் போன்ற நூல்களை அவர் தமிழுக்குக் கொணர்ந்தார்.

தமிழ்ப் புலவர் சரித்திரம், இலக்கியச் சொல்லகராதி, சிசுபாலசரிதம், கண்ணகி கதை, இரகுவம்ச சரிதாமிருதம் போன்ற நூல்களையும் புலவர் எழுதினார்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்பே ஈழத்தில் சுடர் வீசத் தொடங்கிய புலவர்களில் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை, பாவலர் துரையப்பாப் பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப் புலவர், விபுலானந்தர் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

இவர்களில் யாழ்ப்பாணம் வசாவிளான் ஆசுகவி கல்லடி வேலுப் பிள்ளை, பலப்பல கவிதைகளை பண்டிதர் மட்டுமல்லாது பாமரரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் எழுதியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்க்கும் அஞ்சாதவராக "சுதேச நாட்டியம்" பத்திரிகையை (1902-1944) நெடுங்காலம் நடாத்தி இலக்கியப் பணியும், சமூகச் சீர்திருத்தப் பணியும் புரிந்தவர்.

"கண்டனங்கள் கீறக் கல்லடியான்" என்று கற்றோரால் போற்றப்பட்டவர். 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்ற பாரிய வரலாற்று நூலையும் எழுதியவர்.

இந்த வரிசையில் வரும் விபுலானந்தர், தமிழர்கள் தம்மை என்றும் நினைவு வைத்திருக்கும்படி 'யாழ் நூல்' என்ற நுணுக்கமான இசை ஆய்வு நூல் யாத்தவர்.

உயர்ந்த கவிதைகளைத் தீட்டிய அவர், நவயுகக் கவிக்கோமானான பாரதியார் பாடல்களை எங்கணும் பரப்பிய முன்னோடிகளில் ஒருவர்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியது மட்டுமின்றி அதன் உருவாக்கப் பணிக்கு ஆலோசனை வழங்கியவர்களிலும் விபுலானந்தர் ஒருவராவார்.

இந்தக் காலத்தில் தமிழ் செய்யப் புறப்பட்ட நாவாலியூர் சோமசுந்தரப் புலவரும் ஈழத்துக் கவியுலகில் குறிப்பிடத்தக்க ஒருவர் ஆவார். எண்ணற்ற கவிதைகளை அவர் எழுதியுள்ளார்.

அவர் எழுதிய குழந்தைப் பாடல்கள் உணர்ச்சியும் எளிமையும் கொண்டு ஒளி வீசுகின்றன.

## 1940 இல் ஏற்பட்ட மறுமலர்ச்சி

ஈழத்துக் கவிதை வானில் 1940இல் ஓர் மகத்தான அருணோதயம் தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



மன்னர்கள் பார்வையிலும் மகா பண்டிதர்கள் பார்வையிலும் மட்டுமே இடம் பெற்றிருந்த தமிழ்க் கவிதா தேவிக்குப் புத்துயிர் ஊட்டி, சாதாரண மக்கள் மன்றத்தில் எடுப்பாக அறிமுகப்படுத்தினான் மகாகவி சுப்பிரமணிய பாரதி!

பாரதியையும் அவனைத் தொடர்ந்து புரட்சிக் கவி மழைபெய்த பாவேந்தர் பாரதிதாசனையும் தீந்தமிழ்க் கவிஞன் திருச்சி கலைவாணனையும் (அப்புலிங்கம்) ஆதர்ச புருடர்களாகக் கொண்டு ஈழத்தில் அற்புதமான கவிஞர்கள் உதயமாயினர்.

தமது ஆரம்ப காலக் கவிதைகளில், யான் மேலே புகன்ற கவிஞர்களை ஈழத்துக் கவிஞர்கள் பின்பற்றினார்கள்.

ஆனால் கால ஓட்டத்தில் தமக்கெனத் தனித்தனிப் பாணிகளை வகுத்து அந்தப்புரட்சிப் பாதையிலே பூத்த தனித்துவமான கவிமலர்களைத் தமிழன்னைக்குச் சூட்டத் தொடங்கி விட்டார்கள்.

நவீனத் தமிழ் இலக்கிய உலகிலே தத்தம் தனித்துவத்தை நிறுவிய கவிதாமணிகளை இனிக் காண்போம்.

**க. சச்சிதானந்தன்**

மகாவித்துவான் நவநீதகிருஷ்ண பாரதியிடம் முறையாகத் தமிழ் கற்று ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலும் நுட்பமான புலமை பெற்றுப் பாட்டுலகில் தம் ராஜ பவனியை ஆரம்பித்தவர் இவர்.

க. சச்சிதானந்தன் கவிதைகளில் மகாகவி கம்பனின் மிடுக்கையும், பாரதியின் ஆவேசப் போக்கையும் ஒருமித்துக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தின்னத் தமிழெனக்கு வேண்டுமேயடா-தின்று
செத்துக் கிடக்கத் தமிழெனக்கு வேண்டுமேயடா" என்றும்,

"சாவிற் தமிழ்படித்துச் சாக வேண்டும்-என்றன்
சாம்பர் தமிழ்மணந்துவேக வேண்டும்" என்றும்,

உன்னதப் போக்கில் கவிதைகள் பாடும் இந்தக் கவிஞரின் 'ஆனந்தத் தேன்' என்ற கவிதைத் தொகுதி 1954இல் வெளிவந்துள்ளது.

அண்மையில் இவர் யாத்து யாழ்ப்பாணக் காவியம் வெளிவந்துள்ளது.

மகிமை சான்ற இந்தக் கவிஞரின் பல கவிதைகள் இன்னமும் நூலுருப் பெறாமலேயே இருக்கின்றன.

பெருங்கவி க. சச்சிதானந்தன், கவிதைகள் மட்டுமல்லாது 'அன்னபூரணி' என்ற அரிய நாவலையும், வீச்சான உரைநடையில் பழைய அரசியல் தலைவர் வன்னிய சிங்கத்தின் வரலாற்றையும் எழுதியுள்ளார்.

**மகாகவி**

'மகாகவி' என்ற பேரில் கவியுலகிற் புகுந்த து. உருத்திரமூர்த்தி, மெய்யாகவே ஒரு 'மகாகவிதான்!' என்று சொல்லும் அளவுக்குத் தமிழ்க் கவியுலகில் பல புரட்சிகளைச் செய்தவர்.

யாப்பினைச் சிதைக்காமலும், நிராகரிக்காமலும் மிகவும் புதியவகை வெளிப்பாட்டுத் திறனோடு பலப்பல பாக்களை எழுதியவர் அவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

163438



தமிழில் பேச்சோசைப் பண்பை அதிகம் பேணி, மக்கள் அன்றாடம் பேசும் சொற்றொடர்களையே பயன்படுத்தி, பல அற்புதமான கவிதைகளை எழுதிய ஒரு முன்னோடிக் கவிஞர் அவர்.

'குறும்பா' என்ற ஒரு புதுவகைப் பா அமைப்பையும் தமிழக்கு அறிமுகம் செய்தவர் அவரே.

ஈழத்து மறுமலர்ச்சிக் கவிஞர்களில் க. சச்சிதானந்தன், மகாகவி ஆகியோரைத் தொடர்ந்து 1940-1950 ஆண்டுகளுக்குட் பட்ட காலத்தில் சுடர்வீசத் தொடங்கிய கவிஞர்களில் நாவற்குழியூர் நடராசன், யாழ்ப்பாணன் (வே. சிவக்கொழுந்து), சோ. இளமுருகனார், க. வேந்தனார் போன்றோரைக் குறிப்பிடலாம்.

நாவற்குழியூர் நடராசன், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை, அ.ந. கந்தசாமி, செ. கதிரேசர் பிள்ளை, அல்வாயூர் செல்லையா ஆகியோர் சந்தநயம் நிறைந்த பல பாடல்களைத் தீட்டியுள்ளார்கள்.

இவர்களில் யாழ்ப்பாணன் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவர். கவிதைக் கன்னி, மாலைக்கு மாலை போன்ற அவருடைய கவிதைத் தொகுதிகளில் அழகான மொழி வீச்சோடு கருத்துச் சிறப்புப் பொருந்திய பல கவிதைகள் காணக் கிடக்கின்றன.

7373CC

**இ. முருகையன் முதல்...**

1950-ஆம் ஆண்டளவில் இன்னுமொரு உன்னதமான கவிஞர் குழாம் தமிழ்க் கவியுலகில் மிடுக்கோடு பிரவேசித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் முதல் வரிசையில் இடம் பெறும் தகுதி பெற்றவர் இ. முருகையன்.

யாப்பில் புதுமை செய்து விஞ்ஞானச் சிந்தனைப் போக்கும், சமூக நல நோக்கும் கலந்து பொலிந்த பல அற்புதமான கவிதைகளைப் படைத்துள்ளார் இக்கவிஞர்!

டாக்டர் க. கைலாசபதி கூறியதுபோல் இ. முருகையன் 'கவிஞர்களின் கவிஞர்' என்பதில் ஐயமே இல்லை.

தமிழகத்தில் பாவேந்தர் பாரதிதாசன், தமது பாணியில் பாடும் ஒரு கவிஞர் பரம்பரையைத் தொடங்கி வைத்ததைப் போல, ஈழத்துக் கவியுலகில் தொடங்கி வைத்த முன்னோடிகள் இருவர். ஒருவர் மகாகவி. மற்றவர் இ. முருகையன்.

தனித்துவக் கவிஞரான முருகையன், பல இலக்கிய விமர்சனக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

**நீலாவணன்**

1950 வாக்கில் அரும்பிய நீலாவணன், ஈழத்தின் மிகச்சிறந்த கவிஞர்களில் ஒருவர்.

காதல், ஆன்மிகம், சமூக நோக்கு-இப்படிப் பலவகைச் சிந்தனைகளை உள்ளடக்கிய கவிதைகளை ஜீவ களையோடு எழுதியவர் இவர். தமக்குப் பின்னால் வந்த கவிஞர்களைத் தமது கவிதைகளால் ஆற்றுப்படுத்திய பெருமையும் இவர்க்குண்டு.

நீலாவணனின் பிற்காலக் கவிதைகள் பேச்சோசைப் பண்பைப் பேணி அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்துரை என்ற இயற்பெயர் கொண்ட நீலாவணன் ஈழத்தின் குறிப்பிடத்தக்க நவகவிவாணர்களில் ஒருவர்.

**இராஜபாரதி**

"பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழில் அழுமோசை கேட்கவேண்டும்
ஓடையிலே எம்சாம்பர் கரையும் போதும்
ஒண்டமிழே சலசலத்து ஓயவேண்டும்"

மேலேயுள்ள கவிதையின் சொந்தக்காரராகிய ராஜபாரதி, மிடுக்கான மொழி உணர்ச்சி, இன எழுச்சிப் பாடல்களையும், காதல் பாடல்களையும் படைத்தவர்.

'தீயுண்ட வீரமுனை' என்ற குறுங்காவியம் நூலாக வெளி வந்துள்ளது.

பல கவிதைகளை தாமே தமது மனைவி பேரிலும், மகள் பேரிலும் எழுதியுள்ள தகவலை கவிஞர் நேரில் என்பால் ஒருமுறை தெரிவித்தார்.

"மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்ற மகாகவி பாரதியின் கூற்றுக்கொப்ப ராஜபாரதியின் கவிதைகள் ஜொலிக்கின்றன.

நூலுருப் பெறாத இவர்தம் கவிதைகள் பல நூலுருப் பெறும் நாள் தமிழுக்குப் பொன்னாளாகும்.

**சில்லையூர் செல்வராசன்**

'தான்தோன்றிக் கவிராயர்' என்ற புனை பெயரில் பசுந் தமிழ்ப் பாமலர்கள் படைத்தவர் இக்கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது 'வெல்லத் தமிழ்' மூலம் பலப்பல கவியரங்குகளிலும் ஜெயக்கொடி நாட்டியுள்ளார் இவர்.

நடிப்பு, இலக்கியத் திறனாய்வு போன்ற பல துறைகளிலும் தம் ஈடுபாட்டைப் புலப்படுத்தியவர் சில்லையூரார்.

**'விடுதலைக்கவி' காசி ஆனந்தன்**

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்க்கவியுலகில் வீறு நடைபோடும் ஆவேசக் கவிஞர் காசி ஆனந்தன் ஆவார்.

மொழிக்காகவும் இனத்திற்காகவும் பாட்டெழுதிய எந்தத் தமிழ்க் கவிஞனும் காசி ஆனந்தன் போல் தியாகம் செய்திருக்க முடியாது!

தமிழுக்காகவும், தமிழர்க்காகவும் பல போராட்டங்களில் பங்கேற்று, அதிகாரவர்க்கத்திடம் அடி, உதைபட்டு, ரத்தம் கக்கிக் காச நோயாளியாக... இப்படிப் பல்லாற்றானும் தியாகத்தின் விளிம்புக்கே போனவர் இந்தப் புரட்சிக் கவிஞர்.

தமிழகத்திலும் அமரர் ஆதித்தனார் நடாத்திய 'நாம் தமிழர்' இயக்கத்தில் பங்கேற்றுத் துடிப்போடு செயற்பட்டார் இவர்.

இந்தக் கவிஞனின் அக்கினிக் கவிதைகள் இவர் தம் தியாகத்தைப் போலவே மகோன்னதம் வாய்க்கப் பெற்றவை.

**அண்ணல்**

ஈழத்துக் கவியுலகில் தமது கொஞ்சு தமிழ்க் கவிதைகளால் நெஞ்சு நிமிர்ந்து நடந்தவர் அண்ணல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் தலைசிறந்த முஸ்லிம் கவிஞர்களில் ஒருவரான இவர்தம் கவிதைகளில் காதலின் ராஜ ராகங்கள் ஒலித்தன.

பிற்பகுதிக் கவிதைகளில் இறை அருள் வேட்கையும், தத்துவப் பாங்கும் மிகுந்துள்ளன.

அண்ணலைப் போலவே புரட்சிக் கமால், யுவன் போன்றோரும், மலையகத்துக் கவிஞர்களான கே. கணேஷ், சக்தி அ. பாலையா போன்றோரும் நற்கவிஞர்கள் ஆவர்.

**குறிப்பிடத்தக்க கவிமணிகள்**

1960 ஆம் ஆண்டளவில் பிரகாசிக்க ஆரம்பித்த கவிஞர்களில் 'மதுரகவி' இ. நாகராஜனும் ஒருவர்.

பல கவியரங்குகளில் வெற்றிக்கொடி நாட்டிய இந்தக் கவிஞர், சில பத்திரிகைகளின் ஆசிரியப் பீடத்தில் அமர்ந்தும் தமிழ்ப்பணி செய்தவர்.

'நிறைநிலா' என்ற சீரிய சிறுகதை நூலொன்றையும் தமிழுக்குத் தந்த இவர், நல்ல நாவலாசிரியரும் கூட.

இ. நாகராஜனைப் போலவே வி. கந்தவனமும் குறிப்பிடத்தக்க ஓர் கவிஞர்.

'ஏனிந்தப் பெருமூச்சு?', 'பாடு மனமே' போன்ற பல நல்ல கவிதை நூல்களைத் தந்துள்ளார் இவர்.

கவியரங்குகளிலும் மிகு புகழ் பெற்றவர்.

இந்த வரிசையில்,-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ. அம்பிகைபாகனும்** ஒருவர். 'அம்பி' என்ற பெயரில் பொருட் செறிவுள்ள பல பாக்களைப் படைத்துள்ளார் இக்கவிஞர்.

மேடைக் கவியரங்குகளிலும் நன்கு சோபித்தவர்.

சிறு கதை எழுத்தாளர் 'சிற்பி' சரவணபவனின் 'கலைச்செல்வி' மூலம் இனங்காட்டப்பட்ட நற்கவிஞர் **ச.வே. பஞ்சாட்சரம்** ஆவார்.

இவரது 'தண்டலை' கவிதை நூலும், 'எழிலி' காவியமும் குறிப்பிடத்தக்கன.

'மகாகவி', முருகையன் ஆகிய பெருங்கவிஞர்களை எதுகை, மோனை என வர்ணித்துப் பாட்டுலகில் கம்பீரச் சிறகடித்துப் பறந்தவர் **பா. சத்தியசீலன்.**

'பா' என்ற பெயரில் சிறந்த கவிதை நூல் ஒன்றை வழங்கிய இந்தக் கவிஞர், இன்று சிறுவர் பாடல்கள் எழுதுவதில் அளவுக்கு அதிகமாக ஈடுபட்டு வருகிறார்!

'தேனாறு' என்ற அருமையான கவிதை நூலைப் படைத்தவர் கவிஞர் **காரை. சுந்தரம் பிள்ளை.**

கவிதைத் துறையில் ஆழ்ந்த ஈடுபாட்டோடு செயற்படுபவர். இவர் யாத்த 'சங்கிலியம்' காவிய நூல் எழுச்சி மிக்கதாக உள்ளது.

1960 ஆம் ஆண்டின் பின் ஜொலிக்க ஆரம்பித்தவர்களில் கவிஞர் **வே. ஐயாத்துரையும்** ஒருவர்.

இந்த வரிசையில் அடக்கமான அதே ஞான்று மிக நேர்த்தியாகக் கவி எழுதும் திறன் பெற்ற புலவர் **ம. பார்வதி நாதசிவத்தையும்** குறிப்பிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



இவருடைய கவிதைகள், நளினமான முறையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் போக்கில் அமைந்து அணி சேர்க்கின்றன.

இந்த வரிசையில் பண்டிதர் **க. வீரகத்தி** (க-வீ)யையும் சொல்ல வேண்டும். ஆழமாக இலக்கண, இலக்கியப் புலமை பெற்ற இந்தக் கவிஞர், எளிமையும் உணர்ச்சித் துடிப்பும் மிக்க 'செழுங்கமலச் செல்வி' என்ற அரிய கவிதை நூலைத் தந்துள்ளார்.

மணிவாசகப் பெருமான் சிவபுராணம் பாடியது போல பண்டித க. வீரகத்தி, பார்வதியை 'சிவதி' என அழைத்து, சிவதி புராணம் சிறப்பாகப் பாடியுள்ளார்.

க. வீரகத்தியைப் போலவே நானிங்கே **'சொக்கன்'** (க. சொக்கலிங்கம்) பற்றியும் சொல்ல வேண்டியுள்ளது.

பழந்தமிழ் இலக்கிய ஞானம் நிரம்பிய சொக்கன், அதிகமாக எழுதாவிட்டாலும் எழுதிய கவிதைகள் நன்கு அமைந்துள்ளன. நாவல், நாடகம், சிறு கதைகள் போன்ற பல துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்.

**யாழ் ஜெயம்** (விக்டர்) என்ற கவிஞர் இலைமறைகாயாக இருந்து சரளமான பல கவிதைகளை எழுதியுள்ளார்.

இ. முருகையனின் கவிதா மிடுக்கை, கல்வயல் **வே. குமாரசாமி**யிடமும் காணலாம்.

முருகையன் கவிதைகளால் வசீகரிக்கப்பட்ட குமாரசாமி, உணர்ச்சி அலையென மோத, அழகுள்ள பல பாடல்கள் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 ஆம் 'ஆண்டின் பின் பிரகாசிக்க ஆரம்பித்தவர்களில் **பாண்டியூரனும்** (குமாரசாமி) ஒருவர்.

உணர்ச்சியோடு தேனார் சொற்களை அள்ளிச்சொரிந்து அருமையான கவிதைகளை எழுதியுள்ளார் இவர்.

*"பாட்டெழுதும் ஆசை எனக் கில்லை அன்பே*
*பாவலனாய் ஆவதற்கும் படிக்க வில்லை"*

என்று தமது கவிதை ஒன்றில் குறிப்பிட்டாலும், ஈழத்தின் சிறந்த கவிஞர்களில் பாண்டியூரன் ஒருவர் என்பதனை அவரெழுதிய பல அரிய கவிதைகள் நிறுவுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தோன்றிய **திமிலைத்துமிலன், மு. சடாட்சரன், திமிலைக்கண்ணன், ஜீவா- ஜீவரத்தினம், செ. குணரத்தினம்** போன்ற கவிஞர்களும் குறிப்பிடத்தக்க கவிதைகளை எழுதியுள்ளார்கள்.

மேற்கூறியவர்களோடு **சி. மௌனகுரு, ஆரையூர் அமரன்** போன்றவர்களையும் கூறலாம்.

1960 ஆம் ஆண்டின் பின் கவித்துறையில் கவிளொளி பரப்பியவர்களில் மு. பொன்னம்பலமும் ஒருவர்.

அவரது 'அது' என்னும் கவிதைத் தொகுதியிலே ஆழமும் அழகும் மிக்க கவிதைகள் மின்னுகின்றன.

இந்தக் கால கட்டத்தில் தோன்றிய கவிஞர்களில் **மு. கனகராசன், அ. யேசுராசா** போன்றவர்களும் உத்வேகத்துடன் தமது கவிதைகளை வழங்கியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் தொகுப்பாசிரியராகிய யானும், கவித்துறையிலும் நாவல், சிறுகதை போன்ற துறைகளிலும் இந்தக் காலகட்டத்தில்தான் முனைப்போடு செயலாற்றத் தொடங்கினேன்.

இந்தக் காலகட்டத்தில் புகழ்பரப்பிய கவிஞர்களில் இணுவில் கே. வீரமணியும் ஒருவர்.

'கற்பகவல்லி நின் பொற்பதங்கள்' எனத் தொடங்கும் டி.எம். சௌந்தரராஜன் பாடிய பிரபலமான பக்திப் பாடலையும், "உன்னை நான் காண்பதெங்கே முருகா" எனத் தொடங்கும் சீர்காழி கோவிந்தராஜன் பாடிய பக்திப் பாடலையும் இவை போலப் பிரபலம் பெற்ற பலப்பல பக்திப் பாடலையும் எழுதிய இவர் வளம்மிக்க கவிஞர்.

இவர் போல இசைத் தமிழுக்குப் புகழ் சேர்த்தவராக மட்டு நகரைச் சேர்ந்து 'ஈழத்து' **இரத்தினத்தையும்** கூற வேண்டும்.

இலங்கையில் உருவான தமிழ்த் திரைப்படங்கள் சிலவற்றிலும், இலங்கை வானொலியிலும் 'ஈழத்து' ரத்தினத்தின் சீரிய பாடல்கள் ஒலித்திருக்கின்றன.

## அருமைக் கவிஞர் ஐவர்

### எம்.ஏ. நுஃமான்

நித்திலக் கவி மழை பொழிந்த நீலாவாணனையும், தமிழ்க் கவியுலகைத் திசை திருப்பிய கவிமணிகளில் ஒருவரான மகா கவியையும் தமது ஆதர்சக் கவிகளாக ஏற்றுக்கொண்டு பாட்டுலகில் நுழைந்தவர் எம்.ஏ. நுஃமான்.

ஆரம்பக் காலங்களில் தமது குருநாதர்களின் தாக்கங்களோடு பாட்டெழுதிய இந்தக் கவிஞர், பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கென ஓர் தனித்துவமான பாணியில் அதி அற்புதமான கவிதைகளை எழுதி வருகிறார்.

யாப்பை நிராகரிக்காமலேயே, யாப்பின் மேடையில் நின்று கொண்டே, புதுக் கவிதையின் வீச்சுகளை மரபுக்கவிதைகள் மூலமும் கொண்டு வரமுடியும் என்பதனைத் தமிழ்க் கவியுலகிற்கு இனங்காட்டிய புதுமைக் கவிஞர் இவர்!

இந்த வகையில்,

ஈழத்து மறுமலர்ச்சிக் கவிதையானது (1940-1960) மகாகவி மூலம் ஒரு திருப்பத்தையும், இ. முருகையன் மூலம் ஒரு திருப்பத்தையும் சந்தித்தது போல் எம்.ஏ.நுஃமான் மூலமும் ஒரு திருப்பத்தைச் சந்தித்துள்ளது என்பது தெளிவாக உணரத்தக்க உண்மையாகும்.

**சண்முகம் சிவலிங்கம்**

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் எம்.ஏ.நுஃமானை ஆசிரியராகக் கொண்டு 'கவிஞன்' என்ற பேரிலே ஓர் பாட்டிதழ் வெளிவந்து கொண்டிருந்தது.

அந்த இதழிலே முற்றிலும் நவமான வெளிப்பாட்டுத் திறனோடு இயல்பான சொற்களை உணர்ச்சிபூர்வமாகக் கையாண்டு ஒரு கவிஞர் கவி எழுதினார்.

அவரே சண்முகம் சிவலிங்கம்!

இந்தக் கவிஞரின் 'நீர்வளையங்கள்' பாத்தொகுதியைப் படித்த போது உண்மையாகவே ஈழத்துக் கவிஞர்கள் தத்தம் தனித்துவ போக்கில் அமைந்த நவகவிமலர்களால் நற்றமிழ் அன்னையை அலங்கரிக்கிறார்கள் என்பதனைப் புரிந்து கொள்ள முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதுவை இரத்தினதுரை**

ஆரம்பத்தில் சத்தான சமத்துவக் கவிதைகளை ஆவேசமாகப் பாடி வந்த இரத்தினதுரை, இன்று தமிழ் ஈழ விடுதலைப் போரில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி இடிபோல் முழங்கும் இன எழுச்சிப் பாடல்களை எழுதி வருகிறார்.

புதுவை இரத்தினதுரைக்குத் கவிதை இயல்பாக வருகிறது.

சக்திமிக்க ஆயுதமாக அவர் கவிதையே அவருக்குக் கைகொடுக்கிறது.

**வ.ஐ.ச. ஜெயபாலன்**

வன்னி மண்ணின் வசந்த மணத்தை, உத்வேகம் மிக்க தமது சிந்தனைத் திறத்தை மொழிநயத்தோடு கவியாக்கும் கலை ஜெயபாலனுக்கு நன்கு கைவந்திருக்கிறது.

தமிழன்னைக்குப் பல அழகிய பாமலர்களைத் தூவிய கவிஞர்கள் வரிசையில் இவருக்கும் இடமுண்டு என்பதனைத் தமிழறிந்த எவரும் மறுக்க இயலாது.

'நமக்கென்றொரு வேலி', 'ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்' ஆகிய இரு சீரிய நூல்கள் ஜெயபாலன் கவித்திறத்தை உணர்த்தக் கூடியவாறு அமைந்துள்ளன.

அண்மையில் 'ஜெயபாலன் கவிதைகள்' என்ற அரிய நூல் வந்துள்ளது!

**சேரன்**

கடந்த இருபதாண்டுக் காலமாக ஈழத்துக் கவியுலகில் 'புதிய புயலாக'க் கிளம்பி இருப்பவர் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய நவகவிதைகள் இவருக்கே உரிய தனிப்போக்கு மிக்கவையாகும்.

இன்று பல இளைஞர்கள் இவர் பாணியில் கவிதைகள் எழுதி வருகிறார்கள்.

தமது தந்தையார் மகாகவி போலவே, தமது காலகட்டக் கவிதையில் ஒரு திருப்பத்தைக் கொணர்ந்த பெருமை சேரனுக்கும் சொந்தமாகிறது!

## பெண் கவிஞர்கள்

ஈழத்து மறுமலர்ச்சி கவியுலகில் அவ்வப்போது பெண் கவிஞர்களும் தோன்றித் தமது பங்களிப்புகளைச் செய்து வந்துள்ளார்கள்.

கால் நூற்றாண்டுக்கு முன்னர் இராஜம் புஷ்பவனம், பாலதேவி, ஆர். விஜயலட்சுமி போன்ற பெண்பாலாரின் கவிதைகள் மலர்ந்து மணம் வீசின.

இன்றைய காலகட்டத்தில் முன்னர் அ. சங்கரி, சி. சிவரமணி, செல்வி, ஊர்வசி, சன்மார்க்கா போன்ற பெண்கவிகள் தத்தம் உணர்ச்சிகளைத் தத்ரூபமாகப் புதுக்கவிச் சித்திரங்களாக வடித்து வருகிறார்கள்.

## முடிவாகச் சில வார்த்தைகள்

இதுகாறும் சங்க காலந்தொட்டே ஈழத்துக் கவிஞர்தம் ஆற்றல் தமிழ்கூறு நல்லுலகில் விரவ ஆரம்பித்தமை பற்றியும் தொடர்ந்து காலங்கள்தோறும் ஈழத்துக் கவிஞர்களின் வளர்ச்சிப் போக்குகளைப் பற்றியும் சுருக்கமாகச் சொன்னேன்.

பாரதி ஆரம்பித்து வைத்த மறுமலர்ச்சிக் கவிதையானது ஈழத்துக் கவிஞர்களால் மேன்மேலும் மெருகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீனத்துவமும் பெற்று தனித்துவப் போக்கில் சென்றுள்ளமை பற்றியும் எடுத்தியம்பினேன்.

ஈழத்துக் கவிஞர்கள் சிலரது கவிதைகளைத் திரட்டி 'ஈழத்துக் கவிமலர்கள்' என்ற சிறு நூலை இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வெளிக் கொணர்ந்தார் இரசிகமணி கனக செந்திநாதன்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' என்ற தொகுப்பு நூல் ஒன்றை ஈழத்துக் கவிஞர்களான எம்.ஏ. நுஃமானும், அ. யேசுராசாவும் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள்.

யான் மேற்சுட்டிய நூல்களில் குறிப்பிட்ட சில கவிஞர்கள் தாம் இடம் பெற்றிருந்தனர்.

இந்த வகையில்,

இதுபோழ்து நீங்கள் கைகளில் ஏந்திக் கொண்டிருக்கும் "ஈழத்துக் கவிதைக் கனிகள்" நூலானது கடந்த அரை நூற்றாண்டு (1940-2000) களுக்கு மேலாக ஈழத்துக் கவியுலகில் தோன்றிப் பிரகாசித்த, பிரகாசித்துக் கொண்டிருக்கிற உன்னதமான கவிஞர்களின் படைப்புகளை நிறைவாக அடையாளங் காட்டவல்ல நூல் என்பதனைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகள் பற்றி ஆய்வு செய்ய முற்படுவோரும், இந்த நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு எழுத முற்படுவோரும் ஈழத்து மறுமலர்ச்சிக் கவிதைகளின் தனித்துவ வளர்ச்சி பற்றித் தெரிந்து கொள்வதற்கும் இந்தத் தொகுப்பு நூல் உறுதுணையாக அமையுமெனக் கருதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்து இலக்கிய விமர்சகர்கள் பலரும் இருபதாம் நூற்றாண்டுக் கவிதை இலக்கியத்திற்கு மகத்தான தொண்டு செய்த 'சோசலிசப் பெருங்கவி' கம்பதாசன், உன்னதக் கவிஞர்களான ச.து.சு. யோகியார், தமிழ் ஒளி, திருச்சி கலைவாணன் போன்ற கவிஞர்களின் கவிதைப் பங்களிப்புகளை எவ்வண்ணம் இருட்டடிப்புச் செய்து வந்துள்ளார்களோ அதுபோலவே, ஈழத்து விமர்சகர்கள் சிலரும், தாம் சார்ந்த சித்தாந்தங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் மாறுபட்டவர்கள் என்ற காரணத்தால் ஈழத்தின் அற்புதமான கவிஞர்கள் பலரைப் புறக்கணித்து வந்துள்ளார்கள்.

எந்தச் சித்தாந்தச் சார்புற்ற யான்,

சுதந்திர தேவியின் சபையில் நின்று, இலக்கியத் தகுதியின் அடிப்படையில், நிசத்தின் வெளிச்சத்தில், கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் ஈழத்தில் தோன்றிய உன்னதக் கவிமணிகளின் படைப்புகளைத் தொகுத்துள்ளேன்.

1940 ஆம் ஆண்டுக்கு முன்னர் பழைய மரபுகளைப் பின்பற்றிக் கவிதை பாடியவர்களில் மிகச் சிலரே இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளார்கள்.

காரணம், ஈழத்தின் மறுமலர்ச்சி தமிழ்க் கவிவாணர்களின் படைப்புகளைத் தொகுத்தளிப்பதே என் நோக்கமாகும்.

1940 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் வானில் மறுமலர்ச்சிச் சுடர் கொளுத்திய ஈழத்தின் தனித்துவம் மிக்க கவிஞர்களின் படைப்புகளைத் தமிழ்கூறு நல்லுலகம் துய்த்து மகிழுமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி உணர்ச்சிக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

க. சச்சிதானந்தன், யாழ்ப்பாணம்

## தமிழ்க்கவிப் பித்து

பொன்னின் குவையெனக்கு வேண்டியதில்லை-என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டிய தில்லை;
மன்னன் முடியெனக்கு வேண்டிய தில்லை-அந்த
மாரன் அழகெனக்கு வேண்டியதில்லை

கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா-உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமே யடா
தின்னத் தமிழெனக்கு வேணுமே யடா-தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமே யடா!

உண்ண உணவெனக்கு வேண்டியதில்லை-ஒரு
உற்றார் உறவினரும் வேண்டியதில்லை;
மண்ணில் ஒருபிடியும் வேண்டியதில்லை-இள
மாதர் இதழமுதம் வேண்டியதில்லை!

பாட்டில் ஒருவரியைத் தின்று களிப்பேன்-உயிர்
பாயு மிடங்களிலே தன்னை மறப்பேன்;
காட்டில் இலக்குவனைக் கண்டு மகிழ்வேன்-அங்குக்
காயுங் கிழங்குகளும் தின்று மகிழ்வேன்!

மாட மிதிலைநகர் வீதி வருவேன்-இள
மாதர் குறுநகையிற் காதலுறுவேன்;
பாடியவர் அணைக்கக் கூடி மகிழ்வேன்-இளம்
பச்சைக் கிளிகளுடன் பேசி மகிழ்வேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை நதிக்கரையில் மூழ்கி யெழுவேன்-பின்பு
காணும் மதுரைநகர்க் கோடி வருவேன்
சங்கப் புலவர்களைக் கண்டு மகிழ்வேன்-அவர்
தம்மைத் தலைவணங்கி மீண்டு வருவேன்!

செம்பொற் சிலம்புடைத்த செய்தியறிந்து-அங்குச்
சென்று கசிந்தழுது நொந்து விழுவேன்
அம்பொன் உலகமிர்து கண்டனேயடா-என்ன
ஆனந்தம் ஆனந்தம் கண்டனேயடா!

கால்கள் குதித்துநட மாடுதேயடா-கவிக்
கள்ளைக் குடித்த வெறி ஏறுதேயடா!
நூல்கள் கனித்தமிழில் அள்ளிடவேண்டும்-அதை
நோக்கித் தமிழ்ப்பசியும் ஆறிடவேண்டும்.

தேவர்க்(கு) அரசுநிலை வேண்டியதில்லை-அவர்
தின்னும் சுவையமுது வேண்டியதில்லை.
சாவிற் றமிழ் படித்துச் சாகவேண்டும்-என்றன்
சாம்பர் தமிழ்மணந்து வேக வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

**க. சச்சிதானந்தன், யாழ்ப்பாணம்**

## தாயின் கண்ணீர்

கூவிக் குலவிக் குருவியினம் விளையாடக்,
கொம்ப ரெல்லாம்
பூவிற் கிடந்து சிறைவண்டும் இசைபாடப்,
பொய்கை நீரில்

ஓடிச் சிறுமீன் உலவிவர, அசைந்துவரும்
பிள்ளைத் தென்றல்
கோடைக் கனலைக் குளிர்செய்ய, இளவேனிற்
பொழுதில் ஓர்நாள்

செக்கச் சிவந்த செந்தளிரால் மாமரங்கள்
பந்தலிட்டுப்
பக்கத் தழைக்குப் பூங்காவிற் பைம்புல்லிற்
றனிமை யாகி
மெல்லத் தலைசாய்ந்தேன், அப்பொழுது,

பிஞ்சுத் தளிர்கள் கால்தொடுவ தென்றிருந்தேன்
பின்னே பார்த்தேன்
கஞ்ச மலர்முகமும் கண்ணீரு மாகியொரு
கன்னி நின்றாள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தள் விரலாற் கால் தொட்டாள் "கண்மணியே
எழு"வென் றாளே
சோர்ந்து கிடந்தேன் எழுந்திட்டேன் "தோகாய்நீ
யாரோ"என்றேன்
"புத்திரனே" யென்றிதழ் எடுத்தாள் புகலாது
விக்கி நின்றாள்;
முத்தாய் உடைந்து முகம் நனைக்கும் கண்ணீரும்
உயிர்த் தெழுந்த
விம்முதலும் பேசினவே.

காலிற் சிலம்பும், கொடியிடையில் மேகலையும்,
வள்ளைக் காதிற்
காலித் திலங்கும் குண்டலமும், கைவளையும்
கருமை சீய்க்கும்
சிந்தா மணியும் திறங்கண்டேன்; சேவடியில்
வீழ்ந் திட்டேனே.
"எந்தாய் தமிழே" என்றேதோ குழறினேன்
ஏக்கத் தாலே.

"அன்னாய் அழுது வெதும்பாதீர்: அடியேன்நீர்
ஈன்ற பிள்ளை
சொன்னாற் குறைகள் துடையேனோ
சொல்லும்" என்றேன்.
கன்னி கலங்கினாள்: கட்டுரைத்தாள்:
"வெள்ளம் புரண்டு வருகுதப்பா! வீதியெலாம்
வேகத் தோடே
தெள்ளு தமிழ் ஏட்டுச் செல்வமெலாம் சிதைத்துக்
குலைத்து வாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைத் தமிழ்த்தேன் பரிமளித்த முன்றில்களை
மூழ்க மூடி,
மெச்சிப் புலவர் எனைவளர்த்த சங்கமெலாம்
மேல்கீ ழாக்கி,
முன்னைப் பழையோர் முத்தாடிச் சேர்த்தகலை
சிதறிப் போகத்
தென்னன் மதுரைத் தெருவெல்லாம் மதிலுடைத்து
வருகுதப்பா
அங்கேபார்! மகனே

ஆங்கிலப்பேர் வெள்ளமொன்று ஐயையோ
வருகுதே பார்!
தாங்கி வளர்த்த தமிழ்மன்னர் மனைக்கெல்லாம்
ஓடிப் போனேன்.
மண்ணில் முடிசாய்ந்(து) உறங்குகிறார் மன்னரெலாம்
மனையும் சாய
சங்கப் பலகைக் கோடினேன்சூழ் தண்ணீருட்
தாழக் கண்டேன்;

'தங்க இடமுண்டோ?' என்றிந்தத் தமிழ் நாட்டுத்
தெருக்களெல்லாம்
கூவிக் குழறிக் குரலடைத்தேன்: கூப்பிடுவார்
எவரும் இல்லை:
வர்விக் கரையும், மலர்பொழிலும், வனநடுவும்
வைகி வைகித்
தன்னந் தனியே தளர்கின்றேன் தமிழ்மகனே!
தாய் நா"னென்று
விக்கிப் பொருமினாள் என்றன் அன்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜபாரதி, மட்டக்களப்பு

## தமிழ்த் தாகம்

கோடையிலே எரிவெயிலிற் காயும்போது
கொப்பளிக்குந் தமிழ்வெள்ளம் தோயவேண்டும்
வாடைதரு மூதலிலே நடுங்கும் போது
வயந்தமிழ்க் கதிரென்னைக் காயவேண்டும்
பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழில் அழுமோசை கேட்கவேண்டும்
ஓடையிலே எம்சாம்பர் கரையும் போதும்
ஒண்தமிழே சலசலத்து ஓய வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜபாரதி, மட்டக்களப்பு

## கவிதைப் பாசம்

பொன்பூக்கள் சொரிந்தொளிரும் பூங்கா வொன்றில்
புள்ளினங்க ளிசைபாடப் புதுமை பூப்ப
வெண்பாக்கள் நொடிக்குள்ளே யாத்துப் பாடும்
விந்தையிலே சாதுர்யம் பெற்ற பாணன்

பண்பார்க்கும் தமிழ்பாடக் கேட்டேன்; ஆகா!
பருவத்தால் விம்மியெழும் பெண்மை நெஞ்சு
தன்பாட்டிற் பறந்தோடிச் சதங்கை கட்டித்
தாளத்திற் கமைவாக ஆடிற் றம்மா...

இசைவந்த திசைநின்றே இலங்கு நாட்டம்
என்நோக்கில் மோதிற்று-இளமை வேட்கும்
பசிதந்த தப்பார்வை-பாச ஆன்மா
பாய்ந்தோடி ஒன்றிற்று-பரிதி கண்டே

அசைகின்ற கமலத்தை-அனுரா கத்தேன்
அழைக்கின்ற களிவண்டை-அகிலத் தெட்டுத்
திசைகொண்ட வன்னத்தை-ரசிக்கவில்லை
தேனார்க்குந் தமிழ் கேட்டு லயித்துவிட்டேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிபாடி வெறி தந்த காளை மார்பிற்
கண்மூடிக் கிடந்தேனிக் ககன பூதம்
புவியோடு படிகின்ற அடிவானத்தே
பொலிகின்ற தீவொன்றில் - அங்கே மாரன்

ரதியோடு பூப்பந்து மாற்றி யாடி
ராகத்தே னொழுகுகின்ற தமிழிற் பாடி
அவியாத அனுராகங் கூட்டல் கண்டேன்
அடியாளுங் கவிமீது பாசங் கொண்டேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜ பாரதி

## தமிழ்த் தாய்

ஓங்கு புகழ்தாங்கி ஓல்காநற் சொல்வளத்தால்
பாங்குடைய தென்னாட்டைப் பாலிக்கும்-தீங்கனியே
தெய்வத் திருவே, திரியத் தனியுருவே,
துய்ய நலம்பிறளாத் தூமணியே!-வையத்து
மூத்தமொழிக் குடும்பம் முளைத்துக் கிளை தாங்கிக்
காய்த்துக் கனிசொரியக் காரணியாய்-வாய்த்தவளே
என்னம்மா உன்னை எவள்வந் திணைந்தாலும்
தன்னுருவாய் ஆக்குந் தரம்கொண்டு-முன்னாளில்
பாட்டும் உரையும் பரிந்தேற்றப் பாவலர்தம்
ஏட்டில் நடந்த எழில்மாதே-நாட்டுக்குக்
கண்ணாகி வண்ணக் கலை விளக்க மேற்றியிளம்
பெண்ணாயென் றென்றும் பிழையாமல்-மன்னுபுகழ்
கொண்டாய், புயல்கொண்ட கொள்கைசால் 'கூடல்'வளங்
கண்டாய், கலையின் கரைகண்டாய்-பண்டாண்ட
மூவர் புனைந்த முடிகொண்டு மொய்த்த படைக்
காவல் புரிந்த கடிமனையில்-ஏவலராய்
வேற்றுப் புலப்பெண்டிர் வேண்டும் பணியாற்ற
வீற்றிருந்த பேற்றை விழுங்கவருங்-கூற்றாகிப்
போந்த கடல்கோளும் புன்செல்லுங் கூட்டாகச்
சேர்ந்து வதைத்துஞ் செழித்த முகஞ்-சோர்ந்தாயோ...?
இல்லை, என் தாயேஎன் இன்னுயிரே பேராற்றல்
வல்லை! நீ வாழ்ந்து வயங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராஜ பாரதி**

## உள்ளமிசைக்குது காவியம்

முத்தொளி வீசும் முறுவலை-உயர்
முத்தமிழ் பேசும் இதழ்களை-நிறை
சித்திரை மாதத்துப் பூரணை-மதி
சிந்தும் நிலவு நிறத்தினை-ஒளிர்

பத்தரை மாற்றுயர் பொற்சிலை-செய்ய
பட்டுத் துகில்நிற மேனியை-
ஒத்தே இருக்கும் அழகினைக்-கண்டு
உள்ள மிசைக்குது காவியம்!

பாண்டிய ராசனின் வீச்சுவாள்-எறி
பட்டொளி தேங்கு விழிகளை-உளக்
கூண்டை உருவிட வீசுவாய்-தமிழ்க்
கூத்து முறைகளை ஆடுவாய்-என்

வேண்டுதல் ஏற்றிசை பாடுவாய்-கலை
வெள்ளம் மடைதிறந் தோடிட-உயிர்
தாண்டவ மாடுந் தமிழிலே-மனம்
தாவி யிசைக்குது காவியம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலக் கார்முகிற் கூட்டமோ?-என்
நெஞ்சம் புதைந்த பின்னலோ?-உன்
கோலக் கூந்தற் பரப்பிலே-கொடி
குலவு மல்லிகை பூத்திட-பூஞ்

சோலைக் காட்சி வெறுக்குது-கால்
சுற்றி உலவ மறுக்குது-என்
ஆழ நெஞ்செனும் பூங்குயில்-பண்
அயரப் பாடுது காவியம்!

காந்தட் கரங்களை ஆட்டுவாய்-என்
கற்பனைத் தேரைப் பூட்டுவேன்-பின்
தாந்தத் திங்கண தோமென-இணைத்
தாள் சிலம்பொலி கூட்டுவாய்-மற

வேந்தர் காத்த தமிழிலே-இதய
வீணை இசையை மீட்டுவேன்-மலர்
ஆய்ந்து கோத்த செந்தமிழ்-மணி
ஆர மாகுது காவியம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி ஆனந்தன், மட்டக்களப்பு

## மறப்பேனா?

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும்-என்றன்
கட்டுடல் வளைந்து கையால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும்-வாழ்வு

கெட்டு நடுத்தெரு வோடு கிடந்து
கீழ்நிலை யுற்றாலும்- மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ்மகளின் துயர்
துடைக்க மறப்பேனா!

நோயில் இருந்து மயங்கி வளைந்து
நுடங்கி விழுந்தாலும்-ஓலைப்
பாயில் நெளிந்து மரண மடைந்து
பாடையில் ஊர்ந்தாலும்-காட்டுத்

தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும்-என்றன்
தாயில் இனிய தமிழ்மொழியின் துயர்
தாங்க மறப்பேனா?

பட்டமளித்துப் பதவி வணங்கி இருந்தவர்
பக்கம் இழுத்தாலும்-ஆள்வோர்
கட்டி அணைத்தொரு முத்த மளித்துக்
கால்கை பிடித்தாலும்-எனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டு விழுந்து வணங்கி இருந்தவர்
தோழமை கொண்டாலும்-அந்த
வெட்டி மனிதர் உடல்களை மண்மிசை
வீழ்த்த மறப்பேனா?

பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்
பூட்டி வதைத்தாலும்-என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும்-உயிர்

தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும்-ஒரு
செங்களம் ஆடி வரும் புகழோடு
சிரிக்க மறப்பேனா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவற்குழியூர் நடராசன், யாழ்ப்பாணம்

## சிலம்பொலி

கேட்குது மணி ஓசைபோலக்
கிண்கிணீர் என-எனை
வாட்டுதந்த வனிதை காலின்
வளை சிலம்பொலி

அள்ளுதெந்தன் நெஞ்சை-அச்
சிலம்பரற்றலே
கொள்ளுதந்த நூபுரத்தில்
கோடி ஆசைகள்

ஆடும் அந்த அமிழ்தின் நல்ல
ஆரணங்கு அடிக்கு-இசை
பாடு தந்த மங்கை காலிற்
பாத சங்கிலி

கீதம்பாட வல்ல நல்ல
கிண்கிணீயதுன்-செம்
பாதம் சேர என்னடீநீ
பாக்கியம் செய்தாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவன் செய்ய வல்லன் இன்ப
யாழ்த் தமிழ் நங்காய்-இளங்
கோவன் செய்துனக் களித்த
நூற்சிலம்பு போல்?

தங்க மேனித் தமிழ் அணங்கே
தாரணிக் கெழில்-உன்
பொங்கு காலில் மேவும் அந்தப்
பொற் சிலம்படி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ. முருகையன், யாழ்ப்பாணம்**

## இதோ கவிதை!

காரிருள் துண்டு படும்படி பண்பு
கனன்றதொர் இன்கவி தை
காலை மலர்ந்தது போல எழுந்தது;
காண்க: இவன் கவி ஞன்!
கூறிய இன்ப நறும்பதம் என்பன
கொண்டு தமிழ் வனை யக்
கோகில கானம் எனும்படி பண்கள்
குழைந்து விளைந்தமை யால்!

வான விளிம்பு, மரம், புனல், ஆறு,
வளைந்த மதிக்குழ வி
வாவி குளங்கள், மலர்க்கொடி, ஆழி,
மடங்கி எழும் நுரை கள்,
மோன வரம்பிவை எங்கும் அலைந்து
முடிந்த அவ்வெல்லையி லே
மூளும் அருங்கவி நாளும் மனங்களின்
மோகனம் என்பத னால்!

'போன பழம்வழி போக இருந்தது
போக விட்டேன்' என வே
புத்துணர் வொன்றறி வித்தமை யால்எழில்
பெற்ற தமிழ்க்கவி தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனை வெலும்படி செய்தவன் ஆவி
திறந்து தமிழ் பிழி வான்
சீரிய வாசகஃ வீரியம் எங்கள்
சிரத்தை நிமிர்த்திய தால்!

காவியம் என்பவை நீள்புவி கண்டது;
காலநெடுங்கன வின்
காரண காரியம் ஊடுரு வும் கவி
காசினி கொண்டது; பொன்
ஓவியம் என்று புகழ்ந்திடு மாறும்
உயர்ந்தன சொல்லிணை கள்,
ஓசையி லேசுதி பேசிய பாடல்
ஒழுங்கு பிறந்தமை யால்!

நாடு, நறுந்தமிழ், ஞான விருந்துகள்
நாளும் நடந்தவை கள்,
நாவில் இருந்த அவ் வாணி மொழிந்தவை,
நாத நயந்திகழ் சீர்
வீடி தெனும்படி மேய செழுங்கவி
வீறு சிறந்தமை யால்,
வேக மிகுந்து கனிந்த பதங்களில்
வீரம் இருந்தமை யால்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. வேந்தனார், யாழ்ப்பாணம்**

## கவிஞன்

பாடுகின்றோர் எல்லோருங் கவிஞ ரல்லர்
பாட்டென் றால் பண்டிதர்க்கே உரிமை யல்ல
ஓடுகின்ற பெருவெள்ளம் பெருக்கே போல
உணர்ச்சியிலே ஊற்றெடுத்த ஒளியால் ஓங்கி
வாடுகின்ற மக்களினம் மாட்சி கொள்ள
மறுமலர்ச்சிப் பெருவாழ்வை வழங்கு மாற்றல்
கூடுகின்ற கொள்கையினால் எழுச்சி கொண்டு
குமுறுகின்ற கோளரியே கவிஞ னாவான்!

பஞ்சணையில் வீற்றிருந்து பனுவல் பார்த்துப்
பாடுகின்ற கவிதைகளும் பாரான்: வேந்தர்க்
கஞ்சியவர் ஆணைவழி அடங்கி நின்றே
ஆக்குகின்ற கவிதைகளும் அழிந்து போகும்
கஞ்சியின்றிக் கந்தை சுற்றி வாழ்வா னேனுங்
கனல்வீசி எரிமலைதீக் கக்கல் போலே
விஞ்சுகின்ற சிந்தனையால் விழுங்கப் பட்டு
விருந்தளிக்கும் விரலோனே கவிஞனாவான்

கற்கண்டே செழுந்தேனே கனியே யென்று
கலகலப்பாய்ச் சுவைப் பெயர்கள் கலந்து நல்ல
சொற்கொண்டு சொல்கின்ற கவிதை யெல்லாஞ்
சொன்னவர்க் குத் தெரியாமல் தொலைந்து போகும்;
விற்கொண்டு விடும்வீரன் அம்புபோல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசைகூடும் அறிவுப்போர் வீறு தாங்கித்
தற்கொண்ட புலமைவெறிச் சொல்லாற் சான்றோர்
சாற்றுகின்ற கவிதையென் றுஞ் சாத லில்லை.

அம்மானை திருப்பள்ளி எழுச்சி கோவை
அந்தாதிக் கலம்பகங்கள் பார்த்துப் பார்த்து
விம்மாமற் பொருமாமற் கண்ணீர் விட்டு
விலைக்குமா ரடிக்கின்ற மெல்லியர்போல்
சும்மாயோர் உணர்வின்றிச் சொற்கள் சேர்த்துச்
சொன்மாலை தொடுகின்றோர் கவிஞ ரல்லர்;
தன்மானத் துள்ளொளியால் உலகை ஓம்புந்
தனியாற்றல் தாங்கி நிற்போர் கவிஞ ராவார்!

பாட்டினுக்கோர் புலவனென்றே தமிழ்நா டெங்கும்
பாராட்டும் பாரதியின் கவிதை ஆற்றல்
நாட்டிற்காம் விடுதலைப்போர் வெறியை ஊட்டி
நற்றமிழ்க்கும் மறுமலர்ச்சி நல்கக் கண்டோம்:
வீட்டிற்குள் வீற்றிருந்தே கொள்கை யின்றி
விண்ணப்பப் பதிகங்கள் விளம்பு வோரை
ஏட்டிற்குள் கவிஞரென எழுதி னாலும்
இறவாத கவிஞரையே உலகம் ஏற்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பரமஹம்ஸதாசன்" மலையகம்

## விண்ணமுதம் தருவாள்!

புத்திள ஞாயிறு
சித்திர வான்மிசைப்
பூத்துக் குலுங்கையிலே, -இருள்
வேர்த்துக் கலங்கையிலே, -அன்புப்
பித்துப் பிடித்தவென்
சித்தக் கடலிடைப்
பேரின்பப் பெண்வருவாள்-அருட்
சீர்கவிக் கண்தருவாள்!

மாலைப் பொழுதினில்
நீலக் கடல், அடி
வானைத் தழுவையிலே, -அலை
வீணை ஒலிக்கையிலே, -இன்பக்
கோலக் குமரிநற்
காலெடுத் தென்மனக்
கோயிலி லேபுகுவாள்-கவித்
தூயமலர் வாய்ங்குவாள்!

தங்கச் சுடர்மதி
பொங்கிக் கடல்மிசைத்
தாவி வருகையிலே, -எழிற்
காவும் மலர்கையிலே, -என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம் சிலிர்த்திட
மங்கலப் பெண்ணெனும்
ஆரமு தம்வருவாள்,-கவிப்
பேரமு தம்தருவாள்!

விண்மிசைத் தாரகைக்
கன்னியர் கண்வலை
வீசி நடக்கையிலே,-கதை
பேசிச் சிரிக்கையிலே,-
என்மனச் சோலையில்
பொன்மயி லொன்றுவந்
தின்ப நடம்புரிவாள்,-அவள்
அன்புக் கனிதருவாள்!

தீந்தமிழ்ச் சோலையிற்
போந்தொரு வேளையிற்
சிந்தை திளைக்கையிலே-மலர்க்
கந்தம் சுலைக்கையிலே-எழிற்
காந்த முறுவலை
ஏந்திச் சுடர்க்கவிக்
கன்னியென் முன்வருவாள்,-தூய
விண்ணமு தம்தருவாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. நாகராஜன், யாழ்ப்பாணம்

## புகாரைக் கண்டு வாழ்வோம்

முன்னைய மொழிகட் கெல்லாம்
மூத்துப்பேர் முதிர்ச்சியுற்றுப்
பின்னைய மொழிகட் கெல்லாம்
பிறப்பிடம் அருளிப் பேணி
இன்னிலத் திளமை குன்றா
எழிலுடன் இலங்கு மென்றன்
அன்னையே தமிழே அன்பாய்
அகத்திருந் தருள்க நன்றே!

பண்டுலகில் பண்பினிலே பழுந்துப் பாங்கிற்
பக்குவத்தில் மூத்ததமிழ் முந்தை யோரைக்
கண்டுவரக் காதலுற்றேன் கால ஆற்றைக்
கடக்கவழி காட்டவல்லார் எவருமில்லை
வண்டியதன் சகடமென நாட்களோடி
மாறிப்பின் மாதமென வளர்ந்தும் உள்ளம்
கொண்டபெரும் ஆவலது குன்றா தென்றும்
குறியதனை அறிவுநெறி தேடலானேன்.

தேடிப்பல் லாண்டாகத் தெளிவே யின்றிச்
சித்தமது சோர்வுற்றே இருந்த காலை
பீடமைந்த சிலம்பென்ற ஏட்டைக் கண்டேன்
பெற்றிமையும் நற்றிறனும் பொருந்தச் சோழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடதனில் காவிரிப்பூம் பட்டி னத்தே
நல்லியலார் நம்தமிழர் வாழும் செய்தி
வீடதனை நாடதனை மறக்கச் செய்ய
விண்முகிலைத் துணைகொண்டு விரையலானேன்.

படர்ந்துவிரி பாரகத்தே பரமன் பாதம்
பற்றவுளம் உற்றதனால் பக்தி யோடு
திடமொன்று சித்தனென உயர்ந்து கொண்டல்
திரைசூடி எழில்காட்டும் சிறப்புப் பெற்ற
குடமலையைக் கண்டதனின் சென்னி மீது
குந்தியுள வேலையிலே தமிழ்ப்பாப் பாடி
நடமாடி ஒரு நதிப் பெண் ஒயிலாய்ப் பாய்ந்து
நடக்கின் றாள் அவளுடனே தொடர லானேன்.

காவிரியாம் அவள்பெயரும் அவள்கால் பற்றிக்
காடுமலை கழனியுடன் கவினார் ஏரி
பூவிரிந்த காவுமுயர் புன்னை தென்னை
பொலிதோப்புப் பல கண்டு புதுமை பூக்கத்
தாவியவள் செல்லுகிற திசையைச் சார்ந்து
தயங்காது நடக்கின்றேன் அந்தப் பெண்ணும்
ஆவியுடன் ஆகமதை உவந்தே ஈந்தாங்
காழியெனும் தேவனுடன் ஒன்று பட்டாள்.

காவிரியும் கடலுமொன்று கரையில் நெஞ்சைக்
கவர்ந்துகவின் காட்டுவதாய்க் கலைகள் மேவி
பூவினிலே பொலியும்பூம் புகாரை, மேன்மை
பூத்தொளிரும் சீரமைந்த தமிழர் தம்மை,
நாவினிக்க நெஞ்சினிக்கச் சங்கங் காத்த
நாடகமும் இயலிசையும் சிறப்புற் றோங்கப்
பாவினிக்க இளங்கோவன் செய்த பெற்றிப்
பாங்கமைய வாழுகிற சிறப்புக் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்குற் கனகன் கருங்கல்லாய்க்
கனத்துக் கறுத்துக் காசினியில்
எங்கும் மறைக்கத் தேய்ந்துள்ள
இந்தப் பிறையும் வானகத்தே
தொங்கும் மீனும் துலக்காது
தோல்வி காணச் செங்கதிரோன்
சிங்கக் குருளை எனச்சிலிர்த்தான்
திசைகள் யாவும் தெளிந்தனவே.

அத்தன் புகழை அலைபாட
அமைப்பார் வெண்மைச் சங்கினங்கள்
முத்துச் சிந்தி முறுவலிக்க
முருகார் வங்கம் பலகடலில்
தத்தித் தவழ்ந்து தமிழ்நாட்டின்
தகைமை காணும் காலினால்
பித்துப் பிடித்து வரும்பெற்றி
பிறங்கும் பெருமை நிலைகண்டேன்.

சீனப் பட்டும் சாவகத்தின்
சீரும் ஈழ நாட்டினிலே
ஆன உணவுத் தானியங்கள்
அரபு வாசி யுடன்கரையில்
ஊனம் இல்லா உரோமுடன்சீர்
உயர்நத கிரேக்கர் கடாரத்தார்
ஞானம் பயில நம்மவர்க்கு
நயந்தீ பண்டம் குவிந்திருக்கும்.

பூவார் பொழிலில் புள்ளினங்கள்
புதுமை கொண்டே பொலி தமிழில்
பாவைப் பாடிப் பறக்கவுயர்
பரமன் பாதம் பணிபவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவா ரத்தின் தெளிவொலியும்
சீலத் தெய்வ நெறிகாட்டும்
கோவில் மணியும் கூடியருள்
கொள்ளும் குரலாய் நிதமொலிக்கும்

ஏரால் நிலத்தை உழுதுவிதை
எங்கும் தூவக் காவேரி
நீரைக் கொடுத்து நிதம்பேண
நெல்லு மணியும் நிறைவுற்றுப்
பாரின் பசியைப் போக்கிடவே
பாங்கார் இன்பம் பரிமளித்துச்
சீரும் திருவும் சிறத்தவைக்கும்
திறனார் தமிழர் நிலைகண்டேன்.

விரிந்த பண்பு மனத்தாலே
வேடன் புறாவிற் காயுடலை
அரிந்து கொடுத்த அருட்சிபியும்
ஆன்றோர் அறத்துக் கமைந்து கன்றைப்
பிரிந்து ஆவின் துயர்கண்டு
பிள்ளை மார்பில் தேரூர்ந்து
திரியாச் செங்கோல் நெறிமனுவும்
சிறந்து வாழ்ந்த திருநகரம்.

முன்னோர் மரபின் முருகமைய
முறைமை பேணும் மன்னவரின்
வன்ன மாடி மதிலகழி
மறையோர் மனைகள் வணிகர்களின்
பொன்னார் கூடம் பூவதனைப்
புரக்கும் ஏரார் காராளர்
துன்னிட வதியும் இருக்கைகளும்
துலங்கும் தூய நகர்கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தம் சமணம் சைவமுடன்
புனித தெய்வ நெறியதனை
நித்தம் காக்கும் விகாரைகளும்
நேரார் சமணப் பள்ளிகளும்
அத்தன் கோவில் உடன்மைந்தே
ஆன்ம உணர்வில் சிறந்தமக்கள்
சித்தம் போல நிறைவுற்றுச்
சீராய் இலங்கும் அவ்வூரில்

பொய்யர் இல்லை புனைசுருட்டுப்
புகலும் புல்லர் இலையெங்கும்
செய்ய சீலம் பேணுமருட்
செல்வர் சிறந்த சீராளர்
பொய்யா மொழியால் வள்ளுவனால்
பூவிற் கீந்த திருக்குறளின்
மெய்யின் வழியே மேவி நிற்போர்
விளங்கும் மேன்மை கொள் நகரம்.

நெய்தல் மருதம் முருகுமுல்லை
நிமிர்ந்த குறிஞ்சி நிலத்தோர்கள்
செய்ய மரபின் சீர்மையினைத்
தினமும் பேணி ஓம்புவதால்
பொன்தீர் வாழ்வு பொலிவுற்றுப்
பூரிப் புடனே பல வழியில்
உய்தார் அந்த ஊரிலுள்ள
உண்மைத் தமிழர் எனவுணர்ந்தேன்.

கற்புச் செல்வி கண்ணகியை,
கலையார் செல்வி மாதவியை,
பொற்புப் பொருள்சொல் புலவோரைப்
பொன்றா நீதி புகல்வோரைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பத் திறனைச் செய்வினையின்
சீரை வேற்று நாட்டினைச் சேர்
விற்பத் துவத்தில் மிளிர்பவரை
மேவிப் பொலியும் அந்நகரம்.

ஊரில் விளையும் தானியங்கள்
உப்போ டிறைச்சி மீன் வகைகள்
ஏரார் இஞ்சி இலவங்கம்
ஏலங் களாதி கிராம்பிவற்றை
சீராய் விலையைச் செப்பியதில்
சிறிதே இலாபம் சேர்த்து நெறி
நேர்கொள் நாளங் காடியிலே
நித்தம் விற்கும் ஒலிகேட்டேன்.

பட்டினப் பாக்க முடன்மருவூர்ப்
பாக்கம் சுற்றிப் பார்வையிடக்
கட்டில் லாத காலமது
கழியக் கதிரோன் மேல்வானத்
தொட்டில் மீது துயில்பயிலத்
தொடங்கச் சுற்றி வளையிருளை
வெட்டி வீழ்த்தி வீதியெங்கும்
விளங்கிற் றுயர்ந்த விளக்கினங்கள்.

பரதே சத்துப் பட்டுடன்நல்
பாங்கார் மணிகள் யாவுமுயர்
நிரையாய் வைத்து நெஞ்சத்தின்
நேர்மை நிலைக்கும் வகையினில்மெய்
உரைசெய் தல்லங் காடியிலே
விற்போ ரோதை கடற்கரையில்
இரையும் அலையை அடக்கியங்கே
எழுந்தே இரவைப் பகலாக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவின் கரிய திரையகல
எங்கும் பொன்னார் சுடரதனைப்
பரவிப் பாங்காய்ப் பரிதியுமே
பாரைப் புரக்கக் கீழ்வானில்
வரவே கோழி கூவிடப்பேர்
வாவல் கூகை மறைவிடத்தை
மருவ மக்கள் உயிரினங்கள்
மகிழும் இன்பம் தொடருமங்கே.

நிறைவுற்ற நெஞ்சத்தால் பூரிப் புற்று
நேரார்ந்த காவேரி வழியோ டேகி
பொறையுள்ள குடமலையில் பொருந்தி நின்றேன்
பூவலஞ்செய் கொண்டலெனைக் கண்டு தூக்கி
கறையுற்றுக் குறையுற்றுக் கவினார் பண்டைக்
காலத்தின் புகழுக்கே இழுக்குண்டாக்கிச்
சிறையுற்ற வாழ்வினையே மீண்டும் கொள்ளச்
சிலம்புக்கு முன்னென்னை நிறுத்திற் றாமே...

கற்பனையா? நான் கண்ட காட்சி யாவும்
காலத்தின் விஞ்ஞானப் புதுமை யாமோ?
பொற்புறுநல் தமிழ்களின் வாழ்வே பாரில்
பொலிவுற்ற தென்றுமேல் நாட்டார் இன்று
அற்புதமாய் ஆராய்ந்தே அறைந்தார்: ஆனால்
அந்தவுண்மை அறியாதிங் கழிந்தோம் மீண்டும்!
நற்புலவோர் காட்டும்பூம் புகாரைக் கண்டு
நாம்தமிழர் என்றுளத்தில் கொண்டு வாழ்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

வி. கந்தவனம், யாழ்ப்பாணம்

## நான் பிறந்ததும் ஏதுக்கே!

பிறந்ததும் மிகக் கற்றதும் பெரும்
பீடுகொள் கவி பாடவே
சிறந்து செந் தமிழ்ப் பண்பினைப் புவி
தேர்ந்து போற்றுதல் செய்யவே
செறிந்துவா ழினும் பருந்துபோ லவே
பறந்து மானிடர் தன்மைகள்
அறிந்துதக் கவை கறந்துமக் களுக்
கான பாட்டுகள் பாடவே!

நிலவுசெய் யணி வகைமிகுந் தெழும்
நேர்த்தி யான கலைகளார்
கொலுவிலே திகழ் கோனெனப் புகழ்
கொள்ளு மோர் பொருள் வல்லதாய்ப்
பொலிவுடன் பெரும் பொறுப்புடன் சுவை
பொங்கி யெப்பொழு துந்தரும்
நலம் விளை கவி நல்கிடா விடில்
நான் பிறந்தாலும் ஏதுக்கே!

கூச்சலில் வெளிப் பூச்சினிற் களி
கொள்ளுவார் குறிக் கோளிலார்
மூச்சிலார் ஒரு பேச்சிலார் தனி
முத்திரை வரப் பெற்றிலார்
காய்ச்சிரும் பினை வைப்பினும் மரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டை போலுணர் வொன்றிலார்
கூச்சமுற்றுக்கு டங்கியே திறன்
கொண்டு மோர்புகழ் கண்டிடார்-

யாவரும் விழித் தேயெழுந் துணர்ந்
தான்ற வல்லவ ராகியே
மேவுநற் பணி செய்துநம் மவர்
மேன்மை நாற்றிசை யுள்ளவர்
நாவிலே நட மாடவைத் திடும்
ஞாலம் வென்றுநி லைத்திடும்
பாவினா லுல காண்டிலே னெனில்
பாரி லெய்திய தேதுக்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. சடாட்சரன், மட்டக்களப்பு

## தமிழ்த்தாய் வணக்கம்

செந்தமிழ் வாழியவே-செகமெலாம் செழித்து
செந்தமிழ் வாழியவே-எங்கள்
செந்தமிழ் வாழியவே...
சங்கப் புலவர்கள் சபையில் வளர்ந்து,
சமயத் தலைவர்கள் அன்பில் உயர்ந்து,
கம்ப நாடனின் கவியில் மலர்ந்து,
கன்னல் சுவையை அள்ளிச் சொரியும்...
செந்தமிழ் வாழியவே...

பாரதி துணிவால் பயங்கள் அகல
பாரதி தாசனால் வீரம் நிறைய...
ஈழ நாட்டவர் எழில்பல சேர்ந்திட
இளமையோ டென்றும் இன்பம் சொரியும்...
செந்தமிழ் வாழியவே...

இருபதாம் நூற்றாண் டெழுத்தாளர் சிலர்
இனிய அணிகள் இதயத்தால் சேர்க்க,
குறைவிலா தினிய குளிர் சொரி நிலவே...
கூடலால் வாழும் முத்தமிழ்க் குமரி...
பாரெலாம் தோன்றும் துறைகளை ஆளும்,
பயனுள இயலெலாம் வெற்றியை நாட்டும்,
பாரோர் விரும்பி ஆராய்ந் துவக்கும்,
பன்னெடுங் காலம் இளமையோ டிருக்கும்...
செநதமிழ் வாழியவே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே. குமாரசாமி, யாழ்ப்பாணம்

## பிரம்மாக்கள்

புதிய தான உலகம் அமைக்கவும்
பூரணச்சுட ரேற்றி மகிழவும்
விதி யனைத்தையும் மாற்றித் திருப்பிஎம்
வேக ஞான விளைநில மேடையில்
மதியினாலுயர் மானிட மேதைகள்
மல்க வுங்கொடு மைக்கனல் தீயவும்
சதியி லூடுந் திறமுட னே எழுந்
தகைமை வாய்ந்தவர் நாம்புதுச் சிற்பிகள்!

எழுதுகோல் அவை எங்கள் கலப்பைகள்
எடுத்த தாள்உள தங்க விளைநிலம்
பழுதி லாதம திக்கொழுப் பூட்டிஇப்
பார் சிறப்புற நாளுமுழுதெழும்
புழுதி யூடும் பொதுமை விளைமணிப்
பொற்றி ரளஅறி வாகிய நல்விதை
முழுதும் வையகம் முற்றம் பரப்பிடும்
மூச்சு மிக்கவர் நாம்புதுச் சிற்பிகள்!

சொற்க ளைப்பிழி வோமதிற் கற்பனைச்
சுளைக ளைப்பொதி வோமறி வற்புத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்சு வைவிளை வாசகத் தேனையும்
　　　நறும ணங்கமழ் சாற்றையுத மேகலந்
தொற்றி நன்மை யுணவைச் சமைந்திடும்
　　　ஒப்பில் லாத அறிவு செறிப்பவர்
வெற்றி பெற்றெழ யாவரு முண்ணயாம்
　　　விருப்பு டன்வழங் குங்கொடைச் சிற்பிகள்!

சத்தி யம்நற்ச மத்துவம் நன்னெறி
　　　தலையெடுத்து நடந்து துடிப்புடன்
தத்து வத்தினை யொற்றிய பாதையில்
　　　தனித்து நின்றுல கின்புறத் தாயென
ஒத்து ழைத்துயர் ஓவியப் பிஞ்சுகள்
　　　ஊர்தொ றும்பல வோங்கி, வளர்ந்தெழச்
சித்து வித்தை எழுத்திற் செலுத்தியே
　　　சீர் பெருக்கிடும் யாம்பிரம் மாக்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலைமதி சந்திரசேகரன்**

## கயல்மீன்

வட்டமுகம் மின்மினியோ என்றேன் அந்த
வானத்துத் தாரகையா? மதியமென்றாள்
தொட்டவுடன் ஒடியுமின்னல் இடையோயென்றேன்
தோன்றிப்பின் மறைவேனோ? மழை நானென்றாள்
கட்டழகி உன் விழிகள் கயல் மீனென்றேன்
கானகத்து மான்விழிகள் போங்களென்றாள்
இட்டமுடன் இராமனுயிர் 'சீதா' என்றேன்
ஏனத்தான்? இராவணனா கவர்ந்தா னென்றாள்

கற்பினுக்கே கண்ணகி நீ உறுதியென்றேன்
கணவனுயிர் காத்த பலர் உண்டேயென்றாள்
நற்பண்பால் வாசுகிக்கே நிகர் நீ யென்றேன்
நாயகரே மாதவியும் உயர்ந்தாளென்றாள்
வெற்றிமகள் வீரத்தாய் நீதா னென்றேன்
வேடிக்கை கலைமணக்கும் வாலை யென்றாள்
ஒற்றுமையில் ரோஜாவின் கன்னமென்றேன்
ஒறுக்காது ஒப்பொன்றே பவளம் என்றாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையொன்றே போதுமடி அன்னமென்றேன்
நானெதற்கு நீரோடு கலக்க வென்றாள்
புடைபோட்ட தங்கமடி மேனியென்றேன்
பூமித்தாய் தந்தாளே மறந்தீரென்றாள்
தடையில்லை கண்ணே, எழில் கமலமென்றேன்
தன்னொருகால் இழந்து நிற்க விதியோ என்றாள்
விடைகொடடி என்னன்பே தமிழ் நீயென்றேன்
வீங்கிவரும் மார்போடு அணைத்தாள் என்னை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுநகர் முத்தழகு

### தமிழமுதம்

கிழக்கினிலே செங்கதிரோன் கண்விழிக்க
கரம்விரித்தே பறவைகளும் வாழ்த்திசைக்க
உழவர்களின் மலைத்தோளில் கலப்பைதொங்க;
உத்தமர்கள் மனம்போலே கதிர்வணங்க:
சுட்டெரித்த பகலவனும் பாய்விரிக்க;
சேர்ந்துசென்ற பசுவினங்கள் ஊர்ந்தசைய;
மட்டுநகர் வாவியிலே பல்லிசையால்
மீன்பாடும் மெல்லிசையில் மனம்மயங்கும்;

வட்டநிலா பாலில்மூழ்கிப் பள்ளியெழ
வரவேற்கும் காதலலை துள்ளியதன்
பொட்டுமலர்த் தேனிதழைத் தொட்டணைக்க;
பெற்றெடுத்த ஆழ்கடலும் ஆசிநல்க;
நடுநிசியின் அமைதியென்றே ஊர்உறங்க;
நடுவானில் நிலவுப்பெண் தேர்உறங்க;
விடுதியிலே விருந்தருந்தத் திங்கள்வரும்;
வீணையிசைத் தாலாட்டில் 'தென்றல்வரும்'!

மடியினிலே! மழலைமொழித் தேன்குடிக்கும்
மாதாவின் அணைப்பில் முத்த மழைதுளிக்கும்
பாடுகின்ற குயிலினத்தின் குரலினிக்கும்
பார்த்திருக்கும் மயிலினத்தின் காதினிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்சிலிர்க்கும் ஆட்டமதில் இயலுதிரும்:
மெய்ம்மறந்து நிற்பதிலே நிலம்குளிரும்:
கையொலிக்கும் ஓசையிலே சங்கொலிக்கும்:
காற்றடித்து ஓய்ந்ததுபோல் முத்துதிரும்!
யாழ்நூலைத் தந்தவரின் ஊர்விரியும்
யோதியொளிக் கதிர்பரப்பும் நிலத்தினிலே!

தமிழகத்தில் மண்வளத்தைக் தந்துவாழும்
திருமுருகப் பெயரணிந்த எம்மவரும்
வில்லெடுத்துத் தமிழ்வளர்க்கும் நம்மவரும்
வித்தகரின் விழியொளியில் வாழ்பவரும்
நெல்லெடுத்து உயிர்காத்த படையினரும்
நீதிநெறிச் செல்வர்களின் குரலொலியும்
வில்லெறிந்த விசயனவன் காதில்கீதை
வீரத்தின் வேலாகத் தைத்ததுபோல
சொல்லெறிந்து தமிழமுதைத் தாய்மைக் கீந்த
செந்தமிழன் காவலரே நீடுவாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன எழுச்சிக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி ஆனந்தன், மட்டக்களப்பு

## நெருப்புப் பழம்

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!
அன்னைத் தமிழ் ஈழம்
என்றன் உயிர்த்தாயகம்
தன்னை எவன் தொட்டான்?
தமிழா எழுக! என
மின்னை இடியைப்
புயலைத் தமிழ்செய்தேன்...
என்னைக் கொடுங்கவிஞன்
என்றார் சிறையிட்டார்...
நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!

ஓங்கு நெடுமதில்கள்
உள்ளே இருட்கோலம்
தாங்க முடியா நோய்
தாகம் பசிக்கொடுமை
தீங்கு படைக்கும்
கொடியர் சிறைக்கோட்டம்
ஏங்கி ஒ ருதமிழன்
இங்கு மடிகின்றேன்...
நெருப்பு பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னே இவ்வையம்!
எனைப்போல் ஒரு மனிதன்
மண்ணாள இங்கே
வளைந்துயான் அம்மனிதன்
சொன்னபடி கைகள்
கட்டித் தொழும்பியற்றும்
பொண்ணைப் பயலானேன்...
போதும்! இது போதும்!
நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!

வானில் கிளி பறக்கும்
வண்ணக் கொடிமுல்லை
தான் நினைந்த பக்கம்
தழுவிப் படர்ந்திருக்கும்
மாநிலத்தே யான்
அட! இம் மதில் நடுவில்
ஏனிப்படி இருந்தேன்?
என்ன பிழை செய்தேன்?
நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!

பட்டு நிலா வான்
மிசை எழப் பாரெங்கும்
கொட்டு முழவிசையில்
கூத்தாட வையத்தின்
எட்டுத் திசையும்
மகிழத் தமிழன்யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

163438
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



மட்டும் துயர் தாங்கி
மாளப் பிறந்தேனா
நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

"நானோ அடிமை?"
என நா விளிக்கிறது!
கூனோ டிருக்கும்
உடலம் கொதிக்கிறது!
தேனோ மரணம்
என் நெஞ் சொலிக்கிறது!
ஏனோ விழியில்
இரத்தம் பனிக்கிறது
நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிக்கிறது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காசி ஆனந்தன்**

## தமிழச்சி

இலங்கை மலைதனிலே... தமிழச்சி!
என்ன துயரெலாம் காணுகின்றாயடி!
முழங்கை வலித்திடவே தேயிலை
முளைகள் பறித்து முகம் சிவப்பாயம்மா
விலங்கும் உறங்கிநிற்கும் சாமத்தில்
விழித்து நெடுமலை ஏறி இறங்குவாய்!
பழங்கள் பழுத்திடாதோ உன் காலில்?
பச்சைக் குருதிநீர் பாயாதோ கண்மணி?

காலைப் பனிநனைவாய்! என்னம்மா...
காய்ந்து நடுவெயில் தனிலே கருகுவாய்;
பாலை நினைந்தழுவான் உன் பிள்ளை...
பாவி வெறும்முலை நினைந்தழுவாயடி!
ஏழை அடிமையடி தமிழச்சி!
இங்கோர் தமிழுடல் ஏனெடுத்தாயம்மா?
ஊழை நினைந்தழவோ? தமிழனின்
உரிமை இலாநிலை எண்ணி அழவோடி?

காட்டு மலைதனிலே... தமிழச்சி!
காலம் முழுவதும் நீ உழைத்தென்னடி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டைக் குடிசையொன்றும் வாழ்விலே
ஓயா வறுமையும் நோயும் இவையன்றி
தேட்டம் எது படைத்தாய்? அடி ஒரு
செம்புப் பணமேனும் தேறிய துண்டோடி?
நாட்டின் முதுகெலும்பே தமிழச்சி!
நானிலம் வாழநீ மாள்வதோ அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகாகவி, யாழ்ப்பாணம்**

## பாதி நாடெங்களுக்காக என்று எழுகவே!

ஆண்ட வெள்ளையர்கள் நேர் அறவறி தவறினார்
அசடருக் கழகியை அடகு வைத்தனர்: இப்
பூண்டுகள் தமிழை யோர் புறமொதுக்கிடுகிறார்
பொலி வழிந்தவள் தரைப் புழுதியிற் புரள்கிறாள்
மூண்டெழுந்திடுக போர் முதுமொழிக்குரிமைகள்
முழுமையும் பெறுக; இன்றேல் முடிந்தொழிக; இந்
நீண்ட நெல் வயல் நிலம் நினது காண் தமிழனே
நிசமடா நினது தோள் வலியும் நின் புகழுமே!

மாற்றலர் ஆட்சியின் மதுவையுண் டரசியல்
மறைமறந்தெமை வெறு மடையரே எனநினைந்(து)
ஆற்ற வந்தவைகளை யார் பொறுத்திடுவரே?
அரிவரிச் சிறுவரும் அடவிடென்றெழுகவே!
காற்சிலம்பலற வெங்கனல் விழிச் சிதற, ஆ
கடையர் கை இடை உடைகளைய நின்றலைபவள்
பாற் சுரந்தெமதுயிர் காத்தவள்-பல்கலை
பயில வைத் துயர் வளித்தவள் பழந்தமிழடா!

நாவிழந் துணவிடும் நதிகள் வந்துதவிடும்
நாடு தான் எதிரிபால் நழுவவும் நலிகிறாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவி நொந்தழுகிறாள் அன்னை செந்தமிழடா
அவனை ஒரு சரி ஆசனத்தமர வை!
கூவுநம் இளைஞரைக்; கொடுமையர் படையினால்
குலைவுறக் கூடுமோ, குமுறிடும் மற உளம்?
சாவரின் மகிழ்க! நம் சந்ததிக் கெமதுமுற்
றந்தைதந்தையர் தந்ததைத் தருவதெம் கடனடா!

வெடி வெடித்திடில் எதிர் வீழ்க; நாம் வாழ அவ்
விலை கொடுத்திடல் தகும்; வீணரோ எங்களைக்
குடி எழுப்பவும், அயற் கடலிடைத் தள்ளவும்
குறி எடுத்திடுபவர்? கொடுபதில்? கொடிய கோல்
கடகடத் தரசினர் கவிழ வைத்திடு;
விதிகளை உடைத்திடுகவே-வரி மறுத்திடுக! பார்
விடியலுற்றது சமர் தொடுவதற் கெழவு முன்
வெலவெலத் தொழியுது-விசையொடித் திழிபகை!

கறையிலாத் தமிழ் தெருக்கணிகை மாதென வெறிக்
கயவரின் தயவிலாக் காலிடைப்படுவதா?
முறையிலா வழிகளில் முரடர் எம்
முடிவையே முயல, நாம் மூடியோர் மூலையில் துயில்வதா?
பறையெலாம் அதிர்க! நம் பலமெலாம் திரள்கவே!
பாதி நாடெங்களுக்காக வென்றெழுகவே!
அறமெலாம் ஒரு கறைப்படின் அவர் வெல்லுதல்
அணுப்பிளந் தெறியினும் ஆவதொன் றல்லவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ. முருகையன்**

## வாயடைத்துப் போனோம்!

'ஏன் நண்பா, மௌனம் எதற்கு?'
என்று கேட்டிருந்தாய்.
வாயடைத்துப் போனோம்;
வராதாம் ஒரு சொல்லும்.
'திக்' கென்ற மோதல்-
திடுக்கிட்டுப் போனோமே!
பொய் வதந்திக் கொள்ளி
பொசுக்கென்று போய்ப்பற்ற

ஏற்ற வகையில்
இதமான நச்செண்ணெய்
ஊற்றி
அதில் ஊற வைத்த உள்ளங்கள் இல்லாமல்
இத்தனை தீய எரிவு நடைபெறுமா?
எத்தனை தீய எரிவு-தலையுடைப்பு,
குத்து வெட்டு, பாயும் குருதிக் குளிப்பாட்டு?
சற்று முன்னர் மட்டும் சகஜமாய்ச் சாதுவாய்ப்
பேசி இருந்த பிராணி
சடக்கென்று
வாரை இடுப்பாற் கழற்றி,
மனங்கூசாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கி விளாச ஒருப்பட்ட சிந்தையதாய்
மாறிவிட்ட விந்தை மருமம் என்ன?
சுர்ரென்று
சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?

கொள்ளை, திருட்டு, கொலைகள், கடையுடைப்பு,
பிள்ளை அரிவு, பிடுங்கல், வதை
புரிந்து
சீறி எதிர்த்து செயலின் கருத்தென்ன?
ஒன்றும் எமக்குச் சரியாய் விளங்கவில்லை.
'திக்' கென்ற மோதல்-திடுக்கிட்டுப் போனோம் நாம்,
வாயடைத்துப் போனோம்;
வராதாம் ஒரு சொல்லும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருமிள் சிவராம், திருகோணமலை

## கடல் நடுவே ஒரு களம்

கடல்களைத் தாண்டிக் கேட்கிறது
வீறிட்ட சிசுக்குரல்
காப்புடைந்த பெண்ணின் கதறல்
கனன்றெரியும் வீட்டின் குமுறல்.

சமரசப் பேச்சின் அலங்கார வளைவுக்குள்
எதிரெதிர் இனத்து மகனும் மகளும்
முகூர்த்த வேளையில்
சிரசறுபட்டு அலறிவிழும் ரணகளம்!

இனம் மொழி மதம் என்று
ஊர்வலம் எடுத்த
மூளையின் தாதுக்கள் மோதி
சங்கமம் பிறழ்ந்து
சிக்கெடுத்தது முடிச்சு.

முடிச்சு இனி
வேஷ்டிக்கும் முந்தானைக்குமல்ல;
முஷ்டிக்கும் பொறிவில்லுக்கும்!
அமைதியின் அநுஷ்டானங்களும்
ஆரவாரம் ஒடுங்கி ஸ்தம்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லும் உருகி
அலையெடுக்கிறது
எரிமலைப் பிழம்பு!
மரணம் மட்டுமே என்றபின்
மரணம்தான் என்ன?
அழிவது உடலின்
கற்பூர நிர்தத்துவம்;
அழியாததுவோ உயிரின்
ஆரத்திச் சுடர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. சச்சிதானந்தன், யாழ்ப்பாணம்**

## வாழ்வாம் மலையில் ஏறும் வீரன்

மலையோ நெடிது வழியோ தொலைவென்
றஞ்சாதே வீரா!
பலவாய் வருதே பலமோ இலையென்
றோயாதே வீரா!
'தலைமேல் வரட்டும், தனியே சுமப்பன்' என்
றெழுவாய் வீரா!

எதிரே புயலும் இடியும் மழையும்
தாக்கித் தள்ளட்டும்;
புதிதாய்ப் பலபல குழியும் புழையும்
காலைச் சீய்க்கட்டும்;
அதிரா மனமும் அசையா நிலையும்
கொள்வாய் நீ வீரா!

பகையாய் இருளும் பசியும் வரட்டும்
நெஞ்சம் சோராதே!
தொகையாய் வரட்டும் துயராய் வரட்டும்
கால்பின் வைக்காதே!
திகையா தெழுவாய் திடமாய் உரமாய்ப்
போபோபோ வீரா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சறுகிச் சறுகித் தளரின் விழுகின்
நெஞ்சம் சோராதே!
இறுகித் தொடரும் துயரைச் சிரிப்பாய்
ஏங்காதே வீரா!
உறுதிப் பிடியுடன் உலகத் தனிமலை
உச்சிக் கேறிடுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில்லையூர் செல்வராசன்**

## இலங்கைக் கலைத் திறனை
## முழங்கு தமிழ் முரசே!

உலகத்தின் கலையகம் என் றோதுவார்
பிரான்ஸ் என்னும் உயர்ந்த நாட்டை!
கலக நிலைக் காரணத்தால் தாயகத்தை
நீங்கி அங்குக் கால் மிதித்த
இலங்கை அகதிகள் தமிழர் "ஐயையோ!
என் செய்வார்? ஏங்கி நின்று
கலங்குவரே!" என்றெண்ணிக் கவலை உற்றோம்!
அடடா! போ! கதையே வேறு!

சென்றிறங்கி அந் நாட்டில் திருச் சேர்த்துத்
தாம் மட்டும் செழிப்புற் றோங்கித்
தின்று குடித் தின்புற்றுத் திரியாமல்,
தம்மவரின் கலை, பண்பாட்டை,
மன்றமைத்து நிலை நிறுத்தி, "உலகத்தின்
கலையகம்" ஆயிற் றத் தேசம்
இன்று தான்! என நிறுவித் தலை நிமிர்ந்தார்
ஈழத்தார்! எடடா சங்கை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடு சங்கை! ஊதூது; மறத் தமிழர்
அந் நாளில் வீரத்தாலே
நெடு வையம் வென் றார்கள்! கலையாலே
இந் நாளில் வெல்கின் றார்கள்!
கெடு வழியில் நடை பயிலும் 'கிலிசை கெட்ட'
மேற்குலக நவ பண்பாட்டில்
தடுமாறும் மனித குலம் தமிழ்க் கலையால்
மீட்சி பெறத் தலைமை பூண்டார்!

"வளர் இலங்கைக் கலையகமே வான் உயர
வளர்க!" என வாழ்த்தாய் சங்கே!
"தளர்வேதும் இனி இலை எம் தமிழருக்குத்
தாரணியில்!" சாற்றாய் சங்கே!
உளர் ஈழக் காளையர்கள் உலகெங்கும்
கிளை பரப்பி! ஒன்றி உய்வர்!
முழவுகளே! முழங்குங்கள்! எழும் புதிய
தமிழர் தலை முறையே! வெல்வீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஏ.நுஃமான்

## புத்தரின் படுகொலை

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட் டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.

இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர் பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?"
என்று சினந்தனர்.

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை;
இவரைச் சுடாமல்
ஒரு ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்-
ஆகையினால்தான்..."
என்றனர் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரிசரி,
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.

தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோகவாத சூத்திரத்தினைக்-
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் - சாம்பரானது!

சிகா லோகவாத சூத்தரம், தம்மபதம் ஆகியன பௌத்த மத அறநூல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வ.ஐ.ச. ஜெயபாலன்**

## பூமி புத்திரர்

அந்திப் பொழுதே நள்ளிரவு இறங்கிவரும்
கொட்டும் மழைநாள்.
ஓடுவதும் நடப்பதும் நிற்பதும்
வெள்ளமென
வெறிச்சோடிப்போய்க் கிடந்த வீதியிலே
சிறு குடையும் தலை புதைத்துத் தலை புதைத்து
நடந்து வந்தோம்.

கோழி நனைந்து குராவிக் கிடப்பதுபோல்
செயல் முடங்கிப்போன கடைகள்
இருமருங்கும்.
நன்றி மழைக்கென்றான் ஒருவன்,
முறுவலித்தோம்.
ஆமைகள் போன்ற
எதிரிப்படைகளின் கூடாரங்கள் தம்
காக்கித் தலைகளை இழுந்துக்கொண்டன.
பிள்ளைகட்காய் இயற்கை அன்னை
போர்க்களத்தில் பாதிப் பணி முடிப்பாள்
என்பதறிந்தே இருந்தோம் நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற மழைநாள் நம்மோடு நடந்த சிலர்
புற்போர்வை மூடத் துயில்கின்றார்.
நாமோ,
ஓடுகின்ற வெள்ளத்தில்
நீர்க்குமிழியாலே
வாழ்வின் கவிதை எழுதி நடக்கின்றோம்.

உதைபட்டோம்,
லண்டனென்றும் பரிசென்றும்
ஓடுகளைத் தாங்கி ஒப்பாரி வைத்தபடி
பொக்கிசங்கள் உள்ளவர்கள் போனார் பரதேசம்.

எங்கே
ஏழைத் தமிழர்கள் நாம் செல்வோம்?
புறங்காட்டில் பாம்பு கழித்துவிட்ட சட்டையைப்போல்
நாறுவதே எங்கள் விதியாகிப் போனாலும்
மனித இறப்புக்கு
ஏதுமோர் அர்த்தம் இருக்கட்டும்

எங்கள் மண் இதுவென் றெழுந்தோம்.
ஓடுகின்ற வெள்ளத்தில் நீர்க்
குமிழியாலே
வாழ்வின் கவிதை எழுதி நடக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகம் சிவலிங்கம்

## இன்று இல்லெங்கிலும் நாளை

எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன.
எங்கள் இமைகள் கவிந்துள்ளன.
எங்கள் உதடுகள் அண்டியுள்ளன.
எங்கள் பற்களும் கண்டிப்போய் உள்ளன.
நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்.

எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக.
எங்களை நீங்கள் வண்டியிற் பூட்டுக.
எங்கள் முதுகில் கசையால் அடிக்குக.
எங்கள் முதுகுத்தோல் பிய்ந்துரிந்து போகட்டும்.

தாழ்ந்த புருவங்கள் ஓர்நாள் நிமிரும்.
கவிந்த இமைகள் ஒருநாள் உயரும்.
இறுகிய உதடுகள் ஒருநாள் துடிதுடிக்கும்.
கண்டிய பற்கள் ஒரு நாள் நறநறக்கும்.

அதுவரை நீங்கள் எங்களை ஆள்க.
அதுவரை உங்கள் வல்லபம் ஓங்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. பொன்னம்பலம்

## முன்னிரவின் மோகனம்

முன்னிரவு.
மேற்கில் வீழும் பிறை.
வீழும் பிறையோடு சிலந்திவலை போல்
இழுபட்டுக் கொண்டாடும் ஒளித்திரள்,
ஒடுங்கும் ஒளித்திரளின் ஓரக்கசிவில்
மஞ்சள் அப்பி முகத்தைத் துடைத்துக் கொண்ட
கருமோகினிபோல் மயலூட்டும் புறஉலகு.
இயற்கையின் மோகனம்.

ஏதோ அதன்பின் இழுபடும் அரவம்.
யார் மோகினியைத் தொடர்வது?
யார் வருகிறார்?
எந்த அரக்கன்?
எங்கும் ஓர் இனந்தெரியாத துயரின்
எதிர்பார்ப்பு
எல்லாத் திசையும் அதன் வாடையின்
அடைவு.

இடைக்கிடை உயிர்த்தெழும் காற்றில்
தலையாட்டும் இருள் பூசிய மரக்கிளைகள்,
திடீரென வடக்கிலிருந்து மேலெழுந்து,
தெற்குநோக்கி வந்து கொண்டிருக்கும்
சுடலைக் குருவிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு விட்டுக் கேட்கும் அலறல்,
நாயொன்றின் தூரத்து ஊளை-
எல்லாம் அதே துயரை உள்ளொலிக்கும் பின்னணி

இயற்கை எடுத்த மோகனம்
யாரைக் கொல்லும் ஆயத்தம்?
தொட்டதெல்லாம் நீறாக்க நினைக்கும்
பஸ்மாசுரர்கள் இன்னும் இருக்கிறார்களா
அழிய?

அப்படியானால்
மேற்கில் வீழும் பிறை?
இன்று கூத்தன் தலைதவறி வீழினும்
நாளை, மோகினியாய்ப் பொங்கியெழும்
கூர்ப்புடைய எரிகோள். *

*தமிழ்ப் பகுதிகள் மாலை வேளைகளில் ஊரடங்குச் சட்டம் அமுலாகத் தொடங்கிய காலப் பின்னணியில் எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

சேரன்

## இரண்டாவது சூரிய உதயம்

அன்றைக்குக் காற்றே இல்லை;
அலைகளும் எழாது செத்துப் போயிற்று
கடல்.

மணலில் கால் புதைதல் என
நடந்து வருகையில்
மறுபடியும் ஒரு சூரிய உதயம்.

இம்முறை தெற்கிலே-
என்ன நிகழ்ந்தது?
எனது நகரம் எரிக்கப்பட்டது;
எனது மக்கள் முகங்களை இழந்தனர்,
எனது நிலம், எனது காற்று
எல்லாவற்றிலும்
அந்நியப் பதிவு

கைகளைப் பின்புறம் இறுகக் கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள்?
முகில்களின் மீது
நெருப்பு,
தன் சேதியை எழுதியாயிற்று!
இனியும் யார் காத்துள்ளனர்?
சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து
எழுந்து வருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேரன், யாழ்ப்பாணம்**

## திருநாள் பாடல் -81

அதிகாலையின் பனி யாழ்நகர்மீது படிகிறது!
பனைமர உயரமும், பண்ணை வெளியும்
கண் தொடு மிடமெலாம் மறைகிறது...

ஒருநாளுமிலாத ஆழ்ந்த அமைதி கவிகிறது...
திருநாள் இன்று எனினும்
துயர் சூழ்ந்த நாள் தொடர்கிறது...

தெருநீளம் எங்கும் துவக்கோடு வாகனம் திரிகிறது...
திரிவார்கள் மக்கள் எனினும்
அவர் வாழ்வோ இங்கு நடுத்தெருவில்...

மழையோ மணல்மீது வந்தால் என்றும் மறைகிறது...
மனமோ இடிவந்த போதும்
இங்கு நிமிர்கிறது...

அதிகாலையின் பனி யாழ்நகர்மீது படிகிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

**கல்வயல், வே.குமாரசாமி**

## மரண நனவுகள்

விளக்கைக் கொளுத்தக் கொளுத்த
விடாமல் சுழட்டி அடிக்குது
காற்றும் நெடுக.
விளக்கிலோ எண்ணெயிலை
ஊடுபத்திப் பத்தித் திரியும் கருகக்
காத்தும் அடிக்குது
எரியும் சுடர் ஆடி நடுங்கிச் சுழலுது.
படுகொலைப் புதராய் வடக்கும் கிழக்கும்
அடக்கு முறைக்கீழ், துடக்குப் பட்டு
புனிதம் பூக்கும் துவக்குப் பட்டு
மனிதம் புதிய பதிவில் எழும்பும்.
'செல்' வழுந்து சீவன் நெடுக சில சாகும்
கொல்லவிட்ட சண்டாளர் கூட்டம்
புறப்பட்டு சல்லடை போட்டுத்
தவிச்சமுயல் அடிக்கும்.

கல்வீடு கொட்டில் எரியும் சரியும்
எல்லாம் தரைமட்டமாகித்
தரைதட்டும்.
'பொம்பர்' கரணம் அடிச்சுவிட்ட
குண்டுபட்டுச் சம்பலாய்ப் போன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்க் கதைகள் கேட்டுமனம் வெம்பி
கலங்கி அழுது விழி பிதுங்கும்
நம்பிக்கை வேர் பாறிக் கொப்போடு
அடிசரியும்
குஞ்சுகள் பிஞ்சுக் குடல் சிதறக்
கண்டு பொறி நெஞ்சில் எழும்பி
நெருப்புத் துயர் கிளம்பும்.

மரண வலய வாசல் படிகள்
படுகொலைக் களமாய் அடிக்கடி
சடுதியில் மாறிச் சந்நதம் கொள்ளும்.
சோக சித்திரம் முகிழ்க்கும் சுவர்கள்
சுவர்கள் எழுப்பும் சுதந்திர வேகம்
அவதிப்படுகிற புதிய உணர்வுகள்.

அளப்பி மழுப்பி அதட்டி
அடக்கிக் கிளம்ப விடாமல்
சுதந்திரமூச்சைப்
பயங்கவாதிகள் போர்வையுள் மூடி
நயம்பட நாக்கு வளைக்கும் தந்திரம்.

கொண்டுவா எண்ணெய்
திரியிடு ஊத்து
புழிஞ்சு திரியில் சுடரைக்
கொளுவு

அணையா வெளிச்சம்
வரட்டும், விடாதை தீமூட்டு.
எங்கடை மற்ற இளசுகளாவது
இருட்டில் இருந்து வெளியே
வரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமாய் இக் காற்றை
சுவாசித்து மூச்சுவிட
சாகத் துணிஞ்சு எதையும்
சகிக்கப் பழகி விட்டம்.

மரண நனைவிலே
விறைப்பேறி நிற்கிறம்
பரணி படைப்பம்
படையொன்று
எடுப்பம்.

7373 cc

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலை விஜயேந்திரன்

### பாதியாய் உலகின் பரிமாணம்

இளமையோ
நெருப்பை விழுங்கிய
ஒவ்வொரு கணமாய் ஊரும்
என்று சாபமிட்டாய்,
உழன்றேன்.

காற்றும் இல்லாத அறையில்
மூடச் சொல்லி
விழிகள் கெஞ்சவும்
மூச்சற்றுக் கிடந்தேன்
கன்னங்கள் நனைந்தபடி.

வாழ்வைச் சிறிதாய்
அர்த்தப்படுத்தி
'பார் இதோ உன் உலகம்'
என்று மனதிடம் சொல்லி
வெளிக் கொணர்ந்தேன்.
வீதியெல்லாம் குருதி கிடந்தது
வேலியெல்லாம் எரிந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவில்
துவக்கு வெடிகளின் சத்தம் கேட்க
நெஞ்சோ மறுபடி உறைந்தது.
கழுகுகளா தரையிறங்கியது?

மறுபடி,
உறக்கம் கலைந்தாயிற்று.
இருளின் அமைதியில்
வெளியில் கரைந்தேன்
விழியின் மணிகளில்
தீப் பொறி ஏந்தினேன்.
ஒன்று,
சொல்லாமல் போய்விட்ட உனக்கு
மற்றது,
சொல்லாமல் வந்துவிட்ட அவர்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முல்லையூரன்**

## போர்ப்பாடல்

அம்மா!
ஈரவிறகுக்குள் மூசி முனைந்து தீவளர்த்து
திணறடிக்கும் அடுப்புப்புகை நடுவே
தினமும் சட்டிக்கரி முகத்தோடு
போர் எடுக்கும் தாயே-உன் புதல்வன்
போர்க்களத்தில்-வெடிகுண்டுப்
புகை நடுவே நின்று பாடுகிறேன்!

அதிகாலை ஜன்னல் வழியாக
கட்டிக் கொஞ்சம் நீள்கதிர் நான்தானம்மா
நீ எனக்கு விளைநிலமாகி ஈந்தமுலைப்பாலில்
எதைக் கலந்தாய்?

எதிரிக்குப் பின்வாங்க மறுக்கின்றேன் நான்,
மடிச்சூடு மாறாத முதுகோடு
போர்களத்தில் உன்புதல்வன்-என நினைத்து
மடிநிறைய நெருப்புக்கட்டி
பெருமூச்சால்வீசி இறகெரிந்து
நீ இறந்து போவாயோ? அம்மா!

மடி அளைந்து முற்றத்தில் தவழ்ந்து தடுக்கி
விழுந்தெழுந்து..... ஒரு புன்னகையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனைவீழ்த்தி மகிழ்ந்த நாட்கள்
தொலைந்தது...
இதை நினைந்து எனக்கேது ஏங்க நேரம்?

வானத்தல் முகில் துண்டொன்றெடுத்து
உன்மார்பில் பொன்னாடையாக்கி,
சூரியன் வீழ்ந்த மேற்கைக்கிழித்து
கம்பளமாய் நான் விரித்து
ஒருநாள் சுதந்திரமாய் ஈழத்தில் வருவோம்,
வெகுநாளில்லை.

அதுவரையில் உன்புதல்வன்
போர்களத்தில் பகைவனின் புகைநடுவே
சந்திரனாய் அசைகின்றேன் தோழரோடு
வளர்பிறையில் உன்புதல்வன் உயிர்ப்பான் நம்பு
அம்மா! உன்னோடு உன்புதல்வனிருக்க உனக்காசை
ஆனாலும் என்னோடு என் அம்மா வருவாயாகில்
வானம் தாழ்பணியும்! வருவாயா நீ!

அடுப்புப்புகை நடுவே திணறும் உனக்கிந்த
போர்க்களத்துப் புகைமூட்டம் பெரிதேதுமில்லை
வருவாயாம்மா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி கணேசன், யாழ்ப்பாணம்

## இராணுவத் தோழருக்கு

நீயும் நானும் ஒன்றுதான்
துப்பாக்கியைச் சுமந்தவர்கள்
என்ற வகையில்!
எமது மக்களின் மீட்சிக்காக
நான்
ஏந்திய துப்பாக்கிக்கும்
ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாயால்
தூண்டப்பட்டு நீ
தூக்கியிருக்கும் துப்பாக்கிக்கும் உள்ள
முரண்பாட்டை நீ என்றேனும்
சிந்தித்தது உண்டா?

உனது சகோதரி என்றாவது
அரசு படையினரால்
கற்பழிக்கப்பட்டதுண்டா?
உனது இல்லம் சூறையாடப்பட்டுக்
கொளுத்தப்பட்டதாக அறிந்திருக்கிறாயா!
உன்னையும் இனத்தையும்
யுத்த பயத்திலும் இனவெறியிலும் மட்டுமே
ஆளமுடியும் என்று அவர்கள்
கணித்திருப்பதைக் கண்டு நீ
களிப்படைகிறாயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் சிந்திக்கக் கூடாது என்பதற்காகவே
எம்மினம் உங்களால்
சூறையாடப்படுவதை
அனுமதிக்கிறார்கள்!

உரிமைகேட்டு நீ போராடக்கூடாது
என்பதற்காகவே எமது உரிமைகள்
பறிக்கப்பட்டதைப் பற்றிநீ சிந்தித்ததுண்டா?

உனது சுயத்தைப்
பாசிசத்துக்கு அடகு வைத்து
கூலிக்குக் குருதி குடிக்க ஆரம்பித்த
உனது செயல் இயல்பானதுதானா?

இதே துப்பாக்கிகளும் பீரங்கிகளும்
உனது இனத்திற்கு
எதிராகத் திரும்பும் வரை
காத்திருக்கப் போகிறாயா?

எம்மைப் புரிந்து கொள்ள
நீ முயலும் வேளையில்
உனக்குப் பின்னால்
அரசு நீட்டில் கொண்டிருக்கும்
நாசிசக் கரங்களை இனம் காணும்
திறத்தை வளர்த்துக் கொள்!

இது உனது இனத்தின்
விடுதலைக்கு வித்திடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மரத்தினகுமார், மட்டக்களப்பு

## எதிரியின் இரத்தத்தில் கைநனை!

குவிந்து கிடக்கும் மண்டையோடுகளும்
குருதி சிந்தும் மனித எலும்புகளுமாய்
மனித நாகரிகம் மாண்டுபோன
மட்டக்களப்புத் தெருக்களில்...

ராணுவ லொறிகளும்
யந்திரத் துப்பாக்கிகளும்,
ரோந்து சுற்றிக் கொண்டிருக்கும்
யாழ் வீதிகளில்...

ஏ... தமிழ்க் குழந்தையே
என்ன தேடிக் கொண்டிருக்கிறாய்?
உனது சகோதரனை
ராணுவம் பிடித்துக்கொண் டு போயிற்று!
வேலைக்குப்போன உனது சகோதரி
அரச படையினரின்
அமெரிக்கத் துப்பாக்கியால் சுடப்பட்டு
இஸ்ரேல் பெட்ரோல் ஊற்றி
எரிக்கப்பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அப்பாவின் கண்ணெதிரேயே
உன் பிரியத்திற்குரிய அம்மா
கற்பழிக்கப்பட்டாள்.
உனது அப்பாவும்
கொலை செய்யப்பட்டார்.
உனது நகரம் எரிக்கப்பட்டது!
உனது வீடு சூறையாடப்பட்டது!

இன்னும்
இங்கே என்ன மிச்சமிருக்கிறது
என்றா அழுகிறாய்? அழாதே.
நீ அனாதையல்ல!

நீ ஏந்துவதற்குச் சில ஆயுதங்களையும்
நீ போராடுவதற்கு ஒரு பூமியையும்
அவர்கள் விட்டுச் சென்றிருக்கிறார்கள்
போ... போராடு துப்பாக்கி ஏந்து,
உனது எதிரியின் இரத்தத்தில் கைநனைத்து
நீ ஒரு போராளி என்று நிரூபி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஏ.நுஃமான்

## நேற்றைய மாலையும் இன்றைய காலையும்

நேற்று மாலை
நாங்கள் இங்கிருந்தோம்.
சனங்கள் நிறைந்த யாழ்நகர்த் தெருவில்
வாகன நெரிசலில்
சைக்கிளை நாங்கள் தள்ளிச் சென்றோம்.

பூபால சிங்கம் புத்தக நிலைய
முன்றலில் நின்றோம்
பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தோம்.

பஸ்நிலையத்திதல் மக்கள் நெரிசலைப்
பார்த்தவா றிருந்தோம்.
பலவித முகங்கள்
பலவித நிறங்கள்
வந்தும் சென்றும்
ஏறியும் இறங்கியும்
அகல்வதைக் கண்டோம்.

சந்தைவரையும் நடந்து சென்றோம்
திருவள்ளுவர் சிலையைக் கடந்து
தபாற்கந்தோர்ச் சந்தியில் ஏறி
பண்ணை வெளியிற் காற்று வாங்கினோம்.
'றீகலின்' அருகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டிக் கடையில்
தேனீர் அருந்தி-சிகரட் புகைந்தோம்.
ஜாக் லண்டனின்
'வனத்தின் அழைப்பு'
திரைப்படம் பார்த்தோம்.

தலைமுடி கலைந்து பறக்கும் காற்றில்
சைக்கிளில் ஏறி
வீடு திரும்பினோம்.

## II

இன்று காலை
இப்படி விடிந்தது.
நாங்கள் நடந்த நகரத் தெருக்களில்
காக்கி உடையில் துவக்குகள் திரிந்தன.
குண்டுகள் பொழிந்தன;
உடலைத் துளைத்து
உயிரைக் குடித்தன.
பஸ்நிலையம் மரணித்திருந்தது.
மனித வாடையை நகரம் இழந்தது

கடைகள் எரிந்து புகைந்து கிடந்தன
குண்டு விழுந்த கட்டடமாக
பழைய சந்தை இடித்து கிடந்தது
வீதிகள் தோறும்
டயர்கள் எரிந்து கரிந்து கிடந்தன.

இவ்வாறாக
இன்றைய வாழ்வை
நாங்கள் இழந்தோம்
இன்றைய மாலையை
நாங்கள் இழந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம்

## இரவுச் சூரியன்கள்

எங்கள்!
சின்னவனே! பண்டிதனே!
பரிபூரணனே! பவானே
நீளுகின்ற வரிகளிலே...
நீண்டெரியும் மணி விளக்குகளே
செம்மண் புழுதிகளைச் சித்தரித்த
கோலங்களே...

உங்கள்!
அன்னை என்ன், எம் மண்ணைப் பாலாக்கி
தன் மார் பால் கொடுத்தாளோ?
ஈழ தேசத்தின் சோகத்தைக் கண்ணுக்குள்
வைத்தானோ உன் அப்பன்?

எங்கள்!
ஈழத்துச் சோழங்கூட
அடித்து அடித்துக் கூவுதடா!
ஆரவார மில்லாக் குடாக்கடல் கூட
அலை அடித்துப் புலம்புதடா!
காரிருளில் எழுந்தெரிந்த
சூரியனின் குஞ்சுகளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால் வெள்ளிபோல் வந்து சென்ற
ஈழ மானிடத்து ஒளிச் சரங்களே!

நீங்கள்!
இனியொருக்கால் பிறந்து வந்து
ஈழ வீதிகளில் நடந்து சென்று
ஐக்கியத்தை, தத்துவத்தை வலியுறுத்தி
இன்னும் அகலா எதிரிகளை
அடித்துத் துரத்துங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சன்மார்க்கா**

## விழிப்பு

சமையல் செய்யும் இயந்திரமாக
ஆண்டுகள் பல தூங்கிக் கிடந்தாய்
உன்சிறு வீடே உனதுலகானது.
உப்பும் புளியுமே பிரச்சனையானது
உனது வாழ்நாள் இவ்வாறாக
உளுத்துப் போனது-
உன்னைச்சுரண்டி வாழ்ந்தது உலகம்.
உன்னை நினைத்து அழுதவர் கொஞ்சம்.

ஆனால்-
தாயே! நீ இன்று விழித்துக் கொண்டாய்.
தெருவில் இறங்கி ஊர்வலம் வந்தாய்.
அன்னையருடன் அணி
திரண்டு விட்டாய்

அகப்பை பிடித்த கைகளில் பதாகை;
போதும் கொடுமைகள் என்ற முடிவு
பிள்ளைகள் பற்றி நெஞ்சில் ஏக்கம்
கண்களில் சோகம்
நடையினில் வேகம்
இறுதியில் வெற்றி உனக்கே தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் பாதி பெண்கள் ஆனதால்
உங்கள் பலத்தை உணர்ந்துவிட்டீர்கள்.
நித்திரை செய்த காலம் முடிந்து
நீதியை கேட்கும் காலம் வந்தது.
வீட்டுக்கு வீடு அன்னையர் வந்தனர்
உன்பலம் உணர்ந்து
நீ நிமிர்ந்த வேளை
தாயே எமக்கு விடிவு வந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தியா செல்வராசா

## புனிதமான இலட்சியங்கள்

ஓ என் அன்பு நண்பனே
நீயும் நானும்
சின்னஞ் சிறு வயதில்
மண்வீடு கட்டி
மகிழ்ந்திருந்த நாட்கள்

பள்ளிப் பருவத்தில்
பல நூறு கனவுகளில்
நானும் நீயும் சஞ்சரித்த நாட்கள்
ஓ, எத்தனை இன்பமாய்...

ஆனால் இன்று நான்
வாழ்க்கை எனும் வசந்தத்தில்
வசதியான போகங்களில்

நீ......
பாறைகளைப் படுக்கையாக்கி
துணிவைத் துணையாக்கி
காடுகளில் சஞ்சரித்து-உன்
கனவை நனவாக்க
தினமும் தினவெடுத்த தோள்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடித்துக் கொண்டிருக்கிறாய்
உன் நெஞ்சத்திலே விடுதலை எனும்
வீர உணர்வு... அதனால்
உன் இதயத்தை இரும்பாக்கி விட்டாய்!

துப்பாக்கி ஏந்திய கரங்களுடன்-உன்
தாயகத்து வீதிகளிலே
வீதியுலா வரும்
சிங்களத்துச் சிப்பாய்களை,
சிதறி ஓட விரட்டும்
உன் புனிதமான எண்ணங்களுடன்
கரங்களில் ஆயுதம் ஏந்தி
காடுகளில் அலைகின்றாய்
நாளைய ஈழம் உன்கனவாகி
அதை நிஜமாக்க நீ துடித்துக் கொண்டிருக்கிறாய்

ஆனால் நான்
உணர்வற்ற ஜடமாகி
நினைப்பெல்லாம் பணமாக
என் வாழ்வை வளப்படுத்த
சுய நல நோக்கோடு.......
ஓ... என்னருமை நண்பனே,
உன் இலட்சியங்கள் புனிதமானவை
நீ அதை அடையும் நாள்
வெகு தூரத்தில் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக முன்னேற்றக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகவி

## தேரும் திங்களும்

"ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே;
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை"
என்று
வந்தான் ஒருவன்.

வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூற்றாண்டு வாழ்வதற்காய்ப்
பெற்ற மகனே அவனும்,
பெருந் தோளும்
கைகளும்,கண்ணில் ஒளியும், கவலையிடை
உய்ய விழையும் உளமும் உடையவன்தான்.

வந்தான், அவன் ஓர் இளைஞன்;
மனிதன்தான்;
சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து வானத்தே
முந்தா நாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி!

"ஈண்டு நாம் யாரும் அசைந்தொன்றி நின்றிடுதல்
வேண்டும்"எனும் ஓர் இனிய விருப்போடு
வந்தான் குனிந்து வணங்கி வடம் பிடிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நில்"என்றான் ஓராள்
"நிறுத்து!" என்றான் மற்றோராள்
"புல்" என்றான் இன்னோராள்
"கொல்" என்றான் ஓராள்
"கொளுத்து" என்றான் வேறோராள்.

கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு
பல்லோடு உதடுபறந்து சிதறுண்டு
சில்லென்று செந்நீர் தெறித்து
நிலம் சிவந்து
மல்லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்.

ஊரெல்லாம் கூடி இழுக்க உகந்த தேர்
வேர் கொண்டதுபோல் வெடுக்கென்று நின்றுவிடப்
பாரெல்லாம் அன்று படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந் திருந்துவிட்டாள் ஊமையாய்த் தான்பெற்ற
மக்களுடைய மதத்தினைக் கண்டபடி.

முந்தா நாள் வான முழுநிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்
அதோ மண்ணிற் புரள்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.முருகையன்

## பொய்க்கால்

நெஞ்சு பொறுக்கா நிலை ஒன்று
நினைத்துப் பார்க்க மனம் வேகும்
நெடுநாள் எமது மக்கள் தமை
நெருக்கிப் பிடித்த கொடும்பீடை
பிஞ்சு மனங்கள் பழுக்காமற்
பிசகி வெம்பிப் போம்படியாய்ப்
பேசுப்படும் பொய்த் தத்துவங்கள்
பிதற்றிப் பிதற்றிநாள் கழிக்கும்
பஞ்சச் சிறுமை; பாலர்களைப்
பளளிப்பொழுது தொடக்கம் இகப்
பலனில் வெறுப்பைத் தரும் விதமாய்
பயிற்றிப் பயிற்றி வந்த பயன்
இந்தப் பிறவிப்பலனை எல்லாம்
இனிமேற் கிடைக்கும் பிறவிகளில்
எய்தல் கூடும்; எய்திடலாம்
எய்தல் தானே மேன்மை எனல்?

இன்று நாளை-இவை பற்றி
எண்ணம் இன்றி வரும்பிறப்பை
எண்ணி எண்ணிச் செயல் துறக்கும்
இந்தப் பழக்கம் இனப் பண்பாய்
நின்று விட்ட காரணத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்த நித்தம் மிகச்சிறிய
நெருப்புத் தடியால் அகல்விளக்கை
நேற்று வரைக்கும் பற்றவைத்தோம்;
பின்னர் இன்று நாம் சிலபேர்
பெரிய பெரிய வீடுகளில்
பின்னேரப் பார் வேளைகளிற்
பியானோ இசைக்குப் பின்புலமாய்
மின்னும் குமிழ்கள்-எலெக்ட்ரிக் பல்ப்
மிளிரும் படியாய்ச் செய்தாலும்
மீதிச் சமூகம் இருட்டிடையே
விட்டு வைத்துத் துயிலுகிறோம்.

இனப்பண்பான செயல் நீப்பின்
இயல்பாயமைந்த விளைவாக
எவர்க்கும் சிறந்த விளக்களித்தல்
எம்மால் இயலும் எனும் துணிவே
நினைப்பில் இன்றிச் சுயநலத்தால்
நேரம் போக்கித் தொலைக்கின்றோம்
நேர்மையின்றிச் சிறுமைகளை
நிறுத்தி வைத்துப் பேணுகிறோம்

கனக்கு எதற்கு? வியாபாரக்
கஞ்ச உணர்ச்சி படைத்தவராய்க்
காலை, இரவு, நண்பகலிற
கனலும் வயிற்றை நிரப்புதற்கும்
மினுக்கி முகத்தில் நிறம்பூசி
வெளியூர்களுக்குச் செல்வதற்கும்
விருப்பம் காட்டும் அதுவன்றி
வேறு நோக்கம் இல்லார் நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் ஏதும் அறியோம் நாம்
செய்கை வலிமை அற்றோம் நாம்
திருப்பித் திருப்பிச் சிலை நாட்டி
செய்யும் விழாக்கள் பல நூறு
பட்டம் இருந்தும், படிப்பிருந்தும்
பழமை கிளறி முன்னோரைப்
பாராட்டுதற்கே அவற்றையெலாம்
பாழில் இறைத்து வருகின்றோம்!
வெட்டைவெளியிற் பந்தலிட்டு
விளக்கும் பூட்டி, காட்போட்டில்
வேறு வேறு பொம்மைகளை
விரிவாய் அமைத்து விழாச் செய்வோம்.
எட்டப் பறந்து பாரீசில்
இருக்கும் வெள்ளைக் காரர்முன்
எங்கள் புராணப் பெருமைகளை
எடுத்துப் புளுகத் துடித்தெழுவோம்.

எதையும் புளுகித் திரிகின்றோம்
இதிலே அளவு கணக்கறியோம்
எங்கள் மொழியைப் புளுகுகிறோம்
இந்து மதத்தைப் புளுகுகிறோம்
மதியில் எவனோ போய் இறங்க,
மட்டக்களப்பில் ஓர் அறிஞர்
மான் எனபதுவே அம்புலியின்
மறுபேர் அதுவே 'மூன்' ஆகிப்
புதிய மேற்குப் புலமொழியிற்
போயிற்றென்று புளுகிடுவார்;
புவியில் நாமே மதிக்குப்பேர்
புனைந்தோம் என்றும் இதமடைவார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதியொன் றறியோம் வெறுவாயைக்
கடித்து மென்று திருப்தியுறும்
கடைகேடெண்ண உண்மையிலே
கண்ணீர் பெருகும்; மனம்வேகும்!

எழுத்துத் துறையில் கலைத் துறையில்
ஏதோ சிலபேர் சாதனைகள்
இயற்றி உள்ளார் என்றாலும்
இவற்றைப் பகுத்தும், இனங்கண்டும்
வழுத்த அறியா மூடர்நாம்
வருந்திவருந்திப் பதர் தூற்றும்
மண்டுகேர்க்கு விழா எடுத்து
வானில் வைத்துப் புளுகிடுவோம்.

கழுத்தை நெரித்துத் திருகிடுவோம்
காலையில் உண்மைத் திறங்கண்டால்
கசட்டு வெறுமைப் புலம்பலையோ
கையால் அணைத்து வரவேற்போம்
சயிக்கிள் மெக்கானிக்குகளை
'ஸயன்டிஸ்ட்' என்று புளுகுதல்போல்
சாதாரணரை மேதை எனத்
தயக்கம் இன்றிப் புளுகிடுவோம்!

புளுகர் சமூகம் ஆனோம் நாம்
பொய்களிடையே, பொய்க்காலால்
பொய்யை நம்பி, பொய் விரும்பிப்
போக நினைந்து நடக்கின்றோம்
அளவு கணக்கே அவசியமாம்
அதனை அறிதல் பிரதானம்
அந்த வகையில், நுட்பவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவும் சிறிது துணை செய்யும்
களவு, வஞ்சம், அநீதி, மடம்,
கபடம், சோம்பல், அறியாமை
களைதல் தானே தலையறமாம்!
களையச் சிறிதும் முயலாமல்
உளநம் துயிலை எண்ணுகையில்
உள்ளம் வேகும்; நோக்கமிலா
உடலோர் ஆகும் நிலைமையினை
ஒழிக்க எதுவும் செய்வோமா?

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. முருகையன்

## எண்ணம்

மண்ணின் புழுதியிற்
பாதம் படிய
வழிநடந் தே நிச
வாழ்க்கையி லே
தண்ணென் றினிக்கும்
மகிழிவினில் ஆனந்தத்
தாளங்கள் கொட்டிக்
குதூ கலிக்க

நெஞ்சை உயர்த்தி
நிமிர்த்திட, வாழ்க்கையின்
நீசத் தனத்தைப்
பயமுறுத் த,
பஞ்ச முறத்துயர்
விஞ்சிடும் சோதரர்
பாடுகள் சாடும் ஓர்
பாதை செய் ய,

சீறும் புவித்துயர்
மாறுமட் டும் விசும்
பேறும் முயற்சியை
ஒத்தி வைக்க,
ஆறுதல் இன்றி என்
எண்ணமும் ஆவியும்
ஆர்வமும் இன்று
துடிக்குத டா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜபாரதி

## வேதனைதான் வேதனமோ?

பாட்டெழுதும் 'தமிழ்-வாத்தி' எங்களப்பா
பசிகிடந்து பழகியவள் ஈன்ற அன்னை
நாட்டிலுள்ள பணக்காரத் தோழி மார்மேல்
நகைகிடந்து குலுங்குவதை உற்று நோக்கி
வாட்டமுறுங் கருவிழிகள் கையை நோக்க
வரிசங்குக் கழுத்தையது தடவிப் பார்க்கும்!
ஏட்டினிலே பாட்டெழுதும் எங்கள் வீட்டில்
'இல்லை' யென்ற பாட்டதுவே எதிரொலிக்கும்

காற்சட்டைத் துரைமாரின் குழந்தை குட்டி
காரினிலே பள்ளிக்குப் போகும் போது
மேற்சட்டைப் பீற்றலினைத் தொட்டுப் பார்ப்பேன்;
மெல்லடிகள் வெயில்காய்ந்து கருவா டாகும்
பூப்போட்ட பாவாடை ஏதெனக்குப்
பூச்சழகு என்னிடத்தில் துளியு மில்லை!
கூச்சமற்றுச் சொல்லுகின்றேன்! பெற்ற தாயார்
குடல்நிறைச் சாப்பிட்ட நாளே யில்லை!

முத்தூருங் கடல்சூழ்ந்த இந்த நாட்டில்
முத்தமிழைப் பாலகரின் உள்ள மேட்டில்
வித்தாக விதைக்கின்ற வித்த கர்க்கு
வேதனை தான் வேதனமோ? விளங்க வில்லை
"சத்தியமாய்ச் சம்வாதம் புரிவோம்" என்று
சட்டசபை மேற்கொண்ட எம்.பி.மாரும்
நித்திரையா கொள்கின்றார்? எந்த னுள்ளம்
நெக்குருகும் பரிதாபம் தீர்ப்ப தென்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. சச்சிதானந்தம்**

## மணவாளன் வந்தகோலம்

(உலகிலே விளங்க முடியாத ஒரு மர்மம் இருக்கிறது. பஞ்சணை மெத்தையிலே பக்குவமறிந்து விஞ்ஞானம் கூறும் சமத்துவ உணவை உண்டு, வெயில் மழை காற்றுப்படாது இனிய வாழ்வு நடாத்துவோரைத்தான் பெரிய பெரிய வைத்தியர்கள் அணுக வேண்டியிருக்கிறது. அவர்களுக்குத் தான் 'இன்சுலினும்' 'பென்சிலினும்'.

ஆனால், கடும்வெயிலிலே, பழந்தண்ணீரை மாத்திரம் குடித்து விட்டுக் கல்லுடைக்கிறானே ஏழைத் தொழிலாளி; சேரியிலே ஒழுகும் கொட்டிலிலே, ஒழுக்கிற்கேற்பக் கால்களையும் மடக்கிக் கொண்டு கிடக்கின்றார்களே சேரிப்பாலகர்; விஞ்ஞானங் கொண்டு பார்த்தால் ஏழை செய்யும் தொழிலுக்குப் பழந்தண்ணீரில் ஏற்ற 'கலிறி'கள் (Calories) உண்டா; ஆடையற்ற குழந்தைகள் அந்தக் குளிரிலே சுவாதநோய் காணாது பிழைப்ப தெப்படி?

கடவுள் எங்கே; மணவாளனாகிய கடவுளைக் காணத் தன்னை அலங்கரித்து நிற்கும் உயிராகிய காதலியைக் கேளுங்கள்.)

புலர்ந்து புலராய் பொழுதெழுந்து நீராடி
மலர்ந்து மணமிதக்கும் போதும்-கலந்து
உள்ள மலரோ டுவகை வெறிப் பாவிசைத்துக்
கள்வனுக்கோ கோத்தே னோர்மாலை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை கருகியதே மணவாளன் வந்திலனே;
சாலை அருகிருந்தேன் சாளரத்தே.

வேகும் வெயில் வெதுப்ப வியர்வை பெருக்கெடுப்ப
தாகம் வரட்டவுயிர் தாங்காது-சாகுமள(வு)
ஏழை ஒருவன் எருதிழுக்க மாட்டாமல்
மாளு கின்றானே மணலில் மாய்ந்து;
மாளுகின்ற ஏழை மனந்தளிர்க்க வண்டியின் கீழ்த்
தோள்கொடுக்கக் கண்டேனென் தோன்றல்.

கண்ணாடி முன்னின்று கடிகையொரு மூன்றாகக்
கண்ணாளனுக் கென்றன் கையாலே-பெண்ணான்
அழித்தழித்து மென்மேல் அழகழகாய்த் தோன்ற
விழிக்கெழுதி னேன் அஞ்சனம்.
அஞ்சனமோ தேய்ந்ததுவே அன்பன்வரக் காணேனே
நெஞ்சுகுலைந் தழுது நெட்டுயிர்த்தேன்.

அந்தி மயங்கி அழகழியும் வேளையிலே,
சிந்தை தளர்ந்துதான் தேம்புகையில்-வந்தான்
கந்தையுடையும் கரமுழுதுஞ் சேறாக
வந்தானென் சாளரத்தின் வாயில்
வாயில் குறுகியஎன் வள்ளலடி வீழ்ந்தேனே

தோயும்படி அணைத்துச் சொன்னானே.
கண்ணீர் துடைத்துக் கருணைமழை பெய்து
'பெண்ணே' என அணைத்துப் பேசுகிறது-கண்ணாளன்
கோடைவெயில் வெதுப்பக் கொதிக்கின்ற மக்களுக்கு
நீடு நிழலாக நின்றேனே.
நின்றுகளை தீர்க்கேனேல் நேரிழாய் அன்னவர்க்குப்
பொன்றாப் புகலாரோ சொல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின்றிக் குஞ்சினங்கள் தவிக்கின்றார் சேரியிலே
பாயின்றி மக்கள் படுக்கின்றார்;- வாயின்றி
நீதி சொலமாட்டாத நெஞ்சினர்க்கு யானன்றி
ஏதுரைப்பார் அங்கே எவர்?
எவரு மறியாதே ஏழைகளின் பின்னின்று
அவர்க்குதவி யாவேன் அறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலாவணன்

## இன்றுனக்கும் சம்பளமா?

ஏன்கடலே இரைகின்றாய்? இன்றுனக்கும்
சம்பளமா? ஏழை வீட்டில்
தான்நீயும் பிறந்தனையா? தமிழா நீ
கற்றதுவும்? தகாத வார்த்தை!
தேன் கடலாய் ஓடுமெங்கள் திருநாட்டில்
பிறந்தபயன் தெரிகின் றாயோ?
வான்தந்த வளமிலையோ! வயல்தந்த
நிதி இலையோ? வாடா தேநீ.

காற்செருப்புக் கழன்றதுவா? கட்டுதற்கும்
இடமிலையா? கால்நூற் றாண்டாய்த்
தோற்பொருத்தித் தோற்பொருத்தித் துணையாக
உழைத்த அவை தொழிலில் ஓய்ந்தால்
போற்றுதற்கோர் பொதுக்கூட்டம் போட்டதிலே
பொன்னாடை போர்த்து, மேலும்
பாற்சோறும் பச்சணமும் படைப்பதற்கு
நின்னிடத்தே பணமா இல்லை?

"இப்போசா" பஸ்களிலே ஏறுகையில்
வியர்வையினால், ஏழை தோழர்
யப்பானார் இறக்குகிற புறாமார்க்கு
மல்வேட்டி, அடடா, 'டப்டப்
சப்'பென்று மூச்சுவிட்டுச் சல்லடையாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிற்றோ? சனத்துக் குள்ளே
இப்படியும் அவமானம் ஏதேனும்
நேர்ந்ததுவா, இரைகின் றாயே?

சட்டம்பி ஆனதுமே சந்தையிலே
வாங்கி வந்து, சலியா தின்று
பொட்டுதிப் போனாலும், புழுதிமிகப்
படிந்தாலும், போன மாதம்
கட்டறுந்த குடையினைஎம் கந்தோருக்
கெடுத்துப்போய், கவன மின்றிப்
பட்டணத்துக் கடை எதிலும் பறிகொடுத்து
விட்டனையோ, பதறுகின் றாய்?

கல்லூரி மாணவிஉன் மகள் கமலா
ஏதேனும் காசா கேட்டாள்?
அல்லாஹ்போல், அனுதினமும் சில்லறைக்குக்
கடன்தந்த அலியார் நானா
பொல்லாத வார்த்தைஏதும் புகன்றாரோ,
பொருமுகிறாய்? போன ஆண்டு
நில்வைக்கு வரிசையிலே நின்படலை
மட்டும் அங்கார் நிற்கின் றாரோ?

அந்திபட்டும் இருசாமம் ஆச்சுதினிக்
கடன்காரர் ஆரும் அங்கே
இந்தவரை நில்லார்கள்; என் மனையாள்
மட்டுமங்கே இருப்பாள் ஏங்கி;
நொந்தென்ன கண்டோம் யாம்? இல்லாமை
யாம்கொடிய நோயைப் போக்க
விந்தை மருந் தறியாமல் விதியென்று
பேசுகிறோம்! வீடு செல்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிக்கமால், மட்டக்களப்பு

## நாளை வருவான் ஒரு மனிதன்

நாளை வருவான் ஒரு மனிதன்;
ஞாலத் திசைகள் கோலமிட
நாளை வருவான் ஒரு மனிதன்.

உள்ளத் தெளிவின் நிலவினிலே
ஒளிரும் நினைவாம் சுடரினிலே...
வெள்ளப் புனலின் கலப்பினிலே
விடியற் பரிதி உருவினிலே
நாளை வருவான் ஒரு மனிதன்!

காலச் சுழலின் சுழிதனிலே
கலந்து சுழலும் மேதையரின்
கோலக் கனவின் கருக்குழியில்
கோடி காலம் குடியிருந்தான்...
நாளை வருவான் ஒரு மனிதன்!

மாநி லத்துக் கழனியினை
மாற்றி யுழக்கி வரப்பிட்டு
ஏணி பெற்ற வாழ்க்கையினை
எரிவிட்டாக்கும் நல்லுழவன்...
நாளை வருவான் ஒரு மனிதன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி ஒன்றாய் நிறமொன்றாய்
சமயம் ஒன்றாய் மொழியொன்றாய்
நீதி ஒன்றாய் நிலையொன்றாய்
நிறைகண் டாளும் விஞ்ஞானி...
நாளை வருவான் ஒரு மனிதன்!

வானக் கூரைப் பந்தலின் கீழ்
வையகத்துப் பெருமனையில்
மானிடத்தின் பிள்ளைகளை
மருவி மகவாய் விருந்தோம்ப...
நாளை வருவான் ஒரு மனிதன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணல், திருகோணமலை

## நீ யார்?

இனிதான கனிய ளிக்கும்
இன்நிழல் மரங்கள், ஆங்கு
கனிபிழிந் தன்ன ஓசைக்
கடலலை நல்கும் புட்கள்
பனிதங்கு புல்லினோடு
மாமிசம் உண்ணும் மாக்கள்,
நனிஎழி லோடு மின்னும்
நாகங்கள் யாவி னுள்ளும்
மனிதா நீயார்? இம்மண்ணில்
மதிப்புள்ள ஜந்து நீயா?

ஓதிய மறைகள் உன்னை
உயர்ந்தவன் என மொழிந்தே
தோதாகி உலகும் உன்றன்
சுகத்திற்கு வளையு மென்னும்!
பாதார விந்தம் சென்னி
பணித்திடும் சிருஷ்டி! நல்ல
ஆதாரம் அமரர் உன்றன்
அடியினைக் கௌரவித்தார்!
மனிதா நீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

ஆந்தையின் அலறலுக்கும்
அர்த்தம் நீ காணுகின்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த ஓர்காகம் கத்த
சிந்தையை இழப்பாய் பூனை
பாய்ந்திடிற் பயந்து போவாய்
பல்லியின் நச்சொலிக்கே
மாய்ந்திடு வாய் உனக்கே
இவையெலாம் உயர்ந்த தாயின்-
மனிதா நீயார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

சிங்கத்தின் கர்ச்சனைக்கும்
சிறுத்தையின் உறும லுக்கும்
தும்பியின் பிளிற லுக்கும்
சீறிடும் பாம்பி னுக்கும்
தங்குநீர் முதலை கட்கும்
தாங்குமோ உயிர் என்றீங்கு
வந்தித்து வாழு கின்றாய்;
மறையினால் உயர்வு கண்டாய்!
மனிதா நீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

காற்றிற்கும் பனிக்கும் நீலக்
கடலுக்கும் இடி மழைக்கும்
தோற்றிடும் விசும்பி னுக்கும்
தொல்புகழ்ப் பூமித் தாய்க்கும்
ஆற்றாமல் அழிகின்றாய் உன்
அறிவுக்கும் அடக்காய் நீயோர்
நாற்றுக்குள் முளையதனால்
நானிலம் பெருமை பேசும்
மனிதா நீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவை இரத்தினதுரை

## முடிவு காண்பேன்!

கன்னியர் அழகைப் பாடேன்
காதலைப் பாடேன், வானின்
வெண்ணிலா தன்னைப் பாடேன்
விசரரைப் பாடேன், ஆனால்...
எண்ணரும் துயரத்தோடு
ஏழைகள் வாழும் வாழ்க்கை
இன்னுமா? பொறுக்க மாட்டேன்
இதற்கொரு முடிவு காண்பேன்

கற்றவர் என்ற மாயைக்
கவிஞர்கள் சிரித்தபோதும்
சற்றுமே நில்லேன், ஏழைச்
சனங்களின் துயரம் போக்கச்
சொற்களாற் கவிதை யாப்பேன்
துயரிதாற் போகாதென்றால்...
பெற்றதாய் தடுத்த போதும்
போர்க்களம் புகுந்து சாவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவை இரத்தினதுரை

## சரித்திரம் மாற்றுவோம்

மாடியிற் சில மானுடர் வாழவும்
மரத்தடியிலே பற்பலர் சாகவும்
தேடியே பணம் சேர்த்தவர் தூங்கவும்
சேர்த்தவர்க் கதைக் கொடுத்தவர்
ஏங்கவும்
நீடியாதிது என்றுமே சொல்லுவோம்
நிச்சயம் இதை மாற்றியே தீருவோம்
ஆடிக்காற்றென வாலிப சக்தியே
ஆடவர் முதலாளிகள் நெஞ்சிலே...

இங்கு நாமினி ஓர் விதி செய்குவோம்
ஈழமாம் எம் தாயக மண்ணினை
எங்குமே பொதுவானதே என்றிட
ஏறியே மிக அண்மையில் ஆக்குவோம்
பொங்கியே இளம்
பொடியன் கிளம்பிடில்
பொசுங்கியே எமதின்னல்கள் தீயுமாம்
தம்பி டேய் இனும் தாமதம் ஏனடா
தாவிவா உன் சரித்திரம் மாற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவை இரத்தினதுரை

## நாங்கள்

பால் நிலா காய, முற்றப்
பரப்பிலே...அமர்ந்து, யாப்பு
வாலுடன் எதுகை, மோனை
வரம்புகள் எல்லாம் பார்த்து
கால், தலை, கன்னி மார்புக்
காயுடன், அனைத்தும் பாடி
நூல் படைக்கின்ற அந்த
நூதனம் அறியாப் பாலர்

* * *

அந்திவான், தென்றல், பொய்கை
அழகு மீன், அடுத்த வீட்டுச்
சந்திரா, அவளின் மார்புச்
சதை வெளி தெரியும் போது
சிந்திடும் அழகு தன்னைச்
சிறப்புடன் கவிதை செய்யும்
மந்திரம் எதுவும் கற்று
மலர்ந்திடாக் கவிதைக்காரர்

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்னுடற் கணிகை மாதர்
மேனியிற் குறும்பு செய்ய
மினிசுழல் விசிறி காற்று
வீசிட மெத்தை மீது
கண் வளர்கின்ற மாடிக்
காரரின் வாழ்க்கை தன்னை
எம் கவி எழுதிச் செல்லும்
இயல்பினை அறியமாட்டார்

* * *

கஞ்சிக்காய் உழைக்கும் மாந்தர்
கடல் மடி தவழ்ந்து சென்று
குஞ்சிறால் ஓரா ஒட்டி
கூடை மீன் கொணர்வோர், தேகப்
பஞ்சியென் றெதுவு மின்றிப்
பனைமரப் பதனீர் சேர்ப்போர்
சஞ்சலம் துடைக்கப் பாவில்
சரித்திரம் எழுதும் தீரர்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேமன் கவி**

## கி.பி. 2000
## அடிவானத்திற்கு அப்பால்

நிலவின் ஒளிமடியில்
மனித உறக்கங்கள்;

பரந்த வெளி பாயாகி...
சுகச் சயனங்களில்
செவ்வாய்ச் சொப்பனங்களில்,
பூமி விழிகள்-

$E=MC^2$
இத்தியாதித் தத்துவங்கள்
ஜெபங்களின்
உச்சாடனங்களாகி...

பரிசோதனைக் குழாய்
வீட்டு ஜன்னல்களைத்
திறந்து எட்டிப் பார்க்கும்
புணர்ச்சியின்
பெறுபேறுகள்-
நியூட்ரான் பந்துகளால்
இரத்து மைதானத்தில்
வாழ்வு விளையாட்டில்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா. ஆசனத்தில்
கம்பியூட்டர் இருதயங்கள்
சமாதான சமிக்ஞைப்
புள்ளிகளால
பிரகடனக் கோடுகளிட...

சமாதான சரீரத்தின்
மனக் கரையில்
மௌனக் கறைகள்
அழுகையாய்க் கசிய
கண் காணாமல்
மண் ஏப்பமிட்ட
ஹிட்லர் சமாதியில்
அணுகுண்டு வண்டின்
ரீங்காரத்தில்
சந்தோஷப் புழுக்கள்
நெளியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

சுபத்திரன்

## மக்கள் சக்தி

மக்கள் என்ற வைத்தியர்கள்தான்
எனது
ஊமைக் கவிதைகளைப்
பேசச் செய்தனர்
குருட்டுக் கவிதைகளைப்
பார்க்கச் செய்தனர்
செவிட்டுக் கவிதைகளைக்
கேட்கச் செய்தனர்
கோழைக் கவிதைகளை
போராடச் செய்தனர்.

நண்பர்களே!

உங்கள் கவிதைகளையும்
அந்த வைத்தியனிடம்
அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபத்திரன்

## காலம் நெருங்குதடா!

கோடித் தலையுடன் சீறி வருங்கடல்
கோபமுன் கோபமடா-தோழா
வாடி உழைத்திடும் போது எரிமலை
வாயின் துள்ளமடா-குடில்
தேடிக் கிடந்திடும் துன்பமரிந்திடத்
தோழா எழுந் திடுவாய்-பல
கோடிப் புலியொரு யானை யென உருக்
கொண்டது என்று நட!

வைய மெல்லாம் ஒரு கையினுள் வைத்திடும்
வேகம் படைத்தவனே-உல
குய்ய எழுந்திடும் கோலம் படைத்திடக்
காலம் நெருங்குதடா-ஒரு
பொய்மையில்லா உயர் பூமி யொன்றாக்கிடப்
பொங்கிடும் மலைகள்-சரம்
எய்ய எழுந்து நடந்தனவோ என
எட்டி நடந்திடடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபாஜெயராசா, யாழ்ப்பாணம்**

**பசுமை**

வேப்பம் பழங்கள்
பொத்துப் பொத்தெண்டு
விழுந்து கிடக்கிற
கூரைக்குக் கீழை
எங்கடை பள்ளி

எங்களைப் போலை
ஏழைப் பிள்ளையன்
படிக்கினம் அங்கை.

நாலு பட்டாலும்
பணத்தைக் கண்டவை
எங்கடை பள்ளி
உதவா தெண்டு
பட்டணம் பாத்துப்
படிக்கப் போகினம்.

கடை வீழீயுக்கை
கண்ணீர் வடிய
வாத்தியார் வருவார்!
எங்களைப் போலை
அவரும் நல்லா
முட்டுப் பட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கடை பசியும்
அழுக்கும் வறுமையும்
சாம்பலாப் போகும்
பசுமைப் பாடம்
சொல்லித் தருவார்.

மண்ணைப் பிரட்டி
மாத்தி யுழுவம்
எங்கடை விதையள்
வளரவேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாருமதி

## புத்தருக்கோர் புத்திமதி

"செத்தவர் பிறப்பார்
பிறந்தவர் சாவார்"
புத்தனே!
உன் பிறப்பின் போது
செப்பப்பட்ட இந்த
அசரீ உண்மையாயின்
நீயே இனிப் பிற.

அரசு மரத்தடி இனி உன்
அகலிடம் அல்ல.
புகலிடம் தேடியோர்க்கு
புத்தனே நீ
புண்ணிய மூர்த்தியும் ஆகாதே.

மடியில் மடித்த உன் கைகளை எடு
விடுதலை வேண்டுவோரின்
விரல்களோடு உன்
விரல்களைச் சேர்
முடியுமானால்
மறுபடி நீ பிற
மண்ணின்
உயிர்களின் உய்ய
உன் கரம் உயர்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைகள் வேண்டுமாயின்
உன்முன் கேள்விகளுக்கு
விளக்கம் கேள்.
மா ஓவும் உன் போல்
ஆசியாவில் பிறந்தவன்தான்
எம்மோடு அணிசேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. யேசுராசா, யாழ்ப்பாணம்

## அறியப்படாதவர்கள் நினைவாக

மரித்தோரின் நாள்:
கல்லறைத் திருநாள்!
விரிந்துகிடக்கின்ற சவக் காலைக்கதவுகள்
வந்து போனபடி, பெரிய சனக்கூட்டம்.

கல்லறைகள் எழுந்துள்ளன;
வாழ்ந்து சொகுசாக
மறைந்து போனவரின்,
நினைவைக் கல்லுகளில்
வரைந்த அடையாளம்.
பூவெழுத்தில் விவரங்கள்,
'சிலுவை' 'சம்மனசு'
'கன்னிமரியாளாய்ச்'
சுரூபங்கள்;
கூலிக் குழைத்த
மேசன் தொழிலாளர் கைவண்ணம்.

தென்கிழக்கு மூலை,
வரிசையாய்க் கல்லறைகள்:
'சங்கைக் குரிய கன்னியர்கள் தந்தையர்கள்'
படுத்துக் கிடக்கிறாராம்;
பளிங்கில் அவர் நினைவு
பொறிக்கப் பட்டுள்ளன.
கிணற்றருகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னை மரத்தடியில்,
பட்டிப்பூ மலர்ந்துள்ள

சிப்பிச் சிலுவை
மேடுகளின் கீழெல்லாம்
மனிதர் புதைபட்ட அடையாளம்,
பேரும் தெரியாது,
ஊரும் தெரியாது,
யாரென்றும் அறியப்
படாத மனிதர்கள் இங்குப் புதைந்துள்ளார்.

யாரென் றறியப் படாதவரென்றாலும்,
அவரைக் குறிப்பாக
உணர முடியுந்தான்...!

'ஒருகரையில்' நின்றபடி
கரைவலையை இழுத்தவர்கள்;
தாமிழுத்தமீனில் சம்மாட்டி கொழுத்திருக்க;
மெலிந்து கருவாடாய்க், காய்ந்து மடிந்தவர்கள்...

'அலுப் பாந்தி' அருகில்
மூட்டை சுமர்ந்தவர்கள்; பார விறகுவைச்சு
கை வண்டி இழுந்தவர்கள்...

'பொழுது புலராத விடிகாலை தொடங்கியதும்
நகரை ஊடறுத்த வீதிகளின் வீடுகளின்,
நாளும் அழுக்குகளைக் களைந்து சுமந்தவர்கள்...'

என்ற உழைப்பாளர் தாம்புதைந்து கிடப்பார்கள்!
செத்துப் புதைப்பட்டுக்
கிடந்த மண்மீதும்
எல்லை கட்டி,
கல்லறையாய் மேடுகளாய்
வர்க்கத்தின் முத்திரைகள்
வர்க்கத்தின் முத்திரைகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பே. முத்தையா, யாழ்ப்பாணம்

## கற்கால வாழ்வு

சந்திரனைச் சூரியனைச் சாற்றுகிர கங்களையும்
விந்தையுறு விஞ்ஞானத் தாலே இயற்றுகிறீர்
மந்திக் குரங்கின் வழிவந்த மானிடர்காள்!
சிந்தை திருந்தச் சிறிதுபணி செய்யீரோ?

பாயும் முயலிருக்கும் பழைமதி நாணிடவோர்
நாயும் படுத்திருக்கும் நல்லமதி வானில்வரத்
தேயமெல்லாம் அற்புதமாய்ச் செப்புகிறீர் அந்தோநீர்
நாயும் சிரிக்க நடக்கும் நிலைகாணீர்

வீரச் செயல் புரிந்து விண்ணுலகங் கண்டுவந்நீர்
பாரைத் திருத்தும் படிஏதும் செய்திடிலோ
சீராய விஞ்ஞானம் சிறப்பாம் இருமையிலும்
பேரான வாழ்வு பெறுவீர் பெரியீரே

வலவன்ஏ வாதஒரு வானூர்தி செய்தீரே
உலகில் மனுக்குலத்தோர் உள்ளம் சிதைந்தழிந்து
கலகம் விளைத்தந்தக் கற்கால வாழ்வு செயும்
நிலபரத்தைக் கண்டுகண்ணின் நீர்வடிக்க மாட்டீரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்சுவைக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகநாவலர், யாழ்ப்பாணம்

## விநாயகர் துதி

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்களோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம் பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோதும்
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி.வை. தாமோதரன் பிள்ளை

### ஆறுமுக நாவலர்

நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்தி லரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே யெல்லவரு
மேத்துபுராணாகமங்க ளெங்கே சங்க மெங்கே
யாத்தனறி வெங்கே யறை.

வேதம் வலி குன்றியது மேதகு சிவாகம
விதங்கள் வலிகுன்றின் வட[illegible]
சூதன்மொழி பூவறு புராணம் வலி குன்றியது
சொல்லரிய சைவ சமயப்

போதம் வலி குன்றியது பொற் பொதிய மாமுனி
புகன்ற மொழி குன்றியது நம்
நாதனினை ஞாலமிசை நாடரிய ஆறுமுக
நாவலர் இறந்த தினமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விபுலானந்தர்**

## ஈசனுவக்கும் மலர்

வெள்ளைநிற மல்லிகையோ,
வேறெந்த மாமலரோ,
வள்ள லடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ,
கழுநீர் மலர்ந்தொடையோ,
மாப்பிளையாய் வந்தவர்க்கு
வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல
கழுநீர்க் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி
கோமகனார் வேண்டியது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ,
பாரிலில்லாக் கற்பகமோ,
வாட்ட முறாதவர்க்கு
வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல
பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி
நாயகனார் வேண்டுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லடி வேலுப்பிள்ளை

## பிரிவுத் துயர்

என்னென்று பாடுவே னென்னென்று சொல்லுவேன்
என்னென்று கையாலெழுதுவே-னென்னாசைக்
கண்கண்ட பொற்கிளியே கையெறிந்தாயென்று மனம்
புண்கொண் டழுந்திவிடும் போது.

நெஞ்சம் பதைக்குதே நீடுடல்சோர் வேறுதே
வஞ்சக்கண் ணானீர் வழியுதே-செஞ்சொற்
குலைந்துதடு மாறுதே கோமளமே யென்னை
உலைந்திட நீ வைத்ததை யுன்னி.

தேகமெலி வுற்றேனே சிந்தைநொந்து; புண்ணாகிச்
சோகமுற்று வாடிச் சுழன்றேனே-ஏகனடி
கொண்ட வெனதாசைக் கோமளமே யென்னைவிட்டுப்
பொன்றினா யென்ற பொழுது.

நகமுந் தசையுமென நாமொன்றி வாழ்ந்த
சுகவாழ்வை முன்பு துதித்தோர்-அகமுருகிப்
பேடிழந்த வன்றிலெனப் பேசவெனை நீதனிவைத்
தோடியதோ நீதி யுரை.

நீர்க்குமிழி வாழ்க்கையென நெஞ்சறிந்தோர் சொன்ன வந்த
வார்த்தைக் குதாரணமாய் மாண்டாயோ-பூத்த வரி
பாடுங் குயிலேயென் பைங்கிளியே நானிருந்து
வாடுவதோ நிற்கு மனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னந் தருவாரா ரன்புமொழி சொல்வாரார்
இன்னலழித் தாறுதலெற் கீவாரார்-வன்னமுகங்
காட்டிமகிழ் விப்பாரார் கண்மணியே முத்தி யன்பு
பூட்டிநீ யென்னைவிட்ட போது.

சொல்லையோ வுன்குழலின் சுந்தரத்தை யோதரளப்
பல்லையோ நின்னுதலின் பான்மையையோ-அல்கலழி
கண்ணையோ விற்புருவக் காட்சியையோ நீயிருந்த
அண்மையையோ சொல்லி அழ.

சங்கக் கழுத்தையோ தங்குரத்தை யோவகட்டுத்
துங்கத்தை யோவிடையின் றோற்றலையோ-பங்கயப்பா
தத்தையோ வத்தக் தகையையோ ஞானேந்த்ரி
யத்தையோ சொல்லி அழ.

நேசத்தை யோவெனக்கு நீயன் றுரைத்தவுப
தேசத்தை யோபுரிந்த செய்கையையோ-மோசக்
குணமகற்றி யென்னைக் குணப்படுத்தி வைத்த
அருமையையோ சொல்லி அழ.

உன்முகத்தை யுன்மொழியை யுன்னுணவைக்காணாதுன்
னண்ணன் பயண முற்ற அவ்வருத்த-முன்னைப்
பிரித்ததோ யான்கடிந்து பேசும் பேச் சுன்னைப்
பிரித்ததோ அன்னமே பேசு.

தேனே செழுங்கனியே திவ்வியகண் டேநோக்க
மானேயென் னாசை மணிவிளக்கே-மாணமரு
மிப்பிறப்பி லென்னைமற வாதமயி லேயுனைநான்
எப்பிறப்பிற் காண்ப தினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

என்னரிய ஆசைமுத்தே யினியமொழித்
தேனே யென்னிதய வாழ்வே
கண்மணியே யனநடைச் செந்திருவேமா
மயிலே காருண்யம் பூத்த
அன்னநடம் பயிறரு கற்பகத் தருவே
யருடகுன்றே யழகா ரென்னின்
மின்னு மணிவிளக்கே நீயெனைப் பிரிய
நான் சகிக்கும் வித மெவ்வாறே.

புதுவுடலம் புதுவிதயம் புதிய செய்கை
பொலிந்தபுது மகனென வெற்புகல நல்லோர்
விதுவென்வென் னிதய மதி லுதித்து ஞானம்
மென்மொழி யாலின் மொழியால் விளக்கும்மானே
எதுகுறைநான் புரிந்தேனென்ற கன்றாய் தேனே
யானிறந்து சுடலை செல்லும் போதேயல்லால்
இதுதுயர மொழிந் திருக்கேனம்மே பாவி
ஏழை யெனப்பட்டே னென்செய்குவேனே.

உன்பணத்திற் பன்மடங்காம் பணமுங் காண்பே
னுன்னுற விற்பன் மடங்கா முறவுங் காண்பேன்
உன்குலத்திற் பன்மடங்காங் குலமுங் காண்பே
னுன்றலத்திற் பன்மடங்காந் தலமுங் காண்பேன்
உன்ற ரத்திற் பன்மடங்காந் தரமுங் காண்பே
னுன்னழகிற் பன்மடங்கா மழகுங் காண்பேன்
உன்குணத்தை நிகர்த்த மங்கை தனையென் கண்க
ளொரு பொழுதுங் காண்பதில்லையுண்மைதானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து கொண்டாடியவர் தம்மைப் பிரிந்து வாழக்
கானகத் திற்றிரியுமதி குறைந்த புன்மை
விலங்குமிக வருந்து மெனிலையோ வந்த
விலங்கல்லா நான் சகித்து விரிந்த மாசஞ்
சலங்கழித்து வாழ்வேனோ செந்தில் வாழிவே
சரவண சண்முக குகசாம்பவி குமாரா
இலங்கு பவப்புவியிலுன் சோதனை யீதென்றா
லென் செய்வேனேழை யிதற்கென் செய்வேனே.

இப்பிரசவத்தி லிறப்பேனா னென்றீண்
டிருந்த வயலவர்க்கு முறவினர்க்கு முன்னே
சப்பரவை படிந்தவன் னெஞ்சேனுக்கும் நீ
சாற்றினாய் சாற்றிய போற் சாதித்தாயுன்
றப்பறையின் மொழியிதினாற் பத்மினியென்று
சாற்றவெவர் பின்னிற் பாருன்னைமானே
எப்படி நான் மறந்திருப்பேன் பாவியானே
னென்செய்வே னேழை யிதற்கென் செய்வேனே.

இறக்க முன்ன மிறப்பே னென் றிசைத்தவுன்வா
யிசையை நினைத்தழுவேனோ விறக்க முன்னாள்
மறக்கரிதா யெனக்குப தேசித்த வந்த
வாக்கியத்தை நினைத் தழுவேனோ நானுள்ள
முறக்க வனித்திலனென நீயுரைத்த மோச
வுரையை நினைத்தழுவேனோ வுன்றனாவி
துறக்கமுன்னீ பட்ட வருத்தத்தை நாளுஞ்
சொல்லி யழுவேனோ வென்றோகை யாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைவிட்டு நீபிரிய வருமென்று நா
ணிக்கவியை யுனக்கியற்றி நோவேனென்றும்
முன்னொரு நாளெனும் நினைத்தேனல்லே னிந்த
முடிபுவந்து முடியுமென்று முன்னைநாளி
லன்னவாகன மிவரும் பிரமா செய்தா
னாமெனி லாரிடத்திலிதை யறைவே னென்முன்
பின்னும் நீபிறந்து வந்தாலன்றி யென்னைப்
பிடித்த துன்பம் விட்டகன்று பிரிந்திடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லடிவேலுப்பிள்ளை

## இல்லாமை சொல்லேன்!

அச்சமென்ப திருப்பினு மில்லாமை சொல்லேன்
அதிகநிதி வழங்கினு மில்லாமை சொல்லேன்
பகூடித்துக் காயும்நா னில்லாமை சொல்லேன்
பரிகசிப்ப வரைத் துணிந்து பரிகசிப்பேன்

இச்சகத்தி லிதினாலென் பாவைத் தக்கார்
ஏத்திமதித் தென்கவிக்கு மதிப்பு வைத்தார்
கச்சமிது நிச்சமிது வெனக் கூறாது
கவிஞரிதை மறுப்பதற்துக் கருதிடாரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லடி வேலுப்பிள்ளை**

## இந்நாளில்...

முன்னே ஒருகவிக்கு முன்னூறும் நானூறும்
பொன்னே கொடுப்பர் புலவர்க்கு-இந்நாளில்
வாசிக்க அறியாத வம்பர் வடிக்கின்றார்
காசுக்கஞ்ஞ்ஞூறு கவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

நவாலியூர்சோமசுந்தரப் புலவர், யாழ்ப்பாணம்

## ஆடிப்பிறப்பு

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப் பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத்தெள்ளி,
வாசப் பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சர்க்கரை யுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு,

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளேஇட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப்பசி தீர்ந்திடுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்கவா யூறிடுமே

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்திவைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளிஅள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம்நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வல்வை ச. வயித்திலிங்கம் பிள்ளை**

## செல்வச்சந்நிதி முருகன் திருப்பள்ளியெழுச்சி

சீறுரு நினதருள் செறியடி யவர்தஞ்
சிந்தையி னிலமில கினவவரருள்மா
மேருறு கிரியெழு சிதமென வல்லோன்
இந்திர திசைவரை யினிலெழு கின்றான்
பேருறும் அரிமுதல் அமரர்கள் பரவப்
பேசரு மறைமிகும் ஒலியோடு பரவ
நேருறு தொண்டநன் நகறுரு வளசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

ஆண்டலை கூவின வன்னி புட்ட
மன்பொடு கூவின் புள்ளொலி பரந்த
மாண்டகு சங்கமொ லித்தன வானின்
மருவிய தாரகை மறைந்தன கடன்மேல்
ஏண்டகு கதிரவன் றோன்றின்ன் அன்பர்க்
கெளிவரு மறுமுக விறையவ மிகவே
நீண்டிடு மரநிறை வனமுறு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

தோத்திர மிசைத்திடு மடியவ ரொருபால்
சுற்றியஞ் சலிசெயு மடியவ ரொருபால்
காத்திடு வெனவரு மடியவ ரொருபால்
கைகுவித் தேதொழு மடியவ ரொருபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்திரள் சிந்திடு மடியவ ரொருபால்
பொற்புர வெங்கணு நிறையவந் தெடுத்தார்
நேத்திர மணியென குருபர வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

மணிமயி லதன்மிசை நீயிருந் தாங்கு
மறிகடன் மிசையொடு கதிரவ னுதித்தான்
அணியுறு மரைமலர் நினதரு ளடைந்த
வன்பர்த முகமென விகசித மான
கணியுறு புனமதில் வருகிற மாது
காதவோ டணைதரு வாகுமுன் நான்கா
நிணதரு படைநிசி சரர்தமை யடுசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

அயனரி முதலில் வமரர்க ளறியா
வானந்த மெய்ப்பொரு ளேநின தடித்தொண்
டியன்முறை புரியடி யவர்தமக் கெளியாய்
இன்னமு தேகரும் பேமுடி மணியே
நயனம் திடைநின்று களிதரு தேனே
நாயக னேகுக னேயறு முகனே
நியமமோ டுறுபவர்க் கருடரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

ஓதரு மொளிவிடு முனதயில் கண்ட
வுறுமயில் புரியவஞ் சனிபடை யொப்பக்
கோதரு கதிரறி யெழுவது கண்ட
கூரிரு ளழிந்தது குலவிய கழிந்த
மூதொளி மழுங்கிய துனதமர்க் கழிந்த
மொய்யறு மவுணர்த முகமென வறுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதரு மறிஞரும் வருதிரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

திறற்புய னாதிய வீரர்கள் சூழத்
திண்டிறல் கெழுமிய பூதர்கள் சூழப்
பிறப்படு முனிவரொ டமரர்கள் சூழப்
பேரயில் முதலிய படைத்திறஞ் சூழ
வறற்படு குழற்சசி மகள்குற மகளோ
டருடர வமர்தரு வறுமுக வர்த்த
நிறக்கடம் பணிபுய நிறைதரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

பச்சிலை யொடுமலர் பரிவொடு கொணர்ந்தார்
பாலுறு காவடி பலப்பல கொணர்ந்தார்
வச்சிர நவமணி மாலைகள் கொணர்ந்தார்
மாமணி செறிநன் மகுடங்கள் கொணர்ந்தார்
இச்சையோ டிருவழி முதலிய கொணர்ந்தா
ரெண்ணிய வரம்பெற வீண்டின ரிங்கண்
நிச்சய முறுதவர் தொழிதரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

ஐந்தொழில் நடம்புரி கையனு முமையு
மன்பொடு தழுவுதற் சுகநினை வுற்றார்
சிந்துர வதனவைங் கரத்தலை வனுநற்
சிரமுகந் திடவிரும் பின்னரி முதலாஞ்
சுந்தர வமரர்கள் பணிசெய வந்தாய்
தூயதன் மறைமுதற் கலையுணர் புலவ
நிந்தையி லவர்துதி புரிநிறை வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மலை முனிவனுக் கருளிய குருவே
தேவர்க ளிடர்களைந் திடவரு முருவே
அன்னையம் பிகைக்குமுன் னுறவிடு பாதா
வரன் செவி யினிற்பிர ணவமுரை நாதா
முன்னடு முடிவில தாகிய சோதீ
முத்தாக டமதுள மேவிய வாதீ
நெல்மணி வயல்புடை சூழ்திரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலியூர் சோ. நடராசன், யாழ்ப்பாணம்

## நவீன சூர்ப்பனகை வருகை

சிந்தையிடை வெந்துகனல் சீறிஎழு வேகச்
சந்ததி யலைந்துபி னெழுந்துவெளி யேகச்
சுந்தர மலர்ச்சுகனை இரண்டுசுழி யாகி
வந்ததென அந்தர மளந்தவகை கண்கள்.

இத்திசையும் அத்திசையும் எத்திசையும் நோக்கும்;
சித்தமதுன் மத்தமென மத்தனெ அலைக்கும்;
கைத்தல மசைத்திடுபை சித்தம திசைக்கும்;
எத்தியடி வைத்தகதி இத்தலம் அசைக்கும்.

பங்கயம் இரண்டுவிரி யாதுபகை கொண்டே
மங்கல மணிக்கொடி அலைத்துமயல் செய்யும்;
பொங்கிவரு மூச்சொரு புறம்பெயர்தல் செய்யா
தங்கவை முடைந்தவகை எங்கணும் விளங்கும்.

குந்தள மலர்க்குழல் குறைத்தகுறை கண்டால்,
இந்தமகள் முந்தி ஒரு வெந்தசுரம் உற்றே
ஐந்துதரம் ஐந்துபகல் ஆருயிர் பிழைத்து
வந்தனள் எனச்சொலும் வகைத்தவள் குஞ்சி.

காதிடை விளங்குவன கைவளைகள் போலும்;
கையிடை விளங்குவன காலணிகள் போலும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதிடை விளங்குவன ஒண்படிகம் போலும்;
பேதுடைய திவ்வுடை, பெயர்புடவை, பீடை!

செந்தழல் எரிந்தெனச் சிவந்த அத ரங்கள்;
சிந்துரம் அழுந்துநகம் செங்கை விரல் பொங்க,
இந்துவில் வரும்புருவம் அஞ்சனம் விளங்க,
சந்தையில் மருண்டதொரு நந்தியென வந்தாள்.

மல்லிகை மலர்ப்படு சுகந்தமென லாமோ;
மெல்லிய மருந்தளிரின் மென்மைஎன லாமோ!
வல்லியவள் வந்தவகை சொல்லிவிட லாமோ!
தொல்லையிரு வல்வினை தொடர்ந்ததென வந்தாள்!

உள்ளியை உரித்ததெனப் பல்வரிசை சொல்லும்
கல்லினை உரித்தகனி மென்முறுவல் சொல்லும்;
சொல்லுவதென், இல்லைஎன மெல்லிடைமெய் சொல்லும்
புல்லினை அசைத்தொழுகு வெள்ளமென வந்தாள்!

பாலில்வரும் ஆவிபெறு கோலஉரு வாமோ,
பாலைவரு கானல்ஒரு பைந்தொடிய தாமோ,
நூலின்வரு கற்பனை நுகர்ந்தநினை வாமோ,
வாலையவள் வந்தவகை மாலைஒளி யாமோ?

ஏதுகடை, ஏதுபெயர், எங்கிவள் அனங்க
கேதுவிரி கோலவகை கொள்ளைவிலை கொண்டாள்?
தீதில்வரு வாய்வயிறு செல்வதிலை; இந்தக்
கோதில் அணி கொள்ள ஒரு கோடிபணம் வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாயூர் மு. செல்லையா, யாழ்ப்பாணம்

## தேசீயப் புதுக் குறள்

அரசன் பிரசை அகத்துள்ளான் காந்திஎல்லார்
உள்ளத்தின் கண்ணு முளன்.

கற்றதனா லாய பயனென்கொல், காந்திமகான்
உற்ற தொண்டு கொள்ளா ரெனின்?

நாட்டிற் பெரிது நமது மகான் காந்திதனைக்
காட்டும் பரத கண்டமே.

பன்னூல் படித்தும் பயனிலரே, ராட்டினத்தின்
கன்நூல் கைக்கொள்ளா தவர்.

சிறைபோல இன்னாதஇல்லை இனித தூஉம்
முறையரசே இல்லா வழி.

அகிம்சையெனும் வாள்போ லரிதே பகையைப்
புறங்காணச் செய்யும் படை.

சுதேசப் பொருளைப் பெருக்கித் துயர்கூட்டும்
விதேசப் பொருள்விலக்கி வெல்.

பகிஷ்கரிக்க முன்னாப் பலபொருளை இங்காக்கின்
பகிஷ்காரந் தானே படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தில் நூறுமொழி சாற்றுவதில் யாதுபயன்
இங்கொன்று செய்யா ரெனின்.

நிர்ணயங்கள் வாளா நிறுவிப் பயனுண்டோ
அர்ப்பணஞ் செய் தூக்காக் கடை.

இந்திரபோ கம்வெறுத்தே எள்ளுசிறை ஏகினாார்சு
தந்திரத்தை நாடியன்றோ தான்.

கதரா லடை பயனைக் கண்டிடுக 'மான்செஸ்ரர்'
முதலாம் நகர்நிலையினால்.

இந்துமுஸ்லீம் எண்ணங்கள் ஏறுதரா சிற்சமனேல்
முந்திடுஞ் சொந்தாளுகையே முன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணன், யாழ்ப்பாணம்

## கடற்கரைக்குடிசை வாயிலில்

கடலினில் மீனை நாடிச்
சென்றதன் கணவன் தன்னை
இடையினிற் குழவி யோடும்
ஏந்திழை வருகை நோக்கி
நெடியதன் கண்கள் சோர
நெடுந்திரை கிழித்துச் செல்லும்
படகினைக் காணா ளாகிப்
பைந்தொடி வட்டங் கொள்ளும்.

வாடையின் வரவு தன்னால்
வாரியும் வலிமை கொண்டு
கோடுயர் குன்ற மென்னக்
குதித்தெழும் அலைகள் வீசி
நாடியங் கணவற் கேங்கும்
நங்கையின் உள்ளத் தோடும்
கூடியே குமுறல் கொள்ளும்
கோதையைத் திகைக்க வைக்கும்.

கணவனுங் கடலிற் சென்றான்
காரியை தன்னோ டுற்ற
குணமிகு தம்பி தானும்
கூடியே சென்றான் ஆங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவினை முடித்துப் போந்த
மூத்ததன் மகனுஞ் சென்றான்
இணையிலா திவர்கட் கேங்கும்
ஏழையார் அறியார் கொல்லோ?

கார்முகில் கவிந்து வானம்
கணத்திலோ ரிடியுங் கேட்க
மாரியும் புயலும் கூடி
வருவதோர் தோற்றங் காட்ட
ஊரினின் கரையி லுள்ள
தருவதும் ஒடியக் கொம்பர்
பேரிரை வொன்று காணும்
பேதையாள் நடுக்கங் கொள்ளும்.

தூரத்தோர் படகு தோன்றத்
துடித்திடு முள்ளத் தோடும்
சீரிய கணவன் சுற்றம்
என்றவள் திகைத்து நோக்கிப்
பேரருட் கடவுள் நாமம்
பேதையாள் பெரிதுஞ் செப்பும்
கார்முகி லிடையே வெய்யோன்
கணத்திலோர் ஒளியுங் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணன், யாழ்ப்பாணம்

## கண் கண்ட தெய்வம்

தோலெலாஞ் சுருங்கக் கண்டு
சுடரொளிக் கோலம் வற்றிக்
காலிரண் டுறுதி யின்றிக்
கையிலோர் கோலு மூன்றிச்
சாலையில் மெல்ல வூருந்
தளர்வுறு கிழவி தன்னை
மாலையி லோர்நாட கண்டு
மறித்துமென் வண்டி நீங்கி

பாட்டியுன் வறுமை தீர்க்கும்
பாரினில் மக்க ளுண்டோ?
வாட்டமிங் ககற்றி வைக்கும்
வளர்வுறு சுற்ற முண்டோ?
வீட்டினை விட்டு நீங்கி
வீதியே னலைந்து நிற்பாய்?
நாட்டம்நீ நவில்வை யாயின்
நானுமிங் குதவி செய்யும்

என்றுநல் லன்பி னோடும்
இதயத்தின் துடிப்பி னோடும்
குன்றிய பார்வை கொண்டு
கூனுடைக் கிழத்தை நோக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றெனக் குதவுஞ் சுற்ற
மிகத்தினி லெவரு மில்லை
மன்றுள் நின்றாடு மையன்
மற்றமுன் போல்வா ருண்டு

சாலையில் மெல்ல மெல்லத்
தளரடி வைத்து வைத்துக்
காலையும் மாலை நேரம்
கடைகளில் மடல்கள் விற்று
நாலிரண் டணாக்கள் சேர
நண்ணியோர் குடிலைச் சேர்ந்தே
ஓலைகொண் டிழைத்த பாயில்
உறங்கியும் வளர்வு கொள்வான்.

இ வனையான் காணுந் தோறு
மிதயமே துடிப்புக் கொள்ளும்
அவனியிற் சோம்பி வாழும்
அறிவிலி தன்னை நோவும்
நவநவ வேடம் பூண்டு
நடித்திடு வீண ரெல்லாம்
இவனையோர் குருவாய்க் கொள்ளின்
இகத்தினில் வாழ்வுங் காண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. சச்சிதானந்தன்

## உயிர் கூவும் அங்கே

அன்னநடை நடந்து நதியூரப்;
பின்னற் கொடியசைய வளியூர,
மின்னும் பனித்துளிகள் இலையாடச்,
சின்னஞ் சிறுபறவை இசைபாட,
மலர்விரியும் போதென் மனம்விரியும் அங்கே!
குயில் கூவும் போதென் உயிர்கூவும் அங்கே!

வெள்ளிக் குளிர்நிலவு மதிவீசப்,
பள்ளக் கடலருகின் மணல்மீது,
கள்ளக் கிளிமடவாள் அருகாக,
உள்ளக் கடல்திறந்து உரையாடக்;
கடல் பொங்கும் போதென் உடல் பொங்கும் அங்கே!
கரைமோதும் போதென் உரைமோதும் அங்கே!

கொம்பிற் குழைமலரும் ஓர்காவில்,
அம்புற் றளிரணைமேற் றலைசாய்ந்து,
வம்புப் புதுத்தென்றல் சுகமாக,
கம்பன்கவி வந்து நாவூறக்
கரைமிஞ்சிப் பாடும்போ தெதுவுந்தான் வேண்டேன்
உரைமிஞ்சிக் கூவும்போ துலகொன்று காண்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகவி, யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணம் செல்வேன்

இந்நாளெல்லாம் எங்கள் வீட்டுப்
பொன்னொச்சிச் செடி பூத்துச் சொரியும்
முல்லையும், அருகே மல்லிகைக் கொடியும்
கொல்லெனச் சிரித்துக்கொண்டிருக்குங்கள்
அல்லவோ? வயல்கள் எல்லாம் பச்சை
நெல்நிறைந்திருக்கும் என் நாட்டில்! பாட்டுப்
பாடாத உழவன் பாடுவான்! துலாக்கள்
ஆடாது நிற்கும் அன்றோ இன்றே!

யாழ்ப்பாணத்தை யான் அடையேனோ!
கூழ்ப்பானையின் முன் கூடிக் குந்தி
இருந்து இலைகோலி இடுப்பில் இட்டு ஊட்டிய
கரம் தெரிந்துஊற்றும் அவ்விருந்து அருந்திலனேல்,
பட்டினி போக்கா பழம், பால் இவ்வூர்
ஓட்டலின் முட்டை ரொட்டிகள்! அன்னை
பழஞ் சோற் றுண்டி கிழங்கொடு பிசைந்து
வழங்கலை நினைத்தால் வாயூறாதோ?

கடவுளே! உடனே உடுத்துக் கொண்டு
அடுத்த ரயிலைப் பிடித்துக் கொள்கிறேன்.
யாழ்ப்பாணத்தை யான் அடை வேனோ!
தாழ்ப்பாள் இட்டுத் தனிப் பெட்டியிலே
நித்திரை போய்ப் பின் நிமிர்ந்து பார்த்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தரை யன்றோ! அடடா, அந்தப்
பெற்ற பொன்னாட்டைப் பிரிந்து இனிமேலே
சற்றும் இக்கொழும்பில் தங்கேன்! இங்கே,

முலைஇளம் முளைகள் முனைந்தெழுவதனை
கலை குறைத்து அணியும் கன்னியர் காட்டவும்
'தலை இழந்தே' நாம் தடந்தோள் ஒளிக்கும்
சட்டைகள் கைகள் முட்ட இட்டும்
பட்டிகள் கழுத்தை வெட்ட விட்டும்
கொட்டிடும் வியர்வையிற் குமைவதா? இவற்றை
விட்டெறிந்து எண்சாண் வேட்டி கட்டி
முட்டொழியலாம் அம்மூதூர் செல்வேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகாகவி**

## குறும்பாக்கள்

பாஞ்சாலி ஆடையை உரிந்தார்
பாண்டவரோ கல்லாச் சமைந்தார்
"ஏஞ்சாமி!" என்ற முதாள்
இவள் களிக்கக் கண்ணபிரான்
ஆம், சேலை ஆயிரமாய்த் தந்தார்!

காதலரின் ஓவியம் வரைந்தான்
கண்ணியம் உள்ளார் என நினைந்தான்
மாதம் உருண் டோட மறு
கண்காட்சி வந்தது 'ஆ,
தீது புரிந்தார்!' என உணர்ந்தான்

நல்லையர் நெஞ்சுருகி நைந்தார்
நம்பெருமான் "வா!" என்று வந்தார்
"நில்லையா!" என்றடி யார்
நேரேபோய்த் தம்மனைவி
செல்லம்மாள் சேலையுள் மறைந்தார்!

சொந்தத்திற் கார் கொழும்பில் காணி
சோக்கான வீடு வயல் கேணி
இந்தளவும் கொண்டுவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கணமே வாணியின் பாற்
சிந்தை இழப்பான் தண்டபாணி

குலோத்துங்கன் வாகை யொடு மீண்டான்,
குவலயமே நடுங்க அர சாண்டான்
“உலாத்தங்கள் பேரில், இதோ!”
- ஒரு புலவர் குரலெடுத்து
“நிலாத்திங்கள்...“எனத் தொடங்க மாண்டான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. வேந்தனார், யாழ்ப்பாணம்

## அம்மாவின் அன்பு

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா

புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா

அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா

பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்
தோளில் போடும் அம்மா

பாப்பா மலர்ப் பாட்டைநானும்
பாடி ஆடும் போது
வாப்பா இங்கே வாடா என்று
வாரித் தூக்கும் அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலாவணன்

## துயில்

'இந்த உலகில்
இருந்த சில நாழிகையில்
எந்தச் சிறிய உயிரும்
என் ஹிம்சையினால்
நொந்தறியா...
யாதும் எனை நொந்ததிலை' என்கின்ற
அந்த இனிய நினைவாம்...
அலங் கிர்தத் தாலாட்டுக்(கு)
என் இதயம் தந்து...
பழம் பிசைந்த
பால் கொஞ்சம் ஊட்டப்
பருகி, அதைத் தொடர்ந்து
கால் நீட்டிப் போர்த்தேன், என்
கம்பளியால்.

தாலாட்டில் மாலாகி
என்னை மறந்து துயில்கையில்...வீண்
ஒப்பாரி வைத்திங்கு
உலகத்தைக் கூட்டாதே!

அப்பால் நடப்பை அறிவேன்
அதை ரசிக்க
இப்பயலை மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பித் தொலைக்காதே!
தப்பாக எண்ணாதே,
தாழ்ப்பாளைப் பூட்டி விடு!

மேளங்கள் கொட்டி, என்றன்
மேட்டிமையைக் காட்டாதே!
தாளம் மொழிந்து
நடிக்காதே! என் பயண
நீள வழிக்கு நில
பாவாடை தூவாதே!
ஆழம் அகலம்
அளந் தெதுவும் பேசாதே!

மோனத்தில் உன் உணர்வை மொண்டு
இதய நெடும் வானத்தில்
நீ தீட்டி வைத்திருக்கும்
என்னுடைய தீன உருவை
முழுதும் வடித் தெடுத்து
மீன் விழியில் இட்டு விளக்கேற்றி
தொட்டிலில் நம்
காவியத்தைப் பாடிக் களி!

பின் இயற்கையொடும்
சாவியலை எள்ளிச்சிரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலாவணன்

## தியாகம்

மங்கிவரும் பகற்பொழுது மடல்விரிந்த
தாழையெலாம் மணம் பரப்பத்
தங்கநிற மணல்மேட்டிற் றனியாக
நானிருந்தேன் தமிழும் வந்தாள்!
பொங்கியெழும் கவியுணர்வுப் போதைக்கு
விசையூட்டப் புதுநி லாவும்
எங்கிருந்தோ அடிவானில் முளைத்தங்கே
ஆழியிடை அமுதம் பெய்தாள்!

கடலழுத பேரொலியைக் கடந்தப்பாற்
கற்பனையூர்க் கரைய டைந்தால்
அட! புதுமை ஏதேனும் அகப்படுமே
என்றுவந்தே னந்தோ விந்தப்
படகருகே அமர்ந்தொருபா அடி தொடங்கிப்
பாடுவதற்குப் பழைய நண்பன்
கடலெனது சிந்தனையைக் கலைக்கின்றான்
கைக்கிளைசெய் கலக மாமோ?

அன்னையவள் கருவினிலே அடியேனோர்
பனித்துளியாய் அடைந்த வன்றே
தன்னிரண்டு கரத்தாலும் எனைத்தழுவித்
தாலாட்டித் தரணி வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னு மெனைப் பிரியாதே பேரன்பு
காட்டிவரும் பெண்ணாம் தூக்கம்
கண்ணிரண்டை அழுத்திடலுங் கவலையெலாம்
மறந்தினிய கனவு கண்டேன்.

கருமேகக் கல்லடுக்கிக் கதிரவனாம்
சிற்பியவன் கணித்த் கோட்டைப்
பெருமதியைப் பிளந்தெறிந்து வெளியேறிப்
பெண்மைக்கே பெருமை தேடிப்
பொருமுகிறா ளொருகன்னி பொழுதெல்லா
மவளையிந்தப் பூதலத்தோர்
"வருகமழை மாதரசே வளந்தருக"
வாழ்விலென வணங்கு கின்றார்.

கடலரசன் தான்விடுத்தா காற்றாமத்
தோழியவள் கடிதில் வந்தே
உடல்நுழைந்தாள் கோட்டையினுள் ஒளித்திருந்து
அங்கவள் செய்த உபாயத்தாலே
கடகடெனச் சரிந்ததங்கே கருமேகக்
கோட்டையதன் கதவு யாவும்
நடமழையே தாமதித்தால் நமனுன்றன்
தந்தையென நவின்றால் தோழி.

காற்றுரைத்த மதிப்படியே கன்னியவள்
கதிரவன்றன் காவல் தாண்டி
ஆற்றுதற்கும் அளப்பதற்கு மரிதான
ஆகாயம் கடந்து, பூமி
மேற்பரப்பிற் கால்தாவி மேனியெலாம்
புளகித்தாள்; மேன்மைக் காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றிடுமோ! புதுவாழ்வு தொடங்கிடுவேன்
கடலரசன் துணைவி யாவேன்.

தொலையாத பிறவியெனும் பெருங்கடலைத்
தாண்டவன்புத் தொண்டு செய்தே
நிலையான பேரின்ப வீடுபெற
நினைத்துலகை நீத்தார் போலும்
கலைவாணர் தம்முளத்தே கற்பனையா
யூற்றெடுத்துக் கனியுங் காதல்
அலைபாயும் நதியாகி அவள் கொண்ட
லட்சியத்தை யடையப் போனாள்.

ஓடுகின்றாள் கடல்நோக்கி உவகையோடும்
ஓர்கணமும் ஓயா தோடிப்
பாடுகின்றாள் "காதலின்றேற் சாதலெனும்"
பாரதியின் பழைய பாட்டை
காடுகளைக் கடப்பதற்கே காலமெலாம்!
போதாதோ! கனவோ காதல்?
கூடுவனோ என்னாசைக் குமரனையான்
எனவுள்ளம் குமைந்த வாறே.

பொங்கிவரும் பெருநதியாம் மங்கையவள்
காதினிலோர் புதுமைச் சேதி
எங்கிருந்தோ விழவுமதை எவருரைத்தா
ரெனத்தலையை எட்டிப் பார்க்க
இங்குலகில் விந்தைபல இயற்றுகிற
விஞ்ஞானி எனவே கண்டாள்
அங்கவனோர் குளமமைக்க ஆரம்பஞ்
செய்வதையும் அறிந்தாள் மேலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவஞ்சேர் காதலுக்குப் பரநன்மை
நோக்கமுடற் பசிய தொன்றே
முக்கியமாங் காதலது முப்பதே
நாட்களுக்குள் முடிந்து போகும்!
தக்கவர்க ளெஞ்ஞான்றும் தன்னலத்தை
எண்ணார்கள் தங்காய் கேளாய்
இக்கருத்தை நீயேற்றா லிவ்வுலகத்
துன்பமொழிந் தின்பம் பொங்கும்!

புவிப்பெரியான் புத்தனுக்கும், புகல்யேசு
முகம்மதுக்கும் புனிதன் காந்தி
கவிப்பெரியான் வள்ளலுக்கும் கட்டழகி
நின்போலும் காதல் உண்டே!
கவிக்குயிலே அவரெல்லாம் காதலித்தார்
முழுவுலகைக் கடவு ளானார்!
தவிக்கின்றாய் நீயொருத்தி கடலரசன்
தனைத்தழுவத் தகுமோ தாயே?

ஓடிவந்த பாதையினை ஒருமுறைநீ
திரும்பிப்பார் உடையூ ணின்றி
வாடிநிற்கும் ஏழைமக்கள் வரண்டுநிற்கும்
வயல்வெளிகள் வனிதை யுன்னைத்
தேடிநிற் நீயோவத் திரைகடலைத்
தேடுகின்றாய் சேவைக் காக
ஏடியன் இலட்சியத்தை இவர்க்காகத்
தியாகம்செய் இன்பங் காண்பாய்.

அழிவொன்றே இலட்சியமா யணுப்பிளந்து
உயிர்குடிக்கும் ஆயு தஞ்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழியஞ்சா விஞ்ஞானம் பரம்பரையி
லொருமகனா! பாரோ ருய்யும்
வழிவகுத்தா யுன்னடியை வணங்குகிறேன்
வாழியநீ! வையம் சாக
இழிகாதல் எனக்கேனென் இலட்சியத்தை
மாற்றிவிட்டே னின்னே யென்றாள்.

செங்கதிரோன் மகள்புரிந்த செப்பரிய
தியாகத்தாற் செய்ய பூமி
தங்கநிறக் கதிர்காய்த்துத் தலைசாய்க்கும்;
மின்சாரம் தகத கக்கும்
இங்குள்ள மாந்தரிந்த இன்பத்தைப்
பொங்கலென்றே ஏற்று கின்றார்!
மங்கைநதி குளமாகி மணிமேக
லாதெய்வ மாட்சி பெற்றாள்.

காதல்நிறை வேறாத காரணத்தாற்
கடலரசன் கவி ஞனாகி
மாதவளை எண்ணியெண்ணி மனமுருகிப்
பாடுகின்றான்-"மனிதா நீயும்
வேதனைசெய் காதலொடும் விளையாட
வேண்டா"மென் றருகே வந்து
காதலோடு மிதையுரைத்தான் கனவழியக்
கண்விழித்தேன் கவிதை கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜபாரதி

### நாமும் பிறந்தோமடி!

பட்டப் பகலைப் போலப்
பளிங்கு நிலா வெறிக்க
மட்டக் களப் பாற்றில்-குயிலி
மச்சங்கள் பாடுதடி

ஊரிகள் ஒன்று கூடி
உல்லாச கீதம் பாடி
சீரை உயர்த்துதடி-குயிலி
செந்தமிழ் ஓசையடி

நீர் நிறை வயலிலே
நெற்கதிர் சாய்ந் தாடி
சேரி சிரிக்குதடி-குயிலி
செல்வங் கொழிக்குதடி

ஓங்கி வளர்ந்த தென்னை
ஓலைகள் காற்ற சைக்க
ஏங்கிச் சலசலத்தல்-குயிலி
இன்னிசைக் கீதமடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக் கவிகள் பாடி
நன்செய்வோ ரென்று கூடி
பூட்டுங் கலப்பையிலே-குயிலி
பூதலம் ஆளுதடி

சாமி விபுலா நந்தா
சனித்திட்ட மண்ண தனில்
நாமும் பிறந்தோ மடி-குயிலி
நடையிற் சிறந்தோமடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராஜபாரதி**

## முட்டை விடுதூது

கட்டில் இடுக்கிற் கதவோர மூலைக்குள்
ஒட்டி மறைந்தூரும் வட்டஉடற்
பெட்டகமே
நெட்டுயிர்த்தே நள்ளிருட்டில் நீளக் குறட்டைவிடும்
பெட்டையவள் காதிற்போய்ப் பேசு

என்னைக் கடித்தே எடுத்த இரத்தத்தைப்
பொன்னைப் பழித்தாள்தன் பூவுடலில்
சின்னக்
கொடுக்காலே குற்றிக் கொடுத்தயரத் தூங்கல்
அடுக்கா துனக்கென் றறை.

மின்னுடலில் என் உதிரம் மேவியதும் கண்ணாளன்
தன்னுடைய எண்ணம் தலைக்கேறும்
வண்ணமகள்
நெஞ்சிற் கடித்தே நினைப்பூட்டி அன்னானைக்
கொஞ்சப்போ என்றிடித்துக் கூறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிள்ளாமற் கிள்ளு; கிளுகிளுப்பைப் பட்டாடை
உள்ளாமலே ஊட்டின் உறங்காள் அக்
கள்ளி; கடை
வாயில் திறந்தே வருவாள் எனைத்தேடி!
போ அப்பா, ஊராமற் போ!

கொட்டும் பனியிலெனை விட்டுத் துயில்வாளை
மட்டும் கடி! மாமா மாமியாரைத்
தொட்டாயேல்
கெட்டுவிடும் எம்கூத்து! கேட்டுக்கொண் டாயன்றோ?
எட்டி நட தூதுக் கியைந்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டித க. வீரகத்தி, யாழ்ப்பாணம்**

## செழுங்கமலச் சிலம்பொலி!

ஒருபொழுதென் சிந்தையிலே கனலைக் கொட்டி
மறுபொழுது மங்காத நிலவை யூற்றி
ஒரு பொழுதுங் கண்ணுறங்கா வுணர்வை யூட்டி
ஓயாது நினது புகழ் பேச வைத்துக்
குறமகளின் சிறுகடைக்கண் வீச்சுக் காகக்
கோலமயில் மீதுலவி நீ யிரங்க
அறுமுகவுன் னருட்கடைக்கண் பார்வைக்காக
அனவரதம் இரங்குகின்றேன். நீயோ நானும்?

கந்தலிலே குடிசையிலே கரைகா ணாத
கண்ணீரிற் கொட்டாவிக் கெட்ட காற்றில்
நிந்தைவிதி பதம்பார்க்க நிலைகு லைந்த
நெட்டுயிர்ப்புத் தீவிடத்தில் நின்னைக் கண்டு
எந்தைகுகன் நடமாடும் ஆல யங்கள்
இடுக்கணிலே சீரழிந்த சிறுமை போக்கி
விந்தையுறக் கொடுமுடியைத் தமிழாய் வைத்து
வீதியெலாம் விளக்கமுறும் அருள்வேட் கின்றேன்.

பருமரத்தைப் பற்றுபல்லி யாத லாலே
பயமில்லைக் கிலியில்லைப் பதைப்பு மில்லை
கரவினர்க ளுந்தியிருந் தெழுப்பும் நச்சுக்
காற்றெனக்குத் தென்றலாய்க் கவரி வீசும்!
திருவிளக்கு மயில் சேவல் தேவ யானை
தெய்வமணங் கமழ்ஞான வேலே வள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுறவிளங்கு வேங்கைமரம் முருகப நீயே!
யுனதடியைச் சுற்றுசிறு பல்லி யானே!

அறியாமைப் பேருறக்கம் அகற்றும் சேவல்!
அருந்துயரக் கருமேகம் மூடுங் காலை
நெறிமாறா மல்நின்று முறுவல் பூத்து
நீலமயில் ஆடென்று பாடஞ் சொல்லும்!
குறிபார்த்துப் பகைசாட வேல்! வயிற்றுக்
கொதியாற வள்ளி! தெய்வ யானை வேதக்
குருநாதா என்பாரஞ் சுமக்கும்! வேறு
குறையொன்றும் இலையுன்னைக் கூடு வேனே!

முத்தியைநான் விழைகின்றே னெனவாய் கூறும்
முழுப்பொய்யென் றெனதுள்ளம் தடுத்துச் சொல்லும்
சித்தமவ்வா றுரைப்பதற்குச் சிறந்த ஏது
செம்மையுறத் தன்னைத்தா னறிந்த வாறோ?
பத்திமையிற் பாவலர்கள் பாடும் பாலா!
பாம்பறியும் பாம்பின்கால்! பாவம் சிந்தை
வித்தகத்தோ டிம்மைநலம் வேண்டும் போலும்!
வேளேயவ் வேண்டுகோள் நியாயந் தானே!

ஞானிகளைக் கேட்டதுண்டு கண்ட தில்லை
ஞானியர்தம் அடிச்சுவடும் தெரிய வில்லை
மோனநிலை எதுவென்றே புரிய வில்லை
முழுமூட மானாலும் முருகா நாயேன்
வானமெலாம் மண்ணெல்லாம் வாரிக் கொட்டும்
வனப்பெல்லாம் நீயாக வரதா இன்பத்
தேனருவி பாய்ச்சுகின்றேன் சிந்தைக் குள்ளே
செழுங்கமலச் சிலம்பொலியும் கேட்கு தையா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரியாலையூர் வே.ஐயாத்துரை, யாழ்ப்பாணம்**

## இருவேறுலகம்

அறிவின் நுணுக்கம் விஞ்ஞானம்-அதில்
அதிபய மிருக்கும் அவதானம்
நெறியின் நிறைவே ஆன்மீகம்-இதில்
நிம்மதி யிருக்கும் தெய்வீகம்.

பொருளின் ஆய்வால் விஞ்ஞானம்-மின்
பொருளைப் புதுக்கும் புதுமையதாய்ப்
பொருளைப் புரியும் ஆன்மீகம்-இறைப்
பொருளைப் புகட்டும் மெய்ஞ்ஞானம்.

விழியை மாற்றும் விஞ்ஞானம்-பல
ஒளியை உதவும் உலகினிலே!
விழியை விரிக்கும் ஆன்மீகம்-மென்
ஒளியை உயர்த்தும் உளத்தினிலே.

போரைச் செய்யும் கருவிகளால்-பெரும்
புரட்சியை விளைக்கும் விஞ்ஞானம்
பாரைப் புரியும் ஆன்மீகம்-மிக
பக்தியை வளர்க்கும் பாங்குடனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய முறையைப் பரிகசிக்கும்-பல
பாதைகள் காட்டும் விஞ்ஞானம்
தொண்டினைத் தொடரும் ஆன்மீகம்-சம
தொடர்பினை ஆக்கித் துலங்கிடுமே!

விண்ணகக் கோள்களை ஆய்ந்திடவே-மிக
விரைவுறும் கோள்செயும் விஞ்ஞானம்
விண்ணக வளங்களை ஆன்மீகம்-இம்
மண்ணகத் திருந்தே மதித்துவிடும்.

இருதயம் மாற்றும் விஞ்ஞானம்-உடன்
இடர்தனை நீக்கும் இதமாயின்
இருதயம் நிறைக்கும் ஆன்மீகம்-இது
இறைவனைச் சமமாய் இசைத்திடுமே!

மன்னுயிர் பேணும் தன்மையிலார்-கை
வாய்த்திடில் வருத்தும் விஞ்ஞானம்
தன்னுயிர் போலும் மன்னுயிரை-தினம்
தாங்கும் தவமே ஆன்மீகம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சக்தி அ. பாலையா, மலையகம்**

## மாநபி மார்க்கம்

அருளொளியும் அன்பொளியும் அறிவுப் பண்பும்
அகிலத்தே புதுஉணர்வும் அளித்து மாந்தர்
பெருஒளியாம் இறைத்திருவில் கலந்து வாழப்
புனிதமறை குர் ஆனைப் போற்றி ஏற்றிக்
கருணையுடன் பிறர் பொருட்டு வாழ்க என்ற
கனிவுடைய நபிபெருமான் கருத்தைப் பேணி
ஒருபெரிய சாதனையால் உயிர்கள் எல்லாம்
உலகத்துச் சுகம்பெறவும் உறுதி செய்வோம்.

எவ்வுயிரும் தன்னுயிரென் றெண்ணி யாவும்
இறையருளால் ஆனவையே என்ப தெண்ணி
எவ்வுயிர்க்கும் இம்மியும் ஓர் தீங்கும் வாரா
இனிய ஓர் மார்க்கத்தை இஸ்லாம் என்றே
திவ்வியனாம் நபிபெருமான் முகம்ம துசொல்
தெளிவுளத்தோடருளியதன் உண்மை கண்டு
இவ்வுலகில் கருணைஎனும் இரக்கம் பூண்போம்
உயிர்களிடம் அன்பெழவோர் உறுதி செய்வோம்.

பெண்ணுரிமைச் சுதந்திரத்தைக் காத்த எம்மான்
பெரும்புரட்சிப் போர்தொடுத்த பெருமான் எம்மான்
மண்ணுலகில் நீதிநெறி மறையா வாறு
மானிடர்க்கே சன்மார்க்க மனத்தை ஈந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்நிறையும் இறைவனுக்கே எல்லாம் என்ற
விரதத்தைப் பூண்டிருந்த நபிகள் எம்மான்
பண்பறிந்து கருணைநெறி வழுவா வாறு
பல்லுயிரும் பயனடையப் பரிவு செய்வோம்.

பஞ்சமா பாதகங்கள் பரவா வாறு
பகுத்தறிந்து பெருமானார் நபிகள் காட்டும்
நெஞ்சிரக்க மிகுகருணை நெறியை நாடி
நேர்மை எழில் வழுவானது துன்ப மென்னும்
சஞ்சலத்தைத் துடைத்தெறிந்து சகத்து மாந்தர்
சமத்துவமாய்ச் சுதந்திரமாய் வாழ்ந்தால் யாரே
வஞ்சனைகள் செயக்கூடும்? வையம் போற்றும்
மாநபிகள் முகம்மது நல்மார்க்கம் வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவன்

## மனிதகுலப் புனிதர்

அன்புக்கு இலக்கணமாய் வாழ்ந்து, வாழ்வில்
அக்கிரமம் சிரம்பணிய அஹிம்சை காத்துப்
பண்புக்கு வரம்பமைத்துப் பாரைக் காத்துப்
பாவத்தைத் தூண்டுகின்ற பணிகள் கொன்று
என்புருகத் தன்னுணர்வைத் தீட்டி வென்று
இந்தியாவின் நாமத்தை உலகம் என்றும்
கண்முன்னே நிறுத்துதற்கு மார்க்கம் கண்ட
காந்திமகான் மனிதகுலப் புனிதரன்றோ!

போதிமரப் புத்தரது நிழலில் நின்று
புனிதஉரு யேசுபதம் போற்றி ஏற்றி
நீதி நெறி காத்துயர்ந்த நபிகள்நாதர்
நேர்மைமிகு சாதனைகள் அனைத்தும்பேணி
பீதியுற்ற பேதைகளுக் குணர்வு மூட்டி,
பிறப்புரிமை பேணுகின்ற வழிகள் காட்டி
தீதகற்றி வெற்றிகண்ட தூயகாந்தி
தேசுமிகும் மனிதகுலப் புனிதரன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் காதர் லெப்பை

## மனமே உலகம்

### கவிஞன்

சோலைக் குயிலிசை கேட்டதும் கற்பனைச்
சுந்தரி என்னை அணைத்து நின்றாள்
பாலொடு தேனும் பழரச மும்தந்து
பரவச மூட்டினாள் பாடலுற்றேன்.
அள்ளிப் பருகிடக் கொஞ்சவந் தாளவள்
அதரங்கள் சிவந்தது கொவ்வையெனக்
கிள்ளிவிட் டாளெந்தன் கற்பனை யையது
கிளர்ந்து குதித்தது போதையிலே,
சொர்க்கமா யிந்த உலக மிருக்கையில்
சோர்ந்து கிடப்பதேன் காதலியே
துக்க மில்லையிங்கு காவியப் பூங்காவில்
தூங்கி விட்டாற் போதும் இன்பமிதே.

### ஓவியன்

தெள்ளிய ஓடைக் கரையினிலே ஒரு
தேன்மொழி நின்று மலர்தீண்டத்
துள்ளிச் சிரித்தன அம்மலர்கள் அவள்
தூய கரம்பட்டவூக்கத்தினால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கயற் கண்ணி யவளழகை மயில்
ஆடிடு சாயலிற் தீட்டிவிட்டால்
பொங்கும் உணர்ச்சியில் வையம் எனக்கொரு
புகழை வழங்கிட மாட்டாதோ!

சந்திர சூரியர் தாரகா ரம்பையர்
சஞ்சாரஞ் செய்கின்ற வான்மதன்
இந்திர ஜால அழகினைக் கண்டவர்
இன்னுமோர் சொர்க்கம் நினைப்பாரோ!

எந்தன் இயற்கைக் காதலி யேஉன்னை
இந்தக் கரங்கொண்டு தூலிகையால்
சிந்தை மகிழ்வுறச் செய்திடு வேன்வேறு
சேவை எனக்கில்லை வாழ்வினிலே.

## பரஞானி

சீறிவரும் கடலையில் உன்னைக் கண்டேன்,
செம்மலரின் இதழ்களிலே உன்னைக் கண்டேன்,
ஆறுகுளம் செடிகொடிகள் வண்டுபூச்சி
அத்தனையும் உன்பெயரைச் சொல்லக் கேட்டேன்
மாறுகொண்ட மதகுரவர் கூறுஞ் சொர்க்கம்
மருளாகும் ஏஇறைவா நீயோ என்றால்
கூறுகின்ற திசைகளெலாம் முகமே கொண்டாய்
குறித்த சொர்க்கம் இதுவன்றி வேறுண்டாமோ!

## விஞ்ஞானி

எத்தனையோ சக்திகளை நுழைத்து வையம்
இயற்றிவிட்ட புதுமையினால் அறிவுகொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தெனவே வாழ்வதற்கு வழிகள் கண்டோம்
மிகைத்து விட்டோம் விண்ணையுமே
சிலகாற்செல்லின்
இத்தரையைச் சொர்க்கமென இயற்றி நிற்போம்
இதிலொன்றும் ஐயமில்லை இறைவா வேறு
புத்துலகம் வேண்டாமே உன்தன் சொக்கம்
புதுமையிலை அறிவிருந்தும் புண்யமில்லை!

### போகி

அழகும் மணமும் கன்னியரும்
ஆடன் மகளும் சோலைகளும்
பழகும் மதுவும் மலரணையும்
பைம்பொன் அருளும் போகமுமாய்
உழலும் இந்த வாழ்வினிலே
உணரும் இன்பம் வேறுண்டோ?
விழலாய் வேறு வாழ்வதனை
வேணடேன் என்றும் வேண்டேனே.

### யோகி

ஊனும் உயிரும் சேர்ந்தவொரு
பிண்டஞ் செய்தே யுருவாக்கிக்
கானல் வாழ்வின் போதையிலே
கண்டஞ் செய்து மாயையெனும்
நானக் குழலிற் கட்டுண்டு
நலிவும் மெலிவும் துன்பமுமாய்
ஏனிங் கலைய விட்டாய் நீ
என்றும் வையம் வேண்டேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலன்

வானுறு மதியுமுந்தன் வடிவினுக் கிணையுமோகான்
தானுறு மயிலுங்கண்டு தயங்குமுன் சாயன் முன்னே
தேனுறு மொழியாயுந்தன் தீங்கனியமுதம் மாந்தின்
ஏனுறு வேனோ துன்பம் இன்பமே வையவாழ்வோ

## குடும்பஸ்தன்

காட்டனை காட்டியெனைக் கட்டவைத்த தாலி
கடுகளவும் பிசகாது வாழ்ந்ததனால் அந்தோ
போட்டாளே புத்துயிர்கள் மூபத்துக் காணும்
புக்கிடமோ புகலிடமோ யானறியேன் நாளும்
கூட்டாக உழைத்த தெலாம் கும்பியரை காணும்
குடும்பந்தான் பெருகிறதே பெருகிறதே இன்னும்
சாட்டாங்கம் பண்ணுகிறேன் தற்பரனே வையம்
சங்கடமாய் விட்டதும் சரணம் நீ சரணம்.

## பாட்டாளி

கூழுக்கு நாட்கூலி கொண்ட வர்க்குத் தார்க்கூலி
பாழுக் குழைத்துமென் பலன்கண்டேன்-நாளுக்கு
வாழ்ந்ததே யன்றி வகையறியேன் இம்மண்ணில்
வீழ்ந்ததே வந்த வினை.

## ஏழை

கந்தற் றுணியும் கால்வயிற்றுக் கோர்கூழும்
தந்தவர்க்குச் சொர்க்கம் தருவாயோ-அந்தமிலா
ஆதி இறைவா அலைகின்ற எங்களுக்கென்
நீதி புகல்வாயோ நீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

உலகில் வாழ்ந்தோர்க் கலகேயில்லை
ஒவ்வொரு வருக்கும் வேவ்வே றுலகம்
மனமே உலகம் மருளே மற்றவை
கலைஞன் உலகம் காவலன் உலகம்
விலைமாதுலகம் வீணர்க ளுலகம்
என்று பலபல எண்ணி யுரைப்பினும்
உலகம் ஒன்றே நன்றே யதனிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அண்ணல், திருக்கோணமலை**

## நிலையாகுவேன்

தண்புனல் நிறை வாவியில் வளர்
தாமரை எழில் வதனமோ?
கண்களாம் வெறி கொண்ட வண்டுகள்
கலவியின் முளை யிட்டதோ
பண்கலந் திசை பாய்ச்சுதல் மொழி
பால்பழம் பிழி சாறதோ?
என்னுளங் குடி கொணடவள் எழில்
மின்னலாம் இடை பெற்றளோ?

வெட்டு வேலையில் கெட்டியாம் எனும்
வல்லவன் நிறை வெண்ணிலா
கொட்டு மாரியில் குளிர்மை யூட்டியக்
குடவான் மாலைது டிச்சலில்
இட்டெடுத்த பொற் பாறையிற் சிலை
வெட்டவே உயிர் பெற்றதோ?
கட்டளம் உடல் கூட்டிடுஞ் சுவை
கருத்தினில் நிறை வுற்றது.

செய்ய மாதுளஞ் செங்கனி சித
றுண்டதோ நகைச் செவ்விதழ்
துய்ய தேனிலே தோய்த்ததோ விரு
கன்னம் தக்காளிச் சாதியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவன் ஒளி தன்னிலே சுடர்
மேவிடும் நுனி மூக்கிலே
செய்யுமே வெறி சேயிழை உளம்
சேர்வளே மயல் சேர்ப்பளே.

நெருங்கினால் குளிர் மருவுவாள் அயல்
நீங்கினால் அனல் தொடங்குவாள்
மருங்கினா லெனை மயக்குவா ளிரு
மாதுளங் கனி மார்பினால்
நெருங்கினால் எழில் நடையினால் மயில்
நெஞ்சிலே அரங் கேறினாள்
உறங்கிலேன் அவள் உறவிலே கலை
உலகிலே நிலை யாகுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணல்

## தளர்வு

கொல்லையிலோடியுங் குளிர்நில வாடியுங்
கோதை யுறங்கவில்லை-காதற்
போதை இறங்க வில்லை.

ஒல்லை வரு வேனென் றோதிய காதலன்
ஊரை யடைய வில்லை-அவள்
போரும் முடிய வில்லை.

தென்ற லசைந்தது திங்க ளுலா விற்று
தேற்ற ஒருவ ரில்லை-அவை
போற்ற ஒருவ ரில்லை,

அன்றில் குலாவின அன்பால் இணைந்தன
ஆளன் வரவோ இல்லை-அவள்
தோளைப் பரவ வில்லை.

தென்னை யிளங்கீற்றில் சின்னக் கிளிச் சோடு
தம்மை மறந்தனவே-துயர்
வெம்மை பறந்தனவே.

இன்னல் காலைப்பனி எங்கோ பறந்திட
இளஞ்சுடர் தோன்றவில்லை-இன்னும்
களம் வந்து சேர வில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயிலிசை தீற்றின மயிலின மாடின
குமரியோ ஆட வில்லை-வந்தே
தமரின்னும் பாடவில்லை.

வெயில்பட இருள்வரும் வேதனை பலதரும்
துயில் கொள எண்ண வில்லை-இந்த
மயிலாட நண்ண வில்லை!

முல்லை மலர்ந்தன மல்லிகை பூத்தன
அள்ளி இறைத்த துவே-மணம்
கொள்ள உரைத்த துவே.

இல்லையவ ரெனில் இக்கருங் கூந்தலை
அள்ளி முடிப்பவ ரார்?-அவளைப்
புல்லி அணைப்பவ ரார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திமிலைத் துமிலன்**

## நாளை பிறப்பது நம்முலகு

ஆழிப் புதையலை மேழிக் கரத்தினால்
அள்ளிக் குவிக்க அனற்குளிக்கும்
ஏழை உழவனைத் தேடிக் கலயத்தை
ஏந்தி நடக்கிறாள் செங்கமலம்-அவள்
தோழமை கொண்டநற் காதற் கொழுநனின்
தோளிலே தங்கக் குவைமிதக்கும்-பெரு
நாளை நினைந்தவள் கீதம் இசைக்கிறாள்-
நாளை பிறப்பது நம்முலகு!

கட்டி இரும்பைக் கனலிற் கொளுத்தியே
காய்ச்சி அடித்துக் கனியவைத்து
வெட்டிட மண்வெட்டி, கத்தி, கொழுவிவை
வேர்வையை ஊற்றி மிகப்படைத்தும்,-குடல்
ஒட்டிய பள்ளம் நிமிரவில்லை; கூரை
ஓட்டை மழையும் ஒழியவில்லை-அவன்
நட்பில் உருகிடும் நாகிசொல் வாள் இது-
நாளை பிறப்பது நம்முலகு!

செத்த மரத்தினைத் தேடி இழுத்துச்
செதுக்கி அறுத்துப், பொருத்தி, இதோ
புத்தம் புதுக்கட்டில் சோபா எனப்பல
பூட்ட உதிரம் பொழிந்துழைத்தும்-அவன்
சத்தியம் செய்தது போலத்தங் கத்துக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்தில் தாலி சமைக்கவில்லை!-வெறும்
நத்தைப் பிறப்பென நாணி நவில்கிறான்-
நாளை பிறப்பது நம்முலகு!

தோட்டத்தில் தேயிலைக் காட்டுக்குள் கூடையைத்
தூக்க எழும்வலிப் பூட்டுக்குள்ளே
ஓட்டத்தி லேதளிர் கிள்ளி நிறைத்தங்கே
ஓடாய் உழைக்கிறாள் மாரியம்மா-அவள்
தேட்டச் சிறுமி மலர்ந்துவிட் டாள்; வாக்குச்
செய்து கொடுத்தாச்சு மாப்பிளைக்கும்-அதை
நாட்டப் புரளுமா நாலுதுட்டு? சொல்லில்
நாளை பிறப்பது நம்முலகு!

வீட்டுப் படிகளில் றோட்டுக்கு றோட்டாக
வீணாய் அலைகிற லட்சுமிக்குச்
சாட்டுக் கொருகந்தல் மார்பை மறைக்குது
சாவுக்குக் கெஞ்சுது கண்குழிகள்!- நெஞ்சக்
கூட்டுக்குள் ளேஉயிர் மூச்சித் துடிக்குது;
கும்பு கொதிக்குது வெம்பசியால்-இந்த
நாட்டுப் பிரசை அவளும் நினைப்பது-
நாளை பிறப்பது நம்முலகு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரமிள் சிவராமு**

## இறப்பு

சிறிதில் பெரிதின் பளு
பாழின் இருளைத் தொட்டுன்
நுதலில் இட்ட பொட்டு
பார்வைக் கயிறு அறுந்து

இமையுள் மோதும் குருடு
ஒன்றும் ஏதும் இன்றி
இன்மை நிலவி விரிதல்
வண்டியை விழுங்கும் பாலம்

மஞ்சம் கழித்த பஞ்சு
கூட்டை அழிக்கும் புயல்
புயலில் தவிக்கும் புள்
வாழ்வின் குழலைத் துறந்து

என்றோ இழந்த வாசக்
காற்றுள் வீழும் ரோஜா
துணியே நைந்து இழையாய்
பஞ்சாய்ப் பருத்தித் திரளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னே திருகும் செய்தி
காற்றை விழுங்கும் சுடர்
சுடரை உறிஞ்சும் திரி
வினையில் விளைவின் விடிவு
விளையா விடிவின் முடிவு

தொடங்காக் கதையின் இறுதி
நிறுத்தப் புள்ளிக ளிடையே
அச்சுப் பிழைத்து
அழித்த வசனம்
வெறும்
வெண்தாள்ச் சூன்யம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ. அம்பிகை பாகன், யாழ்ப்பாணம்**

## பாரதியே, மன்னிப்பாயா!

சீரிளமை சொட்டுகிற
சின்னஞ் சிசு கண்டு
பாரதியே என்றுசொன்னேன்
பாசத்தோடுன் பெயரை.

நோயுற் றுடல்தேய்ந்து
நொந்து சுருளுகையில்
தாய் தூக்கிச் சென்றவுடன்
தரும மருந்து பெற்றான்

கடி வயிற்றுப் பசியகற்றக்
கஞ்சி வைக்க வேண்டுமெனில்
படியரிசி இலவசமாய்ப்
பாரதியும் பெற்று வந்தான்.

ஆனாச் சுழித் தெடுக்க
அறிந்த தினம் முதலாய்ப்
பேனாப் பிடித் தெழுதிப்
பெருகுப் கலை தேர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தோ டொத்த புதுக்
கல்வி கலை பயிற்றுஞ்
சாலை வரை இலவசமாய்ச்
சங்கதிகள் கற்று வந்தான்

இத்தனையும் பெற்றதன் பின்
இனியோர் தொழில் தேவை.
அத்தொழிலால் இந் நாட்டில்
அதிகம் 'சுவறாது'

சொற்பங் கொடுப்பார்
சொகுசாக வாழுதற்குப்
பற்றாதது வென்று
பரதேசஞ் சென்றுவிட்டான்.

இந்நாட் டியற்கை வளம்
இது வென் முருசொமென
இந் நாட்டுச் செல்வத்தை
இறைத்ததையா, இந்நாடு!

என் நெஞ்சம் வேகிறது
இவனுக்கா உன் நாமம்
மன்னித் திடுவாயா
மாகவிஞ! மாகவிஞ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. அம்பிகை பாகன்

## பஸ் ஹோல்ற்

வசுத்தரிப் பொன்றில் அன்றும்
வரிசையில் தூங்கி நின்றேன்...
பசித்ததால் என்றோ எங்கோ
பரிவினைப் பெற்ற பேதை

பெற்றவக் கருணை யாலே
பிறந்ததைக் கையி லேந்தி
குற்றுயிர் இரண்டைக் காக்கக்
குரல்கொடுத் தாங்கே வந்தாள்.

சற்றுமே கிறுங்கா தோர்தம்
தலையசைத் தகலச் சொன்னார்.
பெற்றவர் பெண்கள் கூடப்
பிறதிசை எதையோ பார்த்தார்.

பற்றியென் னுள்ளம் வேகப்
பையிலே கையைப் போட்டேன்
சற்றொரு சதத்தை யேனும்
தருமமாய் விடுவோ மென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்திடப் பார்த்த போதில்
என்பணப் பையே இல்லை!
'அடி'த்தவர் எவரோ-மெல்ல
அசைந்ததென் தலையும், அந்தோ!

தலையசைந் திடுமவ் வேளை
தாவியென் மனதில் இந்த
உலகியல் அழகே ஆங்கோர்
உருவக மாகக் கண்டேன்.

'அடி'த்தவன் சிரித்துச் சென்றான்
அழுதவன் அழுதே சென்றான்
நடுத்தெரு வழகே இந்த
நானிலத் தியல்பாம் அம்மா!

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்னியூர்க் கவிராயர்**

## மறக்கப் போமா?

பிறர்வாழ்விற் பின்பற்றி உய்தற்கான
போதனைக ளத்தனையுந் தியாகியாய்ச் சீர்
பிறழாமற் சாதனைக ளாக்கிக் காட்டும்
பெருந்தலைவர்க் கிலக்கணனே! மனித வாழ்வு
சிறப்படையத் தனிமனிதன், குடும்பம், சிற்றூர்,
தேசம், உலகம், தலைவர், தொண்டர் நெஞ்சில்
அறநெறி, சத்தியம், அகிம்சை, கூட்டுவாழ்வு,
ஆத்மீக சக்தி, தொழில், பொருளாதாரம்,
அறிவு, கல்வி, ஆற்றல், அன்பை(ப்) பசுமரத்தின்
ஆணியதாய்ப் பதித்தவுனை மறக்கப் போமோ!

மாந்தருய்ய வழிகாட்டும் ஒளிவிளக்கே!
மகாத்மாவே! ஆத்மீக சக்திதன்னைக்
காந்தசக்தி தனிலுயர்ந்த சக்தியாக்கிக்
காசினியைச் சுயநலத்தாற் சீரழித்த
வேந்தர்களை நாற்படையை ஆயுதத்தின்
வீறாப்பைப் பலாத்காரந் தனையெதிர்த்துச்
சாந்தவழி தனிலகிம்சைக் கவசந்தாங்கிச்
சத்தியப்போர் புரிந்து வென்று சுதந்திரத்தை
ஈந்தகலங் கரைவிளக்கே! காந்தீ! நின்னை
இவ்வுலக முள்ளளவும் மறக்கப் போமோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. பார்வதி நாதசிவம்

## அறம் கூறும் வாழ்வு

சிறப்பெலாம் ஒத்த தலைவனும் மற்றும்
தலைவியும் சேர்ந்து 'நாம் காணும்
பிறப்பெலாம் சற்றும் பிரிந்திடோம்!' என்னும்
பெருமைகொள் முடிவு செய் தனராய்,
அறத்தையே தங்கள் உயிரெனக் கொண்டும்,
அரியபே ருழைப்பினால் வந்த
வெறுக்கையே உடலைப் பேணுமென் றோர்ந்தும்
மேவும் ஓர் வாழ்க்கையே வாழ்வு.

எழிலினால் தோன்றும் ஞாயிறே போன்றும்,
எவர்க்கும்நல் லின்பமே செய்யும்
மழலையால் நல்ல கன்னலே போன்றும்,
வாழ்வினை நிறைவுறச் செய்யும்
குழவியை ஈன்றே அவள்நகை பூப்பக்,
கோதிலா அன்பினாற் பெற்றோன்
அழகுறச் சேயோ டவளையும் தழுவும்
அருமையே அறம்சொலும் வாழ்வு,

மருவு கேண்மையினால் வருவதும் மற்றைப்
புதியதாய் வருவதும் ஆய
இருவகை விருந்தும் பேணுமோர் இனிய
இல்லறத் தலைக்கடன் புரிந்தும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருவிலாப் பண்பால், இன்சொலால், அன்பால்
புவியொடும் தொடர்புபூண் டனராய்
திருவெலாம் சேர மகிழுமோர் வாழ்வே
தீதிலா அறம்சொலும் வாழ்வு,

உளமெனும் வயலில் பொறையும், ஒப்புரவும்,
உயர்புகழ் நடுநிலை இவையும்,
வளமுறும் ஈகை, அடக்கமும் சேர்ந்தே
வளர்ந்திடும் பயிரதாய் விளங்க,
இளிசெயும் சினமும், பொறாமையும், இவற்றின்
இனத்தவாம் களையெலாம் களைந்தே
ஒளிசெயும் அமைதி எனும்கதிர் பெறவே
உழைத்திடல் அறம்சொலும் வாழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. பார்வதி நாதசிவம்

## மெய்யின்பம்

அன்பொடும் என்னைத் தாயார்
அணைத்தலும் கதைகள் கூறி
நன்மைசேர் உணவு யாவும்
நல்கலும் இடங்கள் தோறும்
பொன்றுடை சிறப்பக் கூட்டிப்
போதலும் தாமே மண்ணில்
இன்பமென்றெண்ணி னேனே
சிறுவனாய் இருந்த நாளில்!

ஆற்றினில் குதித்தல் கொம்பர்
அளித்திடும் காய்கள் உண்ணல்
சேற்றினை அள்ளிப் பள்ளிச்
சிறுமியர் மீது சிந்தல்
நூற்றுவர் நண்பர் சூழ
நோவன பலவும் கூறல்
ஆற்றுதல் இன்பம் என்றே
எண்ணினேன் பள்ளி வாழ்வில்!

கன்னியர் விழியால் கொஞ்சம்
கவினினில் மயங்கல் அன்னார்
பொன்னுடல் தழுவல் பேச்சில்
புவியினை மறத்தல் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னலை இதழிற் கண்டு
களித்திடல் இன்பம் என்றே
எண்ணினன் பருவம் என்னும்
எல்லையை அடைந்த காலை!

செல்வத்தை ஈட்டல் தேர்தல்
செருவிலே வெல்தல் மற்றோர்
சொல்புகழ் எய்தல் என்னால்
தொல்லுல கியங்கும் என்றே
மெல்லவே நினைத்தல் என்னை
மெச்சுதல் இவையே இங்கு
சொல்லரும் இன்ப மாகத்
தோற்றின இடைநாள் வாழ்வில்!

இன்றுயான் முதுமை என்னும்
இருட்டறைப் புகுந்தேன் பார்வை
குன்றிற்றுச் செவியும் கேட்கும்
குணத்திற்குத் தொலைவில் ரத்தம்
என்றதும் வற்றிக கையில்
எடுத்தனன் ஊன்றுங் கோலை
அன்றின்பம் என்ற எல்லாம்!
அவனியில் பொய்த்த என்பால்!

பருவங்கள் தோறும் இன்பம்
பாரினில் மாறும் என்ற
மருமத்தை யானும் இன்றே
மண்ணிடை உணர்ந்தேன் என்றும்
திரிபின்றிப் பருவம் தோறும்
திகழ்ந்திடும் பிறவி தோறும்
ஒருபொருள் இன்பம் செய்யும்
உரைக்கரும் தெய்வம் ஆகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் ஜெயம்

## அன்றிலின் குரல்

அங்கமெலாந் தங்கமெனத்
திகழ்ந்தாய்; அன்பின்
அலைகடலாய் உந்தனுளந்
திறந்தாய்; வானத்
திங்களெனக் கருணையொளி
பொழிந்தாய்; வாழ்வில்
திசையனைத்தும் சேவைசெயப்
பறந்தாய்; எங்கும்
பொங்குமலர்ப் புன்னகையைச்
சொரிந்தாய்; யேசு
போதனையாம் வாழ்வதனிற்
கலந்தாய், இன்றோ
எங்களுயிர் கவர்ந்தோடி
மறைந்தாய் ஐயா!
ஈசனடி நீழலிலே
இன்பங் காண்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை சுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணம்

## அண்ணலுக்கு அஞ்சலி

வெள்ளையரின் ஆட்சியிலே அடிமைப் பட்டு
வீழச்சியுற்ற பாரதத்தாய் விலங்கொ டிக்க
உள்ளமுவந் துடலாவி பொருளை யீந்த
உத்தமனார் காந்திநெறி பரவு மாயின்
கொள்ளைகொலை பேராசை குடிப்ப ழக்கம்
குறுகுமனப் பான்மையெலாம் அழிந்தொ ழிந்து
வெள்ளமெனச் சாந்தியொளி வைய மெங்கும்
மேலோங்கி வீசுமிதில் ஐய மில்லை!

அன்பாலே அறிவாலே அகிம்சை யாலே
அசையாத தாய்நாட்டுப் பற்றி னாலே
பண்பாலே பயனுள்ள செய்கை யாலே
பற்றற்ற தெய்வீகத் தொண்டி னாலே
உண்ணாமை நோன்பாலே உறுதி யாலே
உயர்வுதாழ் வில்லாத வாழ்க்கை யாலே
அன்னியரை வெளியேற்றி வெற்றி கண்ட
அண்ணலுக்கெம் அஞ்சலியைச் செலுத்துவோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழவாணன்

## கல்லாகிப் போ!

நெஞ்சைக் கிழித்து நெருப்பிட்டே, வேறுபுதுப்
பஞ்சணையைத் தேர்ந்துவிட்ட பாதகியே!-அஞ்சி அஞ்சி
வீட்டுக் கதவில் விழிநீர்ஏன் கொட்டிநின்றாய்?
பூட்டு கதவிழுத்து, போ!

கொல்லாதே இன்னும்; குடையாதே நெஞ்சத்தை;
நில்லாதே என்னெதிரில்; நீ சமைக-கல்லாக!
வாட்டாதே வேற்றவனின் வாசலிலே நின்று, மயற்
போட்டுக் கொளுத்தாதே, போ!

அல்லும் பகலும் அணைத்துக் கிடந்துனை என்
சொல்லில் வடித்ததுவும் சொப்பனமோ?-உள்ளத்தில்
நட்ட பெருங்காதல் நாற்றோ பிடுங்கிவிட?
ஓட்டைப் பிறத்தவளே, ஓடு

வட்ட விழிவீசி வந்துன் சடைக்கயிற்றால்
கட்டி இழுத்தழித்த காரிகையே-கிட்ட இருந்து
அன்று மொழிந்ததெலாம் ஆபாசம் ஆக்கிவிட்டாய்;
ஒன்றைப் பிளந்தவளே, ஓடு!

இன்னும் சிலநாளில் இட்டசிதைக் காட்டினிலே
என் ஓடு மூடி எரியுங்கால் - உன்நினைவு
வேகாதோ?வெந்துபிடி வெண் சாம்பல் நீறாகிப்
போகாதோ? அப்பாலே போ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திமிலைக் கண்ணன், மட்டக்களப்பு**

## நியதி!

நெஞ்சைக் கிழித்துப் பிளந்து-தெய்வ
நீதியைக் கிள்ளி யெடுத்து
நஞ்சென மாற்றிடல் நன்று-கொடும்
நம்பிக்கை யென்னும் பேய்தனைப் பொல்லா...
வஞ்சக மாந்தரி னுள்ளே-இனி
வாழ விடுவது தீதினும் தீது!
அஞ்சி யஞ்சி மனம் மாள-அவ
மானப் படுவதோ நீதி?

நஞ்சை அமுதெனச் செய்தேன்-கொடு
நாகத் துடன் உற வுற்றேன்
தஞ்சம் புகுந்தவர் தம்மை-உயிர்ச்
சக்தி கொடுத்துயிர் மீட்டேன்!
பிஞ்சம் குழந்தை களோடு-கிழப்
பிண்டங்களும், உயிர் பெற்றார்;
கொஞ்சமும் நீதி இல்லாது-அருட்
கோட்டை தகர்ந் திடலாமோ?

வஞ்சக மாந்தர்கள் தூற்ற-யோக
வாழ்வு நலிவுற லாமோ?
பஞ்சைப் பராரிகள், உள்ளே-தெய்வ
பக்திக்கு நான்விதை நட்டால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சல் முளைத்தெழ லாமோ?-விதி
காலனெனவர லாமோ?
"மிஞ்சி விட்டாய் துணிவே, நீ!-உன்னை
மிதித்து நிலத்தினில் வீழ்த்தி........

அஞ்சே லெனுங்கரந் தன்னை-அடி
சாயப் புடைக்கிறேன்" என்று,
மிஞ்சிவிட்டாய், விதியே நீ! என்னை
மீறி விட்டாய் விதியே நீ!
அஞ்சாத நெஞ்சத் துணிவால்-அருள்
ஆற்றல் எனுங் கடலுள்ளே;
பஞ்சம், பசி பிணி யின்றித்-தெய்வ
பக்திப் படகினிற் சென்றேன்.

மிஞ்சி விட்டாய் விதியே! நீ!-என்னை
மீறி விட்டாய் விதியே நீ!
நஞ்செனும் போர்வையில் வந்தாய்-நடு
ராத்திரி வேளையில் என்முன்
வஞ்சக மாந்தரி னுள்ளே-இள
வாட்டமா, அந்தக் கிழவன்
அஞ்சியஞ்சி உயிர்விட்டான்-அதை
யார்தான் பிடித்திட வல்லார்?

பிஞ்சும் அரும்பும் உதிரும்-முது
பிஞ்சும் கனியும் உதிரும்!
அஞ்சுதல் என்மடை நெஞ்சே?
அசடாகிப் புலம்புதல் வேண்டா!
வஞ்சனை நீசெய்த துண்டா?-பிறன்
வாழ்க்கை நியதியை மாற்றுதல் நன்றா?
சஞ்சலம் விட்டொழி கென்றான்-அருட்
சக்திக்கனல் அறிவாகிய கண்ணன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. சிவானந்தன், யாழ்ப்பாணம்

## ஏலுமெண்டால் நீ விளங்கிப் பார்!

மண்டை மழுமண்டை மொக்கு முழுமண்டை
எண்ட நிலை எய்த எங்களுக்கு வழிதெரியும்;
'சொந்த சுயபுத்தி தன்ரை சுய ஆதாரம்
உந்தி வெளிப்பட்டு உருவாகும் செயலாற்றல்
வந்து விடுமென்றால் வழிதுறையைக் கண்டிடலாம்'
என்ற ஒரு சாயல் இருந்தெம்முள் முனகிடினும்,
வந்த வழிமுறைகள் வாழையடி வாழைமுறை
முந்தை மரபுவழி முன்னின்று திசை திருப்பும்!

எடுத்து விசர்த்துரைத்து இல்லாத பொல்லாத
கருத்து வலிந்தெடுத்துக் கடுமைப் பொருளாக்கி
வெருட்டி எமைக் குழப்பி விசர் அரும்பும் ஒரு நிலையில்
கலக்கி உருக்குலைத்துக் கனன்றிடுமோர் ஓமத்தீ
விசுக்க வளர்த்தெடுத்து விரதங்கள் காக்க வைத்து
விரக்தி உறுமூடல் வேள்வித்தீப் புகைமயக்கிய
மந்திரங்கள் தந்திரங்கள் மாயைபுரி குறளிவித்தை
என்பவற்றின் இடையே தான் எம்மவரின் கருத்து உதிரும்

தோலுரித்த பழம்புண்ணில் தேய்த்துறிஞ்சி ரசிப்பதிலே
ஆனமட்டும் மினைக்கெட்டோம் ஆனவிடிவு ஏதுமில்லை
பூதலத்திற் பிறந்தவர்தான் புத்தியுள்ள சீவன் என்றோம்
சாலும் இயல்பான பல சங்கதிகள் தெளியாமற்
சுப்பற்ற கொல்லையிலே செக்கிழுக்கும் மாடுகளாய்ச்
சுற்றிவந்து சுற்றிவந்து சேருவதோ ஓரிடத்தில்;
காலும் பலம் இழப்பக் கண்டபலன்...? எம்பெருமான்
ஏலுமெண்டால் நீ விளங்கிப் பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நூலகப் பிரிவு,
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

ஏ. பெரியதம்பிப் பிள்ளை, மட்டக்களப்பு

## உத்தமத் திலகம்

சத்தியத்தின் வாழ்வு
தருமத்தின் வைப்புலகில்
உத்தமர்க ளுள்ளே
ஒருதிலகம்-பக்திவளர்
சாந்திநிலை சாத்துவிக
சக்திக் குதாரணமாய்க்
காந்திமகான் தன்னையே காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. வி. வேலுப்பிள்ளை, மலையகம்

## புதிய பாதைகள்

ஓசை இன்மை கொண்டமைந்த தொருகுகை;
அதனுள் அடக்கிய அசைவிலா ஒரு குரல்;
உனது திரத்துப் பறித்த விண்மீன்களால்-
அந்தக் குரலின் நடுவை நீ அதிர்த்தனை
வண்டிச் சில்லடிப் புழுதி ஆவதை
ஆக்கினை, ஊழி யொன்றாக-
எங்களுக்குரிய நாளைய ஊழியாய்
வழிகளின் முடிவைக் குறிப்பதற் காக
விளக் கெடுத்து நீ பிடிக்கின்றனை!
வெண்ணிழல் புதிதவை வீசும்
புதிய பாதைகள் தொடங்குதற் கெனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

163438



**சரவணமுத்து, யாழ்ப்பாணம்**

## மகாத்துமா

அன்போ டகிம்சைசேர் சத்தியம்-என்ற
அரிய படைப்பலத் தாற்பிறர்
துன்பப் பகைப்புலம் வென்றுதன்-பேரைத்
துலக்கி மறைந்த மகாத்துமா
மண்ணிற் பிறந்தநூ றாவது-ஆண்டை
மதித்துத் துதிக்குமிவ் வேளையில்,
அண்ணில் இலட்சிய சாதனை-யாவும்
அறிந்தகி லஞ்செயலா ற்றுமோ?

சாதி மாநிறச் சண்டைகள்-எல்லாம்
சகத்தில் ஒழிந்திட வேண்டுமே;
நீதி சமத்துவ நேர்மைகள் எங்கும்
நிலைத்துத் தழைத்திட வேண்டுமே;
ஆதி பகவனை நம்பியே-மக்கள்
அரசும் பலம்பெற வேண்டுமே;
கோதில் மகாத்துமா கொள்கைகள்-சாந்தி
கொடுக்கும் மருந்தென வேண்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே. கணேஷ், மலையகம்

## கூனை நிமிர்த்திடு!

வெண்மை கருகிடும்
வெங்கலி யுகத்தினில்
உண்மை குறுகிடும்
உண்மை உணர்த்தினை
கேடுகள் தீர்த்திடும்
கிருத யுகத்தினை
கூடுமிக் காந்தியின்
கோல யுகமென
கூட்டிக் கலந்திடு
கூனலை நிமிர்த்திடு
கேட்டினைப் போக்கிடக்
கேட்குவன் இறைவனை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கன், யாழ்ப்பாணம்

## அன்புக்குச் சமாதி கட்டி

அன்புக்குச் சமாதி கட்டி
யமைதியைச் சிதையி லேற்றி
வன்புக்கு வாழ்த்துப் பாடி
வாழ்ந்தவர்க் காகக் காந்தி
என்புட்கி யுடல முட்கி
எரிந்துமே சாம்ப ராகி
விண்புக்க நிலைமை யெண்ணி
விழிகணீர் சொரியார் யாரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு முகையதீன்

## பார்த்தால் வருமோ பழி?

காலை எழுகின்றேன் காதலியே உன்குரலை
நீலக் குயில்கள் நிகழ்த்துவதைச்-சோலையிலே
கேட்டுன் நினைவால் கிறுகிறுத்துப் போனேன்யான்
வாட்டா தெனைக்காண வா!

அன்றொருநாள் நாமிருவர் ஆற்றோரம் சந்தித்து
நின்று கதைத்த நினைவுகளை-இன்று மனம்
எண்ணிக் கிளுகிளுப்பால் ஏங்கித் துடிக்குதடி!
கண்ணே எனை வந்து காண்!

ஆனைக்கொம் பொத்த அழகிய மார்பகத்தை
ஏனோ மறைத்தாய் இளமயிலே-நானுமதைப்
பார்த்த முதற் கொண்டு பாவையே உன் நினைவால்
வேர்த்து வடிகின்றேன் வீண்!

நிம்மதியைத் தேடியங்கு நீள்கடலின் ஓரத்தில்
அம்மணியே நான்போய் அமர்ந்தாலும்-உம்முருவை
வானத்தில் தோன்றுகின்ற வண்ணநிலவினிலே
காணத் துடிக்குதடி கண்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தை யள்ளி யுன்றன் பூமார்பி னோடணைத்துப்
பித்தேற்றிச் செல்கின்ற பெண்ணாளே, -நித்தமுனைப்
பார்த்துக் களிப்பதற்காய்ப் பாதையிலே நிற்குமெனைப்
பார்த்தால் வருமோ பழி

உன்னை மறந்தே உலகத்தில் ஓர் கணமும்
கண்ணே நான் வாழ்தல் கனவாகும்-என்னை
மறந்தே ஒருவரை நீ மாப்பிள்ளையாய்க் கொண்டால்
இறந்தேகாண் போவேன் இனி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலியுகன்**

## காப்பியத் தீ

தீயின் தேவா என் நாட்டை
 தீண்டா திருப்பாய் என்னாளும்
பேய் போல் வீசும் புயலே நீ
 போய் என் நாட்டை யழியாதே
பாயும் வெள்ளப் பெருங்காடே
 பரவாதிருப் பாய் என வரத்தை
தாய் போய் இட்ட இராவணனின்
 தங்க நாடா தீக் காடு?

ஈழ நாட்டை மதுரை தனை
 எரித்த அந்த இருவருக்கும்
வேழ மறவர் பேரறிஞர்
 வேலை யின்றிக் கோவில் கட்டி
காலந் தவறாப் பூசை யிட்டு
 காணி நிலமும் பொருள் பலவும்
மூல தானம் பண்ணி வைக்க
 முட்டாளில்லை நம் தமிழர்.

ஏட்டைச் சுட்டுப் பொசுக்குவதும்
 எண்ணக் கடலைத் தடுப்பதுவும்
வீட்டைச் சுட்டுப் பொசுக்குவதும்
 விளையும் பயிரை அழிப்பதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டைச் சுட்டுப் பொசுக்குவதும்
நமது இலக்கியக் கொள்கையெனில்
சாட்டை கொண்டு அதைச்சாடி-எங்கள்
சந்ததிக் காக வழி சமைப்போம்.

நீதி நிலைக்க அவைக்களத்தில
நிலைமை தன்னை உடைக்கின்றாள்
நீதி பற்றிக் கொண்டதந்த
நிலையில் மதுரை தீக்காடாய்
நீதிக் கடவுள் பாண்டியனும்
நிலையே தவறி வீழ்ந்துவிட
நீதிச் சுடராம் கண்ணகியே
நெஞ்சில் தமிழர் கோவில் வைத்தார்.

இலங்கை அரக்கர் கொள்கைக்கு
இட்டான் அனுமான் நீதித்தீ
துலங்கி வால்போல் பிடித்தனவே
தூயநீதி ஈழமெங்கும்
கலங்கா மன்னா இலங்கேசன்
கமல நெஞ்சில் நீர் வடித்தே
விலங்கின் இனமோ வேந்தர்க்கு
விதிக்கும் நீதி எனச் சரிந்தான்.

கற்பு நெறிக்குக் கோவில் கட்டி
கடமை தனக்குச் கோவில் கட்டி
பற்பல நாட்டார் அசை கொள்ள
பண்பு நிறைந்த தமிழ் நாட்டில்
அற்புதம் இதுவே எனப் புகலும்
அறிவுத் தன்மை கொண்டதுதான்.
கற்பனை வளமும் கவி நிறைவும்
கலந்த காப்பியம் தரும் நீதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியூரன், மட்டக்களப்பு

## வெள்ளை மனம்

கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்கும் நிலவில் ஒரு வாரம்!
பார்மீ திருந்து பனிமதி நாடியே
ஊர்தியில் ஏறி ஒருநொடியிற் போய்ச்சேர்ந்தோம்!
வெப்பம் மிகுந்த வெளியாய்க் கிடந்திட்ட
அப்பம் நிகர்த்த அழகுநிலா அப்பமில்லை!
குன்றுங் குழியுங் குலைநடுங்கு பூழ்தியுமாய்
மண்டிக் கிடந்ததிந்த வண்ணநிலா! கண்டவ...ன

காதல் வரண்டு கருகியவோர் மல்லிகைபோற்
சீத முகத்திற் செழிப்பிழந்தாள் காதலியாள்!
உங்கள் அணைப்பில் உலகில் ஒரு குடிலில்
சங்கமிக்கும் இன்பம்இச் சந்திரனில் இல்லையென்பேன்!
தேன்நிலவு வாழ்வில் தெவிட்டாதே என்றழைத்து
வான்கடந்து வந்த வழிச்செலவு வீணத்தான்!
எங்கள் உலகின் எழிலுக் கிணையாகத்
திங்கள் இராத தெளிவை எவர் சொன்னார்?
காவியத்திற் கண்ட கவின் நிலவு இஃதாமோ?

ஆவியுடன் இங்கே அரை நொடிதான் வாழ்வதற்குங்
காற்றை உலகிற் கடைசென்று வாங்குவதோ?
போற்றுதற்கு மன்னே புழங்கி யனுபவித்தால்
உண்மை தெரியுமென்ற உண்மை யறிந்துள்ளேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணே! அதிகங் கதைக்காதே; கன்னந்தா!
பூமி! அதோ பார்! புடம் போட்ட தங்க நிலா!
நாமிங் கிருந்து நமதுலகின் பேரழகைப்

பார்த்தலொன்றே இந்தப் பயணத்தின் பேறடியோ!
வார்த்த தயிர் அண்டா வட்டம் அவ் வண்ணநிலா!
வார்த்தைகளே இல்லை வருணிக்கப் பூமகளே!
வார்த்தைகளே இல்லை மணிக்கவிதை யாப்பதற்கு!
அந்த உலகின் அழகை நுகராதார்
இந்த நிலவினிலே எப்புதுமை நாட்டினும் என்?
அந்த உலகின் அவலங் களையாதார்
இந்த நிலவில் இனிமை நுகர்ந்திடின் என்?

உந்துங்கள் நம்முடைய ஊர்தியினை! என்றவளைப்
பந்தாக வாரிப் பயணத்தை மேற்கொண்டோம!
கஞ்ச மலராள் என் கைக்குள் ஓர் மொட்டாகி
மஞ்சத்தில் பூத்தாள் மலர்ந்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவாஜீவரத்தினம், மட்டக்களப்பு

## நீயும் நானும்

ஏன்மகனே அழுகின்றாய்? என்ன குறையுனக்கு
நான்வைத்தேன் என்றிருந்து நாளெல்லாம் தேம்புகிறாய்?
உன்னைப்போல் நானும் உருமாறி, வீதியெலாம்
சின்னக்கால் ஊன்றித் திரிந்து, விளையாடி,
நாளைப் பொழுதை-நகர்கின்ற சூட்சுமத்தை
சூழும் கொடும் துயரைக் காணாச் சுவை நிலையில்
வாழத் துடிக்கின்றேன்; வரமில்லை! ஆகையினால்
பாழும்இப் பாவியன்றோ பதறி அழவேண்டும்?

நீயேன் அழுகின்றாய்? நெஞ்சில் எனைப்போலத்
தீயாய்த் தகிக்கின்ற தொல்லை உனக்குமுண்டோ?
அன்று கடவுளராய் ஆபத்தில் கையளித்துச்
சென்ற கடன்காரர் 'திருமுகங்கள்' காணாது
'ரோட்'டில் திரிந்தால் என் ரோசம் பறக்குமென
வீட்டுக்குள் ளேகிடந்து விம்முகிறேன்! உன்னைப்போய்
எந்தக் கடன்காரன் ஏச்சுக் கிழுத்திடுவான்?
வெந்து குமுறியழ வேண்டியவன் நானன்றோ?

இரைந்தேன் அழுகின்றாய்? என்னைப்போல நீயொருநாள்
விரைந்தடையப் போகின்ற வேதனையை எண்ணினையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப் பெருவெள்ளம் கரைக்கிழுத்துச் செல்கையில் இக்
கோலம் பெறநேர்ந்தேன்; கொடுமை சகியாது
தேம்பி அழுதாலோ தேசம் சிரிக்குமெனச்
சாம்புகிறேன் உள்ளே! என் தவமே, உனைப்போலக்
கூவி அழும்வயதைக் கொள்ளை கொடுத்ததனால்
பாவிநான் அன்றோ பதறி அழவேண்டும்?
ஏன் மகனே அழுகின்றாய்? எனைமறந்தே உன்னோடு
நானுமழ வில்லையென்றோ நாளெல்லாம் தேம்புகிறாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஸீல் காரியப்பர்**

## தியாகி

"தூய நெறியோனைச்
சுமந்து சுமந்துருவே
தேய்ந்துயான் என்னைத்
தேய்த்தழித்துக் கொள்ளுகிறேன்
எண்ணத்தில் தூய்மையுடன்
இறைவனிடம் நித்தநித்தம்
கண்ணீர் பெருக்கிக்
கரைந்துருகி ஆட்கொண்ட
எண்ணித் துலைவுயிலா
இச்சைகளைப் பாவமதை
மன்னிக்க மன்றாடி
மனதாலும் பொய்யறியா
'தனக்குவமை இல்லாதான்'
தாழ்சேர்ந்து எதுவரினும்
மனக்கவலை சற்றுமிலா
மற்றவர்க்காய் வாழ்ந்துவரும்
தூய நெறியோனைச்
சுமந்து சுமந்துருவே
தேய்ந்துயான் என்னைத்
தேய்த்தழித்துக் கொள்ளுகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயபல சேவைகளாற்
றுவண்டு மெலிந்துவிட்ட
நேயத் தொழிலாளி
நிலையதனைப் பெற்றுவிட்டேன்
என் எசமான் என்னை
இழுத்தரைத்துத் தேய்க்கின்றார்
என்னினும்யான் எள்ளளவும்
இம்சையெனக் கொண்டதிலை
தனக்கும் பிற அயலார்க்கும்
தக்கோனாய் வாழ்பவனை
எனக்குச் சமந்துதவல்
எந்நாளும் இன்பமடா!"
என்று 'தொழும்பள்ளி'
ஏறுவாயல் தனிலே
அன்று செருப்பொன்று
அடியேன் தனைப்பார்த்து
மெல்ல நகைத்ததுவே
மேனியெலாம் புல்லரிக்கக்
கல்லாய்ச் சமைந்தேன்
கருத்திலொரு மின்னலடா...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆனந்தி நடராசா**

## அவரோடு நான்படும்

அவரோடு நான் படும்பாட்டைச் சொன்னால்
அதுபெரிய காவியமாம் கதையேயல்ல
சுவரோடு மண்டைதனை மோதிக்கொண்டால்
சுவருக்கு ஏதுவலி? மண்டைக்கே தான்!
இவரோடு பிணைத்துவிட்டான் ஈசன் என்னை!
எத்தனை நாள் பொறுத்திருப்பேன் இவரின் கூத்தை!
'பவரோ'டு வாழ்வதற்கே இவர்க்கு ஆசை
பணப் புழக்கம் இல்லாமல் ஆசைகேடா?

வீதியிலே என்னோடு இவர் வருவார்
விரைவாக ஸ்கூட்டர் ஒன்று ஓடிப்போகும்
பாதியிலே எனை மறந்து அதனைப் பார்ப்பார்!
பல்லெல்லாம் வாயாக எனையும் பார்ப்பார்
'நீதியிலை அப்பாவைப் பணம் கேட்பது
நித்த நித்தம் கேட்டெனுக்கு அலுத்துப்போச்சு!
வீதியிலே நின்றென்ன பேச்சு' என்பேன்
வீரென்று நடந்திடுவார் தாம் தீம் என்று;

கந்தோரில் ஒரு கனவான் 'பற்றிச்' சட்டை
கனவிலையில் வாங்கியதை அணிந்து வந்தால்
இந்தா பார்! அதைப் போலச் சட்டை ஒன்று
இக்கணமே வாங்க வேணும் என்றாடுவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரத்தில் எம்வாழ்க்கை ஆடுதலை
அரைக் கணமுஞ் சிந்தியார் அடைவுவைத்தும்
சொந்தமதாய் 'பற்றிச்சேட்' வாங்குவாரென்
சொல்லொன்றும் ஏறாது காதும் கேளா!

அப்பாவை 'பாங்' கென்று எண்ணிக்கொள்வார்
அவசரமாய்ப் பணம் எடுக்க எனைவிடுவார்
தப்பாமல் பணம் கொண்டு வராது விட்டால்
ததிங்கிண தோம் போட்டிடுவார் சதங்கையோடு
அப்பாவாம் அம்மாவாம்! இனி நீயங்கே
அடியெடுத்து வைக்கவே கூடாதென்பார்!
கூப்பாடு போட்டு நான் மானம் போகும்
குறை தன்னைச்சொன்னாலும் கேட்கார் சீமான்!

கடையினிலே வாங்கி வந்த சாமான்களை
கணக்கெடுப்பேன் சரிபார்ப்பேன் 'என்ன இது?
வடைபோட உழுந்து கொஞ்சம் வேண்டுமென்றால்
வாங்காமல் வந்தீர்கள் எதற்கு என்பேன்?'
நடை நடையாய் பல கடைகள் ஏறிப்பார்த்தும்
நான் காணவில்லை உழுந்தினையே என்று
படைபதைக்கப் பொய் சொல்வார் 'சீகரெட்டு'ப்
'பக்கற்று' மட்டும் மறந்திடவே மாட்டார்!

இவரோடு படுகின்ற பாட்டையெல்லாம்
என் தோழி கமலாவிற் குரைப்பதற்காய்
பரிவோடு அவள் வீடு சென்றபோது
பாதையிலே அவள் வந்தாள் 'என்ன?' என்றேன்
'அவரோடு வாழ்வதும் வாழ்வா? இந்த
அலங்கோலம் வேண்டவே வேண்டாமப்பா!
துவராடை ஒன்றிருந்தால் தந்துதவு
துறவியாய் நான் போறேன்! என்றாள் தோழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஏ. நுஃமான்

## அரைக்கண நேரத்து மின்னல் எனினும்...

வான் இருண்டுள்ளது;
நட்சத்திரங்கள் மறைந்தன.
ஓ,
நான்போகும் பாதை இதுவா?
இருட்டின் நடுவில் எதும்
தோன்றவே இல்லை;
எது என் திசை?
நீள் தொலைவில் அதோ
வான் இருண்டுள்ளது;
நட்சத்திரங்கள் மறைந்துளவே.
இன்னும் என்வண்டி வரவில்லை.
ஆயின், இருட்டில் அதோ
மின்மினிப் பூச்சிகள் ஆயிரம்
ஏற்றும் விளக்கொளியில்
என் வழி கண்டு நடத்தல் இயலுமா?
இல்லை; ஒரு
மின்னல் அரைக்கணம் ஏனும்
ஒளிர்ந்தால் மிக உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், இதோ மின்னல் அடித்தது;
தூர அகன்று செலும்
நாம் போகும் பாதைகள்
நன்கு தெரிந்தன;
நான் நடப்பேன்.
போம் வழி நன்கு புலப்படும் போதில்
இருள் கவியும்,
ஆம், ஒரு மின்னல் அடிக்கும்
பிறகும் அது தெரியும்.

இருட்டிலே நாங்கள்
வழி நடக்கின்றோம்.
இதோ எரியும்
குருட்டு விளக்கொளி
மின்மினிப் பூச்சிகள்
வழி துலக்கி
வரட்டும், என இன்னும் காத்திருப்போமா?
வழி நடப்போம்;
அரைக்கண நேரத்து மின்னல் எனினும்
அது பெரிதே.

7373cc

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண்முகம் சிவலிங்கம்**

## காற்றிடையே

இன்னும் வெளியில் இடையிடையே
பின்நிலவில்,
தென்னைகளின் ஓலை திடீர் என்று சலசலக்கும்
பின் அவைகள் ஓயப்,
பிறகும்-சலார் என்று
வீசி எழுந்து விரைகின்ற வெள்வாடைக்
காற்றிடையே,
தூரக்
கடல் இரைந்து கேட்கிறது.

உள்ளறையில் கண்ணாள் உறங்குகிறாள்
பக்கத்தில்,
பிள்ளைகளைப் போட்டுள்ளாள்.
பின்னும் ஒரு முறை, எம்
சின்ன மகன் இருமித் தீர்த்துச்
சிணுங்கலிடை
கண்ணயர்ந்து போகையிலே...
மீண்டும் கடும் இருமல்.

"எத்தனை நாள் வந்த இருமல்!...
இதற்குமுன்
சத்தியும் காச்சலும்
சனியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கேதான் இத்தனை நோய்..."
என்றே எழாது படுத்தபடி
நித்திரை பாதி, நினைவுகளும் பாதி என
'இச்சுச்சு' சொல்லி
இதமாய் மகன் தோளைத்
தட்டிக் கொடுத்துச் சரிசெய்தாள் கண்மணியாள்.
விட்டு விட்டு
இன்னுமந்த வெள்வாடை மேய்கிறது.

கொஞ்சம் அமைதி...
பிறகும் அதே குக்கல்.
இந்த முறை லேசில் இளகவில்லை.
சங்கிலிபோல்,
நெஞ்சு பிளந்து நிறுத்தலின்றித்
தொண்டையின்-அப்
பிஞ்சுச் சதையெல்லாம் பிய்த்து வருகிறது.

என்ன செய்வோம்?
ஏதறிவோம்?
எவ்வாறிதைத் தீர்ப்போம்?
அஞ்சிப் பதறும் அவளுக்கோர் ஆறுதல் நான்!

"நெஞ்சைத் தடவு...
முதுகை நிமிர்த்தாதே...
கொஞ்சம் சுடுநீர் கொடுப்போமா?..."
என்றிவைகள்
சொல்லி,
மகனை என்'தோள்மீது போட்டுலாவி
மெல்ல அவன் துயிலும் போது மெதுவாக
மெத்தையில் சேர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கைத் தணித்தபின்
சத்தம் எழாமல் கதவினையும் சாத்தி விட்டு
மண்டபத்தில் வந்தேன்.
மணி இரண்டு!...
சாய்மனையில்
குந்துகிறேன்
மீண்டும் குழந்தை இருமுகிறான்.

இன்னும் வெளியில் இடையிடையே
பின் நிலவில்
தென்னைகளின் ஓலை திடீர் என்று சலசலக்கும்.

பின் அவைகள் ஓயப்
பிறகும் சலார் என்று
வீசி எழுந்து விரைகின்ற வெ ர்வாடைக்
காற்றிடையே
இன்னும்
கடல் இரைந்து கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிலோன் விஜயேந்திரன்**

## விஜயலட்சுமி

(அவள் என் கூடப்பிறந்த குளிர்ச்சந்திரிகா. 'காதல் தேவன் இறந்தான்' என்ற சேதி கேட்டுத் தன் உயிரைத் தானே போக்கிக் கொண்டாள். அவள் மரித்து இருபதாண்டுகளுக்கு மேலாகி விட்டன. அவள் ஞாபகமோ சிரஞ்சீவிக் கவிதை போல என் சிந்தையிற் தங்கி விட்டது. அந்த அமர தேவியின் நினைவில் பொங்கி எழுந்ததே பின்வரும் கவிதை)

நெஞ்சத்தில் அநுராகக் கனவை ஏந்தி
நித்திலத்தைச் சொல்லாக்கிக் கவிதை பாடி
கொஞ்சுமெழில் யௌவனத்துப் பருவங்கொண்டு
கோமகள் பூதலத்தே திரிந்த போது,
வஞ்சனையேன் செய்தனனோ அந்தக் கடவுள்
வஞ்சியவள் காந்தனவன் தன்னைக் கொன்றே,
சஞ்சலத்தால் என் விஜயா துடித்தாள்! ஐயோ!
சாவொன்றே கதியென்று கருதி விட்டாள்.

முன்னிரவு என் அக்கா என்னைப் பார்த்தே
முறுவலித்தாள் விந்தைமிக! புரிய வில்லை
பின் வந்த காலையிலே பள்ளி சென்றேன்
பிளந்ததொரு மனத்தோடு அப்பா வந்தே,
"உன் அக்கா உலகத்தைத் துறந்துவிட்டாள்"
உருக்கமுடன் என்னிடத்தே சொல்லக் கேட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னவொரு பூவனைய சிந்தைமிக்காள்
செத்திட்ட சேதியினாற் பித்தன் ஆனேன்.

அழகான அவள்உடலில் உயிரே இல்லை
அவளில்லா உலகினிலே பொருளே இல்லை
நிலவான அவள்முகத்தை உற்று நோக்கி,
நிலைகெட்டேன், நிம்மதிநான் இழந்து விட்டேன்.
விலையில்லாப் பிரேமையிலே லயித்த தாலோ
விண்நோக்கி என்தேவி விரைந்து சென்றாள்,
மழைகாணா நிலம்போலே வறண்ட துள்ளம்
மணிச்சுடரை மரணந்தான் அணைத்த தாலே.

பொன்னுடலைப் பாடையிலே ஏற்றி நாங்கள்
புறப்பட்டோம் வயவைநகர் சுடலை நோக்கி
கண்மணியாம் என்விஜயா உடலந் தன்னைக்
கனலிட்டார் என் அப்பா; ஐயோ என்றன்
வண்ணநிலா தீயினிலே கருக லாச்சே
வசந்தகனா காற்றோடு கலந்து போச்சே
என்னமுதை என்ஜீவத் துடிப்பை யானும்
எந்தவொரு ஜென்மத்தில் சந்திப் பேனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் விஜயேந்திரன்

## அபூர்வமாய் ஒரு மனிதன்

வசதியோடு நானிருந்தேன்.
அவர்கள்
என்னோடு இருந்தார்கள்.
என்னால்
பசியாறினார்கள்.
நான்
இல்லாதவனானேன்
அவர்கள்
பொல்லாதவர்களாகி
தனிமைச் சிறையில்
என்னைத் தள்ளி விட்டு
தூரத்து விண்மீன்களாய்
விலகிப் போனார்கள்.

காரிய வாதிகளைச்
சிநேகிதத் துரோகிகளை
நான் இனங்காண
என் செல்வத்தையும்
காலங்களையும்
இழந்தேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியால் துடித்தேன்!
தாகத்தால் தவித்தேன்!
எனது தேசத்தில்-

வருடத்தில்
இரண்டேவேளைகள்
பட்டினி கிடந்து
பழக்கம்.
அது-
பேதி மருந்து
சாப்பிடும்
வேளைகள்!

அத்தகையவன்-
பொழுதெல்லாம்
பட்டினிகிடக்க
நேர்ந்தது.

இங்கே பலர்-
ஆட்டு பிரியாணி
உண்பவனுக்குக்
கோழி பிரியாணியும்
சேர்த்துக் கொடுக்க
அலைகிறார்கள்.
பசித்தவனை
பரிகசித்தார்கள்.

தொழில் ரீதியிலும்
வீறுடைய ராஜாளியை
கிளிக் கூண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைத்து
வேடிக்கை பார்த்தார்கள்.
கலாஞான மற்ற
ஞான சூனியங்களுக்கு
முடிசூட்டுவிழா
நடாத்தினார்கள்!

ஒருபுறம் கலாதாகம்!
மறுபுறம் பசியின்வேகம்!
இத்தகைய
இருண்ட நாட்களில்
என்னைத்தேடி
நீ வந்தாய்!
ஈரமுள்ள
உன் இதயத்தில்
என்னை ராஜாவாக்கினாய்

"காலம் வரும்.
உன் திறமை
உலகிற்கு அப்போது
வெளிச்சமாகும்"
என்றாய்.
என் பசிப்பிணிக்கு
மருத்துவனானாய்!

உன்
அன்பில் நான்
ஆனந்தித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய சீலனே!
அன்பின் அர்த்தமே!
அப்போது உனக்கு
பதினெட்டு வயது!
என் வயதில்
பாதி கூட உனக்கில்லை!
ஆனால்-
அன்பு செய்யும் ஆர்வம்,
விசால இதயம்
கள்ளமற்ற இயல்பு
அனைத்துமே
முன்யானறியாத
புதுமையாக
உன் உருவில்
எனக்கு வாய்த்தது.
என்னில் நீ
நேசவசந்தமானாய்!

சிந்தை விழையும்
சிநேகிதனே!
தாயின் பாசம்,
தாரத்தின் வாத்சல்யம்
அனைத்தையுமே
உன்பால் உணர்ந்தேன்.
எத்தனை நாட்கள்,
எத்தனை மாதங்கள்,
எத்தனை வருடங்கள்
வைரமணிப் புன்னகையோடு
வற்றாத அன்போடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோடு
பின்னிப் பினணந்து
பிரியத்தைப் பொழிகிறாய்.
உன் தோழமை
இறைவன் வரமே!
ஐயமே இல்லை.

இளைஞனே!
இனியவனே!
இன்று நீ
குடும்பவாழ்விலே
குதூகலிக்கிறாய்.
சாந்த குணமுள்ள
சங்கீதா
உன் இதய சபையிலே
காதல் கீதம் இசைக்கிறாள்.
உன் குடும்ப வாழ்க்கை
எந்நாளும்
எழிலோடு பொலிக!

சீவியம் முழுவதும்
என் சிந்தை,
அருமை நண்பனே
பெருமிதமாய்
உன்னை நினைவு கூரும்.

என் வாழ்வின் பாதையிலே
மொழியால், மதத்தால்
ஒன்று பட்டவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயங்களால்
வேறுபட்டுப் போனதுண்டு!
என் பிரிய தோழனே!
நீ மொழியால், மதத்தால்
வேறுபட்டாய்,
ஆனால் இதயத்தால் ஒன்றுபட்டாய்.

ஆனந்தக்கண்ணீரோடு
அன்பின் மேலீட்டால்
நான் ஓர் சேதி சொல்வேன்;

"இந்தியத்தாய் ஒரு
ஈரமுள்ள இதயம் மிக்கவனை
உவகையோடு எனக்கீந்தாள்!
அவன் பெயர் சந்திரபிரகாஷ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. பொன்னம்பலம், யாழ்ப்பாணம்

## அகவெளி சமிக்ஞைகள்

அகநோக் கென்பது
மனதின் பேச் சொழிந்த
முழு விழிப்பின்
உட் பொழிவு.

விவகாரத்தில் வெளி நீட்டிய மனத்தலைகள்
உள்ளிழுத்துக் கொள்ள,
ஏறிய ஜ்வாலையில்
எண்ணிறந்த நாளங்களில்
பொன்னின்ப உட்சொரிவு.

தூண்டில் இரையோடு
ஆழ ஆழ உள்ளிறங்கும் மீனென மனம்
ஓர் உந்தல்
மனம் வெளியே தூக்கியெறியப் பட்டதா?
மனம் வாழ்ந்த துளிப் பொட்டலில்
சமுத்திரத்தின் பேர் நுழைவு
அங்கிருந்து மேலெழுந்த வெண்குமிழாய்
எழுங்கதிரை விழுங்கிய நான்-
பிரபஞ்ச உள் விரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கிக்காதே,
தரவுகள் கேட்டு நிற்காதே-அவை பழைய யுகத்தவை
வந்தமர்க.
X-ray கருவிகள் போல் அவை இயங்கட்டும்
கொலைகள் புரிந்தவன் யாரோ
சாட்சி வலையில் விழுந்த அப்பாவி எவனோ!
சாட்சி வலையில் விழுந்த அப்பாவி
உண்மைகளைத் தர்க்கங்களும் விஞ்ஞானமும்
தந்து கொண்டிருக்கட்டும்
ஆனால் இவற்றால் கைதிகளாக்கப்பட்டுள்ள
கடவுளின் சேவர்களை விடுவியுங்கள்
தியான ஊடறுப்பின்
வெள்ளி நீக்கல்களால் அவர்கள்
வெளிவரட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோசுதா**

## தாயைக் காண்கிறேன்

மலர்கள் எங்கே
மகிழ்ந்து பூத்தாலும்-அங்கே என்
தாயின் சிரிப்பையே பார்க்கிறேன்!
மேகங்கள் எங்கே
மழையைத் தந்தாலும்-அங்கே என்
தாயின் அன்பையே நினைக்கிறேன்!
பறவைகள் எங்கே
பாடிந் திரிந்தாலும்-அங்கே என்
தாயின் தாலாட்டைக் கேட்கிறேன்!

முத்துக்கள் எங்கே
கொட்டிக் கிடந்தாலும்-அங்கே என்
தாயின் முகத்தையே காண்கிறேன்!
ஏழைகள் எங்கே
வயிற்றை நிறைத்தாலும் அங்கே என்
தாயின் கருணையை உணர்கிறேன்!
இதயங்கள் எங்கே
அன்பைத் தந்தாலும்-அங்கே என்
தாயின் இதயத்தைப் புரிகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கோணமலைக் கவிராயர்**

## விரகதாபம்

இனிமை மொழிக்கு ஒரு வள்ளி-அவள்
இடையோ துரும்பைவிட ஒல்லி
கனிமை நினைவுகளை அள்ளி-எனை
கனவில் அழைத்த விடிவெள்ளி

உயிரில் கலந்த தமிழ்ப்பாவை-அவள்
உலகில் எனக்கு ஒருதாய்மை
உயிரின் களைபிடுங்கி நோவை-தந்து
உதறி எனை வெறுத்த பூவை.

அவளால் கவிஞனென ஆனேன்-என்றும்
அமைதி இது வரையும் காணேன்
சுவரால் குதித்துவிழப் போனேன்-என்னை
'சுலைகா' தடுத்தாள் மகன் ஆனேன்.

கவிதை குழையுதடி அன்பே-என்றன்
கண்ணீர் பெருகுதடி பெண்ணே
புவியில் மறைந்துவிடு முன்னே-என்னைப்
புதிதாய் அணிந்தெறிக கண்ணே

துயிரில் இணைந்து உயிரானோம்-பின்னர்
தளிரில் நனைந்து சிலையானோம்-கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் ஒளிகுறைந்து போனேன்-இன்று
சுழியில் புரண்ட நிலையானேன்.

நெஞ்சில் பதிந்த இருவேல்கள்-அவை
நெஞ்சம் சிதைக்க வரும் ஏர்கள்
பிஞ்சு முகத்தின் ஒளி வேல்கள்-இவை
பித்தன் எனக்கு எதிர்நேர்கள்

ஊடல் உனக்கு விளையாட்டு-உன்றன்
உருவம் எனது மனப்பாட்டு
பாடல் இசைக்க எனைக் கேட்பாய்-பின்பு
பலவாறெனைப் புகழ்ந்து தீர்ப்பாய்

கல்வி எனக்குச் சின்ன அம்மை-என்றும்
கவிதை எனையணைக்கும் திண்மை
செல்வி உனது சக்தி உண்மை-மலர்
சொரிந்தேன்-உணர்ந்தேன்-கவிவன்மை.

இன்றோ எனக்கு மனையாட்டி-அவள்
இருளில் வழி நடத்தும் பாட்டி
உன்னை நினைந்து உருமீட்டி-முதல்
இணைந்தேன் இரு புதல்வர் சாட்சி.

நல்லோர் இதயமெங்கும் வாழ்க-அங்கு
நங்கை உனது பெயர் ஆள்க
பொல்லா எனைவிடுத்து வாழ்க-என்றும்
பொன்னாய்த் துலங்கி மண்ணில் வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெழு கதிரமலையான், யாழ்ப்பாணம்

## மதுரை மீனாட்சி
## போற்றித் திரு அகவல்

மலர்தலை யுலகின் மாயிரு ளகல
புலரொளி யருக்கனாய்ப் புவிமிசை எழுந்து
பைந்தமிழ் மிழற்றும் பைங்கிளி யேந்தி
அந்தமில் தாயாய் அழகார் சொக்கராய்
வந்து நடம்புரி சுந்தர மதுரையில்,
சிந்தையுஞ் சொல்லும் செயலோ டொன்ற
வந்தனை செய்து வலம்வரு வோரை

அந்தமில் இன்ப அழியா விணையடி
தந்தருள் புரிந்து தயையுங் காட்டி,
எந்தை பாகமாய் ஏகனின் தாரமாய்
சுந்தர வதனஞ் சந்திரப் பொலிவாய்
புந்தியின் நிறைவாய்ப் புரிந்துண ரறிவாய்
விந்தையின் விந்தையாய் விசும்புற அகன்று
வெள்ளியம் பலத்தில் விடுதி காட்டி
அள்ளி வழங்கும் அருளாளி யம்மே!

மீனாட்சி யாகி மிகுவருள் சொரிந்து
வானாட்சி வழங்கி வளம்பல வாகி,
காரண காரியம் ஆகக் கலந்து
பூரணப் பொலிவாய்ப் போற்றி ஏத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவே உருவாம் ஆதி யாகிச்
செறிந்த செயலாய்ச் செழிக்கும் சக்தீ!
மயலை நீக்கி மார்க்கங் காட்டக்
கயலாய்க் கண்ணில் காணுந் தேவீ!
நண்ணி நண்ணி நன்றே யேந்தி
நாவழி மனத்தால் நாமே அறியின்,

தூவழி காட்டித் துயர் துடைத் தாளவள்
வாக்கும் மனமும் மறைந்த மறையாள்
நோக்க நோக்க நுண்ணிமை தெள்ளியது,
காணவல்லர்க்குக் கண்ணின் மணியாள்
பேணவல் லார்க்குப் பெருந்துணை யாமே.

அன்பே சிவமாய் ஆளவல் லார்க்கு
இன்பமாய் இறையாய் இலங்கு குருவாய்
ஆடக மதுரையில் ஆளும் மீனாள்
கூடலில் அருளுங் குமரித் தாயள்,
ஊடக மாக உந்தும் சக்தீ!

பாடிப் பாடிப் பணிந்தே பரவ
நாடியே நலம்பல நல்குவள் போற்றி!
பந்தனஞ் செய்து பக்தர் தொழவே
சந்தனக் காம்பின் சுந்தரி யாகி
சிந்தையில் குளிருஞ் சிவமே போற்றி!

தங்கம் பொதிந்த தனித்தேரேறும்
அங்கண் விசும்பின் அருண்மறை போற்றி!
ஆயிர மருக்கர் அகலொளி யன்ன
வயிரக் கிரீட வாலெறி போற்றி!
யாண்டும் எம்முளே இணைந்து வாழப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் மகளாய்ப் பாரிடை நிறைந்த
தூண்டா விளக்கே தூமணி போற்றி
வலந்தூக்கி யாடி வதுவைக் களித்த
சிலம்பார் செல்வன் சித்தமே போற்றி!
அந்தமி லானை அறிவாளி போற்றி!

அந்தமி லாளாம் அறிவிப்பாய் போற்றி!
முத்திநற் சோதி முழுச்சுட ரான
புத்தியில் சேர்க்கும் பார்பதி போற்றி!
கற்றவர் சிந்தையில் கருத்தாய் ஊறி
பற்றற நிற்பார் பதியே போற்றி!

காத்து நின்றவர் கருத்தினுள் ஒன்றி
பார்த்திட மெங்கும் பரந்தெழு சோதியை
சாத்திர மாகத் தருபவள் போற்றி!
மந்திர சக்தியாய் மாயையின் கூற்றாய்
தந்திரம் அகலத் தழைத்தாள் போற்றி!

ஒருத்தியாய்ப் பலராய் ஓமாய் நின்று
திரிபுரை சுந்தரி திகம்பரை நாரணி
இருள்புரை ஈசி மனோன்மணி என்றே
வெவ்வே றாக விளங்குவள் போற்றி!
பொன்னாய்ச் செம்மையாய் புகழும் வெண்மையாய்

வண்ணம் பலவாய் வந்தே தோன்றி,
போகமும் வீடும் போற்றும் அருளின்
தாகமும் தணியத் தருவாள் போற்றி!
வாரணி கொங்கை வனப்புறு சிலம்பு
ஏரணி அங்குசம் ஏந்து பாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணி மாமணிக் குணிடலஞ் சேர
பூரணி கையில் பொருந்திய கரும்பாய்
இராசேஸ் வரியாய் எழுந்தவள் போற்றி!
கண்டிகை ஆரம் கதிர்முடி தரித்து
சண்டிகை யாகுஞ் சாமுண்டி போற்றி!

மனமெனும் வனத்தை மனையாய் ஆக்கி
தனக்குரு அளித்த ஆரணி போற்றி!
ஐவர் தேவர் ஆக்கும் வினைக்கு
ஐயனாய் நின்று ஆள்பவள் போற்றி!
பரம்பொருள் தானும் பதிகொண் டாறும்
பரமா னந்தப் பராசக்தி போற்றி!

புண்ணியப் பயனால் போகமும் மோட்சமும்
பண்ணியே வினையைப் பகிர்வாள் போற்றி!
பராசக் தியாகிப் பரிபாகஞ் செய்து
தராசக்தி யான தாயே போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதாகர், யாழ்ப்பாணம்

## ஹைக்கூ

வளர்பிறை ஆசைகள்!
கால்களோ-
தேய்ந்த செருப்புகளோடு

பட்டிமன்றம் களைகட்டியது
நடுவர் வாயில்-இது
நாலாவது கொட்டாவி!

"இந்த 'சர்ட்' உங்களுக்கு
நல்லா இருக்குங்க"
காலையில் மனைவி!

காலண்டரில் ஒண்ணாந்தேதி
கண்ணடித்தது!
குடிக்கத் தண்ணீர் கூடக்
கிடைக்காத
குப்பத்துக்காரி பேச்சில்
பன்னீர் வாடை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. ஆதவன், யாழ்ப்பாணம்

## அம்மா

அந்த இனிய மாலையின்
நிசப்தத்தைக் கிழித்து
அலறினாள் அவள்.

“வேண்டாம், ஒன்றுமறியா அப்பாவி அவன்
வேண்டாம் விடுங்களவனை.
அற்பன் ஏதுமறியான்”

புழுதிமேலெழுந்து பறந்தது.
புறங் கைகள் நிலத்தில் தோய்ந்து
தோலுரிந்தது
மீண்டும் புறங்கைகள்
முட்டி போட்டு முக்காலிட்ட
முழந்தாளில் ஊன்றி
முகத்திற்கு முண்டி கொடுத்தன.
மூச்சிட்டாள் அவள்.

“நீ ஒன்றும் கெஞ்சாதே தாயே
இவர்களுக்கு இவை விளங்கா.
நான் போகிறேன்.
என் முகம் சிதைக்கப்படும் வரையில்
உன் மூச்சுக்காய் வாழ்வேன்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. சங்கரி

## இன்று நான் பெரிய பெண்

நான்
கல்லாய் மாறிய பூ
பாறையாய் இறுகிய காற்று
பனியாய் உறைந்த நீர்,-

பூவைப் போலவும்
காற்றைப் போலவும்
நீரைப் போலவும்
குதித்துத் திரிந்து
சுற்றிப் பருவத்தில்

காலை உழைத்து
வீரிட்டு அழவும்
கல கல என்று
கை தட்டிச் சிரிக்கவும்
கோபம் வந்தால்
கொப்பியைக் கிழிக்கவும்
முடிந்த காலம்,-

மரத்திதல் ஏறவும்
மாங்காய் பிடுங்கவும்
பக்கத்து வீட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுடனே
கிட்டி அடிக்கவும்
ஒளித்துப் பிடிக்கவும்
ஒன்றும் பேசிலர் எவரும்,

இன்று
நான் பெரிய பெண்.
உரத்துச் சிரித்தல் கூடாது,
விரித்த புகையிலை
அடக்கம்; பொறுமை;
நாணம்
பெண்மையின் அணிகலம்,
கதைத்தல்; சிரித்தல்;
பார்த்தல்; நடத்தல்;
உடுத்தல்
எல்லாம் இன்னபடி என்றெழுதி

நான்
கல்லாய்
பாறையாய்
பனியாய்
பெண்ணாய்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ. சங்கரி**

## விடுதலை வேண்டினும்

எனது-
ஓராயிரம் சிறகுகளை
விரிக்கவும்
விண்ணிற் பறக்கவும்
ஏங்கினேன்.

வானின்
நட்சத்திரங்களையும்
சூரியனையும்
தொட்டுப் பார்க்க
அவாவிற்று என் ஆன்மா.

பூமியின் பரப்புக்கு
அப்பால்
அண்ட வெளியில்
"ஸ்பேஸ் ஒடிசியின் விண்கலம் போல
எல்லையின்றிச் சுழலவும்
எண்ணினேன்.

வானிற் பறக்கும்
புள் எல்லாம் நானாக
மாறவும் எண்ணினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்-
காலிற் பிணைத்த
இரும்புக் குண்டுகள்
அம்மியும் பானையும்
தாலியும் வேலியும்

என்னை-
நிலத்திலும்
நிலத்தின் கீழே
பாதாள இருட்டிலும்
அழுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தன்கேணி பொன். தன. சிவபாலன்

## முருக சக்தி

இணைந்தது உன்னுடன் முச்சக்தி
அணைவேல் ஒருபெரு ஞானசக்தி
இணைமனை தேவானை கிரியாசக்தி
பிணைமனை வள்ளியோ இச்சாசக்தி
சுனைதனிற் தோன்றியநீ பொறிச்சக்தி
உனை மகனெனப் பெற்றவள் பராசக்தி
அணிஅர வரன்ரூபமோ சிவசக்தி
முன்முதல் தமிழதில்நீ முழுச்சக்தி
துணை தரு அண்ணனோ வினைசக்தி
இணைகரி மாமனோகாத் தருள்சக்தி
சிறையிட்ட பிரமனோ படைசக்தி
இறைவனோ உருத்திர அழிசக்தி
இணைந்தது உன்னிடம் இப்பலசக்தி
உனை வணங்கினால் சேருமிப்பல சக்தி
துணையுறு வளைநகர் மலைமீது
வரமருள் திருச்சண் முகப்பேறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

**கல்வயல் வே. குமாரசாமி**

## சிரமம் குறைகிறது

என்னுளோர் பாடல்
எழுந்து
கரைகிறது என்
அன்னையின் கண்ணீர்
அரிச்சுவடிப்
பாவனையில்
என்னுள்
ஓர் பாடல்
எழுந்து கரைகிறது.

விண்ணாதி விண்ணன்
எனுமோர்
விருதொன்று
மண்ணாகி
மாற்றார் மனக்கசட் பால் வீணாகப்
புண்ணாகிப் போச்சு
அதிலோர் புன்னை
புரள்கிறது.

என்னுளோர்
பாடல்
இயைந்து குழைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து வீட்டில்
பழைய கதை
ஒன்று
சக்காகி

போன சரிதம்
புரையோடி
சிக்கல் கரைந்து
குமிழி உடைகிறது.

பொந்தில் இருக்கும்
பொருக்கு
மரத்தவளை
எந்தக் கதையோ
இயம்பும்
புதுக் குரலின்
சந்தம் சிதைய
சலிப்பில் ஒரு பாடல்
சிந்திக் கரைகிறது என்
சிரமம் குறைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.ஐ.ச. ஜெயபாலன்

## ஒரு கிராமத்தின் கதை

மிருசுவில் கிராம வயல் வரப்புகளில்
செம்மண் தோய்ந்து மண்புழுக்களைப் போல்
இழிசனர் சிலபேர் தரிசனம் தந்தனர்.

கிழடுகள் இளசுகள் சின்னஞ் சிறுசுகள்
நூறு நூறு வருடத்தியல்புபோல்

களை பிடுங்குவதற்காய்க் காலையில் நடந்தனர்.
நிலாமண் மீது மானிடம் மிதித்து
தசாப்தம் ஒன்று கழிந்ததன் பின்னும்
யாழ்ப்பாணத்துப்
பள்ளிக்கூட வாசலை மிதிக்காப்
பச்சைக் கன்றுகள் முன்னே துள்ளும்.

மாரி வெள்ளம் தேங்கிய பள்ளம்
சவாலைப் போல முன்னே கிடக்க
சிறிசு ஒன்று கல்லை விட்டெறியும்.

'சாதி வெள்ளாளர் குளிக்கும் குளமடா'
"குளித்ததற்காக உங்கள் மாமனைத்
தென்னை மரத்துடன் வெட்டி வீழ்த்தி
சென்ற வருடம் கொன்றனர் பாவிகள்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்விளையாட துருதுருத்தவனின்
முதுகில் ஓங்கி ஓங்கி அறைந்து
கிழடு ஒன்று ஒப்பாரி யாகும்.
இளசுகள் எல்லாம் வெம்மி வெடிக்கும்.

"நாங்கள் வளருவோம் நாங்கள் நிமிருவோம்
அந்த மரத்தின் இலைகளைத் தொடுவோம்.
நாங்கள் இந்தக் குளத்தில் குளிப்போம்..."
சிறுவன் மீண்டுமோர் கல்லை விட்டெறிவான்.

மாரி வெள்ளத் தேக்கம் கண்டு
கிழடுகள் அஞ்சும். இளசுகள் விம்மும்.
மாவிட்ட புரத்துக் கோவில் வாசல்
தடைகளைத் தகர்த்தவர் சந்ததி நாங்கள்
என்ப போலச் சிறுசுகள் மட்டும்
முன்னே விரியும் வயல்வெளியினிலே,
கற்களைத் தேடிக் கண்ளை எறியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ.ந. கந்தசாமி, யாழ்ப்பாணம்**

## நான் செய் நித்திலம்

வாளிலோர் முத்தினை வைத்திழைத் ததுபோல்
வளர்மதி தவழ்ந்தது; மாடியின் மீதுயான்
இப்பி ஒன்றில் முத்தொன் றிட்டனன்;
இப்பி மூடிற்று; ஈரைந்து மாதம்
கழிந்தது; கழிந்தபின் என்மனை விளங்கக்
கண்ணன் போலொரு கனிவாய்க் குழந்தை
வந்தது; வந்தபின் வாணிலா முகத்தென்
மனையாள் அதைஎன் மடியிடைக் கிடத்தி
ஈரைந்து திங்களின் முன்னால் ஒருநாள்,
'நீங்கள் செய்த நித்திலம் இதுவே'
என்று கூறி மகிழ்ந்தனள்; அவள் கண்
ஓரம் கண்டேன்; ஒளிமுத் தொன்று
அங்கு துடித்ததும் கண்டனன்; அவள்விழி
தொட்டேன்; முத்துத் தீய்ந்தது; மகிழ்ச்சியில்
உள்ளத் திப்பியில் உதித்துக் கண் வழி
வந்தஅம் முத்தில் வையகத் தின்பம்
யாவும் கண்டனன்; அம்முத் தெனது
மடியிடைக் கிடந்த மணிமிசை விழுந்திட
மணியை எடுத்துநான் மலர்க்கரம் தடவி
உச்சி மோந்தே உளம்மகிழ்ந் திட்டேன்.
நான்செய் நித்திலம் தேன்செய் ததுவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதிரேசன், யாழ்ப்பாணம்**

## காட்டு வழி

ஒற்றை யடிப்பாதை-அதில்
ஊரிலுள் ளோர்பலர் போயறி யார்; அதன்
சுற்றுப் புறங்களிலே-வளர்
தூறுகள் செல்வதற் கூறு விளைத்தன;
முற்றி முதிர் செடிகள்-கொடு
முட்களை நீட்டிஎன் பக்கம் முறைத்தன;
பற்றிப் படர்கொடிகள்-பெரும்
பாம்புகள் போற்பயம் மேம்படச் செய்தன.

வண்ணச் சிறுமலர்கள்-வெயில்
வாட்டம் தவிர்த்துநின் றாட்டம் பயின்றன;
எண்ணில் இலைக்கூட்டம்-எனை
எட்டியும், கிட்டியும், தொட்டும் களித்தன;
விண்ணிற் சிறிதுயர்ந்தே-வளர்
வீரை மரங்களும் காரை இனங்களும்
கண்ணில் உறுத்துகின்ற-அந்திக்
கற்றை ஒளியினைச் சற்று யறைத்தன.

பட்டின் மெதுமைதரும்-சிறு
பன்னிறப் பூச்சிகள் மின்னிப் பறந்தன;
கொட்டும் குளவியினம்-பெருங்
கூட்டினில் மொய்த்திசைப் பாட்டு மொழிந்தன;
முட்டை சுமந்தனவாய்-வலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடிக் கிடந்தனவாய் கோடி சிலந்திகள்;
அட்ட திசைகளிலும்-நிறை
அம்புகள் போற்பல தும்பி பறந்தன.

பச்சைக் கிளியினங்கள்-இரை
பற்றிப் படர்ந்தன பற்றைகள் மீதினில்;
இசைப் படி அமர்ந்தே-செவிக்
கின்ப மழலை அளித்தன பூவைகள்;
அச்சம் நிறைந்தனபோல்-என
தண்டையி லேகவு தாரிகள் ஓடின;
குச்சு நிறைபுதரிற்-சிறு
கூடுக ளிற்பல காடைகள் தங்கின.

நாவி இனப்பூனை-கொடும்
நஞ்சுமிழ் பார்வையில் அஞ்ச விழித்தது;
தாவி வரைந்தமுயல்-அயல்
சார்ந்திடு பற்றையுட் சேர்ந்து மறைந்தது;
மேவும் எலிக்கூட்டம்-வளை
வீழ்ந்து கரந்தது தாழ்ந்திடு கொம்பரில்;
வாவும் அணிற்குலங்கள்-எனை
வாவென் றழைத்தன; வாழ்த்தி ஒலித்தன.

மேலும் நடக்கலுற்றேன்-புவி
மேவும் உயிர்க்குலம் யாவும் இயற்கையின்
கோல எழில்படைத்தே-இனம்
கூடிக் குதூகலித் தாடிப் பயின்றன;
நீலத் திரைஇழுத்தான்-இருள்;
நின்று திரிந்தன சென்றே உறங்கின;
காலை திரும்புகிறேன்-அன்னை
காடே, நீ என்னையும் பாடவைத் தாயடி!

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னத்தம்பிப் புலவர், யாழ்ப்பாணம்**

## பொன்பூச் சொரியும்...

பொன்பூச் சொரியும்
பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு
நன்நிழலாம்-மின்பிரபை
வீசுபுகழ நல்லூரான்
வில்லவரா யன் கனக
வாசலிடைக் கொன்றை
மரம்.

மேற்காணும் பாடல், புலவரின் தந்தை வில்லவராயர் வீடு எது
வென ஒரு புலவர், வினவியபோது பாடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருபாலை சேனாதிராய முதலியார், யாழ்ப்பாணம்**

## நல்லை வெண்பா

கந்துகழுந் தானைவேற் காளையருங் கன்னியரும்
கந்துகமுந் திக்களிகூர்நல்லூரே-சந்திரமா
மாவைப் பிழந்தார் மகிழ்பூப்ப வீரையிலோர்
மாவைப் பிழந்தார் மனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவரங்கால் நமச்சிவாயப் புலவர், யாழ்ப்பாணம்**

## முருகன் பாட்டு

இராகம் ; கமாசு தாளம் ; ஆதி

**பல்லவி**

நெஞ்சமே யிந்தச் சடமென்ன சதமா-நீ
நிதமு முருகனை யேதுதி (நெஞ்)

**ஆனுபல்லவி**

தஞ்சமென்பவர்க்குச் சஞ்சலந் தீர்த்திடும்
சதுர் மாமறை துதியேசெயுஞ்
சரவண பவனிருதாள் பணி. (நெஞ்)

பொய்யாமுடல் மும்மலக் கிர்மி
கட்குயர் நாட்டம்-வெகு நாட்டம்-உயிர்
போய்விட்டா லூரார்
சுடுவார் அப்போதல்லோ-ஓட்டம் விட்டோட்டம்-இதை
மெய்யாக எண்ணிநீ-உய்ய முயற்சிசெய்
மேலோர்களு மேலோனென
வெகு பிரியமுட னுமை நாடுவர் (நெஞ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தந்தை உற்றவர்
தாரமென் றிருக்காதே! இருக்காதே-இது
தப்புமோ நாங்கணந்
தப்புவமோ தெரியாதே! தெரியாதே-திரு
மாயன் மருகனை மாதவர் போற்றிடும்
வானக்குற மகளாரனைத்துதி தருவார்கதி (நெஞ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடுப்பிட்டிசிவசம்புப் புலவர், யாழ்ப்பாணம்**

## ஆறுமுக நாவலர் மறைவு

ஆரூர னில்லை புகலியர்
கோனில்லை யப்பனில்லை
சீரூரு மாணிக்க வாசக
னில்லை திசையளந்த
மேரூரு மாறு முகநா
வலனில்லை பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப்
போதிக்கு நீர்மையரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுன்னாகம் முத்துக்குமார கவிராயர்**

## மாவிட்டபுர முருகன்

மல்லாக மாதகலான் மருகன்
சுன்னாகத்தான் மகன்பா வாணர்
சொல்லாச்சீர் ஈவினையான் துன்னாலை
யானத்தான் சுரும்ப ரோதிச்
சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா
மத்தானைச் சிகண்டி மாவூர்
வல்லானை மாவிட்ட புரநகரத்
திடைப்பவனி வரக் கண்டேனே!

முடிவி லாதுறை சுன்னாகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்(து)
அடைய வோர்பெண் கொடிகாமத் தானசைத்(து)
ஆனைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடைவி டாதனை யென்று பலாலிகண்
சார வந்தன ளோர்இள வாலையே!

---

மேற்காணும் கவிதைகள் யாழப்பாணம் மருங்கே உள்ள ஊர்களின் பெயர் அமையும் வண்ணமும், அதே ஞான்று உட்பொருளாய் யாழ்-மாவிட்டபுர முருகனை வழுத்தியும் இருபொருள் சுடரப் பாடப் பெற்றவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து நாட்டுப்புறப் பாடல்கள்

### அரிவி வெட்டுப் பாடல்

ஆற்றோடு ஆற்று நீர் அலைந்து வருமாப்போல
அதன் பிறகே புள்ளுத் தொடர்ந்து வருமாப் போல்
சேற்றோடு வெள்ளம் தெளிந்து வருமாப்போல்
செங்கால் நாரையினம் மேய்ந்து வருமாப்போல்
சினந்தரிவி வெட்டும் இளந்தாரிமாரை
கண்ணன் எங்களூர் இளந்தாரிமாரை
கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே.

மட்டுருக்காலை அருவாளுமடித்து
மாவிலங்கன் பிடி சீவியிறுக்கி
வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு
வெள்ளித் தகட்டினால் விரல்கூட்டமிட்டு
வளர்ந்தரிவி வெட்டும் இளந்தாரிமாரை
நாவூறு வாராமற் காரும் ஐயனாரே.

### ஏர்ப்பாடல்

ஓரம்போ.......சால்பார்
ஏளள...........ஓஓஓகோ!
சரல்பார்த்த கள்ளனடா-செல்லன்
தாய் வார்த்தை கேளாண்டோ
பாரக் கலப்பையடா செல்லனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரமெத்தத் தோணுதடா
வரம்போ தலைகாணி-செல்லனுக்கு
வாய்க்காலோ பஞ்சுமெத்தை
செல்லன் நடந்த நடை - இன்று
சொல்லவொண்ணா அன்னநடை
இந்த நடை நடந்து-செல்லா நாம்
எப்போ கரை சேருவதோ?
வெள்ளிமதியாணி-செல்லனுக்கு
வெண்கலத்தாற் சுள்ளாணி
சுள்ளாணிக்குள்ளே-செல்லா ஒரு
சூத்திரத்தை வைத்தாண்டோ
சாலை அறிவாண்டோ-செல்லன்
சால் பலகை தப்பாண்டா

மூலை வரப்போரம்-செல்லா நீ
முடுகிவளை நல்லகண்டே
ஓடி நடந்தாண்டா-செல்லன்
உறுதியுள்ள காலாலே
தள்ளாடித் தள்ளாடி-செல்லன்
சாய்ந்தாடிப் போறாண்டா
தள்ளாதே கண்டே-நீ
சலியாதே நல்ல கண்டே
முன்னங்கால் வெள்ளையல்லோ-செல்லனுக்கு
முகம் நிறைந்த சீதேவி
எட்டுக்காலோடா-செல்லனுக்கு
இருகால் தலைமூன்று
வானங் குடையாமோ-செல்லனுக்கு
மல்லிகைப்பூச் செண்டாமோ
ஆழியிலே போய் முழுகி-செல்லாநீ
அண்டி வந்த தீரனடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பற் பாட்டு

ஏலை ஏலோ தந்தைதாம் ஏலை ஏலோ
அக்காளும் தங்காளும் அஞ்சான் இழுக்க
ஆனதொரு மீனாச்சி சிக்கான் பிடிக்க
பொக்குவாய்ச் சின்னாச்சி பீரங்கி தீட்ட
புளியடிச் சோனகன் மீசை முறுக்க
அடியடா தேங்காயை ஐயனாருக்கு
திருப்படா கப்பலைத் தெற்குமுன்னாக ஏலை ஏலோ...

பாலான பின்னணியில் மேவியே சென்று
பக்குவ மதாகவே சுக்கான் பிடித்து
மாலாஞ்சு முக்காவை வளமுடன் பார்த்து
வரிசைபெறு கும்பாசை வைத்து நேரோடி
நூலாலி ழைத்திட்ட சவுதாரிப் பாயை
நுடங்கிடாதே பின்னடங்கிடக் கட்டி
காலானதாற் பொரு முக்காவைக் காட்டி
கடுவேக மதாகவே விடுவீர்கன் கப்பல் ஏலை ஏலோ...

பாங்கான சோலையிலே பற்பலவிதங்கள்
தெரியுது பார் சமுத்திர மேடிடும் பள்ளம்
எல்லையுந் தாண்டி யப்பா விதோ வந்தோம்
எதிரே யிலங்குது எசித்துமா நகரம்
துல்லி பமதாய் வேகமோடு விடு கப்பல்
சுறுக்காக வோடியே துறைசேருவேமே ஏலை ஏலோ...

செகமெங்கு மஞ்ச அக்கினி கக்கின்ற
சிசிலித் தீவுறு மெற்னாப் பர்வதமிதோ பார்
தகைகொண்ட நங்கூர மதையிங்கு வைத்து
தவறாது கந்தகமும் உப்புகளுமேற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை கொண்ட மாலுமிகள் சோபனம் பாடித்
தூக்கியே பாய்களைத் துரிதமாயோடி
வகை கொண்ட பாங்கான நீரணையைக் கடந்து
மதித்திரேனியாக் கடலில் வந்ததே கப்பல் ஏலை...

சீலமதுறைந்ததொரு வீதி தெரியுதுபார்
நேரிற் குரைகவி திரைகள் சென்றிடுவதைப் பார்
கோல மயிலோடு குயிலாதியன புட்கள்
கூடிவிளையாடி வரு கொள்கைதனையும் பார்
காலமது தவறாத பாயைச் சுருக்கிக்
கட்டவே யாவருஞ் சட்டெனவெழுந்து
நாலுதிசையுங் கலாசுகள் பரவிநில்லும்
நங்கூர மிட்டிங்கிறங்கிடச் சொல்லும் ஏலை ஏலோ...

ஏலேலோ ஏலிலலோ தாத்தையா
ஏலேலோ ஏலிலலோ
நாழிகை ஒன்றுக்கு நானூறு கப்பல்
நாடொறுந் தப்பாமல் தினம் வந்திறங்கும்
சீருடையநெடிய நகர்க்கப்பல் வருஞ்செய்தி
சென்னபட்டினங் கோட்டைச் சனங்களெல்லாம் கேட்டு
பூரித்த ஆனந்த சந்தோஷமாகி
புதுமகளைப் பார்க்கவென்று கரைதனிலே நிற்க
குண்டுகள் மருந்துகள் உரொம்பவே கொட்டி
குணமான துப்பாக்கி மாலுமைகட்டி
பண்டுசெய்த பிராமணரைப் பக்கமாய் இருந்த
பதமான இராட்சதரைப் பாய்மரமாய்க்கட்டி
கிறுகிறென்று சுற்றுதடா சிங்காரக் கப்பல்
பொன்னான துறைமுகம் விட்டுப்போகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலேலோ ஏலேலோ
மேலான மூலமாம் பகுதியிட மெடுத்து
விண்ணாதி ஐம்பூதம் பலகைகளைத் தொடுத்து
கள்ளமாம் மதத்துவமெனும் சுள்ளாணி தைத்து
கசடான இராகமெனும் சீல்பூசி வைத்து
கர்மமாம் பொருளா விக்கப்பலுண்டாக்கி
கருத்தமான ஆன்மாவில் காவலாய்த் தாக்கி
மோகமெனும் அடிப்பாரம் முடிக்கவே சுமத்தி
மூதூர்ப்பிரபஞ்ச மெனுஓம் முழுக்கட லமிழ்த்தி
சொர்க்க நரகங்களெனும் கப்பிகளும் கட்டி
சோதிமதி கண்ணாடி சமுக்காவும் ஒட்டி

துர்கர்ம மென்னுமொரு சுக்கானுந் திருத்தி
தர்க்கஞ்ச செய்விவேகமெனும் மாலுமியிருத்தி
புலனாம் அமாறுவடம் புக்கவே முறுக்கி
பொறியாகும் சிறுகயிறு போதவே இறுக்கி
விசயமெனும் சரக்குகளை மிக்கவே ஏத்தி
நீங்காமல் ஆங்காரமாய்ப் பாய்மரமும் நாட்டி
நிலையிலா மனமெனும் பாய்ச்சீலை பூட்டி
நிலையிலா அலைமோதும் பவசாகரத்தில்
நில்லாமல் ஓடுதே இல்லாத கப்பல்
ஏலேலோ ஏலேலோ

ஏலேலோ ஏலேலோ
பங்கய மேல்வரிசை அம்புகோதண்டம்
பரிதான சங்குவாள் வச்ரமொடு தண்டம்
தங்கு கோழிக்கொடி தாங்கு கையிலங்க
தரள மணி செச்சையும் தன்மார் பிலங்க
பொங்கிய வீரரும் சூரரும் சூழப்
பொதிய மாமலை முனிவர் போற்றி செய்திடவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் வெண்குடை கவரிசிதறி ஒலி பொங்க
தேவரம்பையர் ஆட துந்தமி முழங்க
எழிலாகவே முருகர் ஏறினார் கப்பல்
ஏலேலோ ஏலேலோ

ஏலேலோ ஏலேலோ
அஞ்சாமல் நின்றபனை மீன் வருகுதேபார்
ஆரைமீன் தன்குஞ்சை நாடி வருகுதேபார்
மிஞ்சியோ வாடையோ கோடையோ வீசுது
விசயமலி ஆருர்க்கரை கண்டு ஓடுது
மஞ்சு சூழ்தரு வேதவன மதோ தோன்றுது
வய வீரகத்தியார்க்கு உடையடா தேங்காய்
கஞ்ச நின்ற செய்தியம் பதியில் வந்ததுவே
கப்பலின் பாயை எடுதண்டா நங்கூரம்
ஏலேலோ ஏலேலோ

## அம்பா

தம்பியே தங்கப்பா-என்படகு
தண்ணீரிலே சலசலா-என்படகு
தாவுமரம் என்படகு சலசலா
தேக்கமரத்தாலே-என்படகு-சலசலா
தேர்ந்தவன் செய்தானே-என்படகு-சலசலா
பாக்குமரத்தாலே-என்படகு-சலசலா
பாங்காகச் செய்தானே-என்படகு-சலசலா
தூரமாய் ஓடுதே நிறுத்து தம்பி-சலசலா
ஓரமாய் ஒட்டியே நிறுத்தி தம்பி-சுக்காளை-சலசலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலியாணப் பாடல்கள்

### எலிக் கலியாணம்

சுண்டெலி நாட்டாருக்குக் கலியாணமாம்
சோளங்கொட்டைப் பல்லக்கிட்டுத் தூங்கிறாராம்
சுண்டெலி நாட்டாரே நீங்களும் வந்திடுங்கோ
சுறட்டெலி நாட்டாரே நீங்களும் வந்திடுங்கோ
மண்டெலி நாட்டாரே நீங்களும் வந்திடுங்கோ
மறட்டெலி நாட்டாரே நீங்களும் வந்திடுங்கோ.
ஒரு எலி வந்து நின்று ஊரைக் கூப்பிடுதாம்
இரண்டெலி வந்து நின்று ஆசனங்கள் போடுதாம்
மூண்டெலி வந்து நின்று முத்து விளையாடுதாம்
நாலெலி வந்து நின்று நாகசின்னம் ஊதுதாம்
அஞ்செலி வந்து நின்று பஞ்சாங்கம் பார்க்குதாம்
ஆறெலி வந்துநின்று பரிசம் செலுத்துதாம்
ஏழெலி வந்துநின்று ஏகாந்தம் பாடுதாம்
எட்டெலி வந்து நின்று ஒரு கொட்டாரம் கட்டுதாம்
ஒன்பதெலி வந்து நின்று ஓலைகொண்டு போகுதாம்
பத்தெலி வந்துநின்று பந்து விளையாடுதாம்
பல்லில்லாத எலிவந்து பெண்ணைத் தூக்கி ஓடுதாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நொண்டிச் சிந்து

அஞ்சு கல்லால் ஒரு கோட்டை-அந்த
ஆனந்தக் கோட்டைக்கு ஒன்பதுவாசல்-ஒன்பது வாசல்
இஞ்சிக்கு ஏலங் கொண்டாட்டம்-அந்த
எலுமிச்சம் பழத்துக்குப் புளிப்புக் கொண்டாட்டம்
கஞ்சிக்குக் கழனி கொண்டாட்டம்-அந்த
கடைகெட்ட மூளிக்குக் கோபங் கொண்டாட்டம்
நந்த வனத்திலோர் ஆண்டி-அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி-அதை
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி
ஆண்டியைத் தூண்டிலில் போட்டாட்ட-அந்த
அழகப்பன் திருமகளை ஐயா போட்டாட்ட
பூனையைப் பொறிச்ச மீனாட்ட-அந்த
புளியானைப் பத்தனைப் பெண்டில் போட்டாட்ட

தான தனா தன

## மீன்பிடிகாரர் பாடல்

புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே
கட்டுவலை எடுத்துக் கிட்டுப் புறப்படுவோமே
கடல் கடந்து செல்வதற்குத் தோணியுமுண்டு
கட்டை சுறா உழுவை மீன் கடலிலே உண்டு
கடவுள் தந்த கைகளே முழுப்பட உண்டு-
மச்சான் முழுப்பட உண்டு
கடல் கடந்து மீன்பிடிப்போமே-வீண்
கவலையற்று வாழ்ந்திடுவோமே
முப்பது நாள் உழைத்துழைத்து நிறையப் பணம் வாங்கி
அதை மூன்று நாளிற் திண்டுவிட்டுக் கடனையும் வாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கி நாளிற் பெரும் பகுதியைப் பட்டினியாக்கி
மனப் பதறலோடு மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்
மன்-மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்
புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே.

### கும்மிப் பாட்டு

கும்மியடி பெண்கள் கும்மியடி
கோவிலங்காயைக் குலுக்கியடி
ஒன்பது கட்டியிற் கறியாக்கி
கறிக்கு மாங்காய் பறிக்கப்போய்
கையில் வெட்டிச்சாம் கிழக்கத்தி
ஆற்றுத் தண்ணீரில் ஊற்றெடுத்து
ஆவாரம் பூவிற் சோறாக்கி
பட்டை மரத்திற் தொட்டிகட்டி
பச்சைப் பாய்களைப் போட்டாட்டி
மின்னிட்டாம் பூச்சியில் விளக்கேற்றி
வேடிக்கை பார்க்கிறாய் வீராயி

இந்த நிலாவும் நிலாவு மல்ல
நித்திரைக் கேற்ற நிலாவுமல்ல
இந்த நிலாவுக்கும் சந்தனப் பொட்டுக்கும்
இப்படியா கும்மி கொட்டுறது
மாதா கோவிலு போன மக்காள்
என்னென்ன அடையாளங் கொண்டு வந்தீர்
கல்லாமல் மோதிரம் காணிக்கைச் சப்பறம்
வெள்ளானைக் கோட்டையைக் கொண்டு வந்தோம்.

கல்லு மலையிலே கல்லுருட்டி
கல்லுக்குக் கல்லு போட்டுருட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதகுளம் மன்னவர் வாறாரு
பாருங்கடி சாய வேட்டியே தானுடுத்து
தங்க அருனாவை மேல் பூட்டி
வீசி நடப்பவர் நம்மையா
இந்த நிலவும் நிலாவு மல்ல
நித்திரைக்கேற்ற நிலாவுமல்ல

சந்தனப் பொட்டடி நானுனக்கு
சந்து சவ்வாதடி நீயெனக்கு
சந்தனப் பொட்டுக்கும் சாந்துச் சவ்வாதுக்கும்
சம்மதமோ முத்து வீராயி.

குத்து விளக்கடி நானுனக்கு
கொவ்வப் பழமடி நீயெனக்கு
குத்து விளக்குக்கும் கொவ்வப்பழத்துக்கும்
சம்மதமோ முத்து வீராயி.

## சிருங்கார ரசப் பாட்டுகள்

பஞ்ச வர்ணக் கிளிபோலொரு பெண்ணை
நான்பார்த்து வந்தேன் சாமி
கொஞ்சமுஞ் சந்தேக மில்லாமலே
யந்தக் கோலமயிலை நீர் கொள்ளுஞ்சாமி
அனுகூலம் வந்ததென்று துள்ளும்
நல்ல காலம் கவலையைத்தள்ளும்

மாமரத்துக்கும் பூமரத்துக்கும்
மைலைக் கண்ணாட்டி
மாமிபெற்ற மருக்கொழுந்துக்கு
நானே பெண்டாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்காணும் ரோட்டிலே நிற்கிறீர்-கொஞ்சம்
இளைப்பாறிப் போங்காணும் வீட்டிலே
மான்புள்ளிப் புறாவொன்று கூட்டிலே-மன்னன்
மான்வேட்டைக் கேகிறான் காட்டிலே!

பாக்குவெற்றிலை கேட்கிறார் அவர்
போக்கணம் கெட்ட மாப்பிளை
பசிக்குதென்று சோறு கேட்டால்
அடிக்க வாறார் மாப்பிளை
மடியைக்காட்டிப் பிச்சை கேட்டால்
தடியைக் காட்டிறார்
அடிபணிந்து தெண்டனிட்டால்
வெளியே போடி என்கிறார்.

தங்கம்மா தங்கம்மா என்னாணம் காய்யச்சினாய்
கருவாட்டாணம் காய்ச்சினேன்
கையில் ஊத்தி நக்கினேன்
அவரைக் கண்டு விக்கினேன்
அம்மியடியில் கக்கினேன்.

மழைபேயிது மழைபேயிது மத்தாளங்கொட்டுது
மத்தாளங்கொட்டுது
எங்கட் நிலையிலே எல்லாமச்சானும்
வாங்கோ வாங்கோ
ஆத்தங் காயை வெட்டிப் பார்த்தால்
அங்கேயில்லை கள்ளமச்சான்
பயத்தங்கட்டை அவிழ்த்துப் பார்த்தால்
அங்கேயில்லை கள்ளமச்சான்
முத்துத்தேங்காயை உடைத்துப்பார்த்தால்
முத்துக்குளிக்கிறார் கள்ளமச்சான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிக்கொத்த மச்சானை வறுத்திடித்து
வாயிலே போட்டால் ஆகாதோ; ஆகாதோ;
நேற்று வந்த காற்றுக்குத் தூற்றிவிட்டால்
ஆகாதோ; ஆகாதோ.

மத்திய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

சின்னக்குட்டி புரியன் சீமானாம்
சிப்பிலிச் சந்தைக்குப் போனானாம்
அங்கையொருத்தியைக் கண்டானாம்
ஆவட்டம் சோவட்டம் போட்டானாம்
பாக்குமரத்திலே முத்தெடுத்து
பவளம் பூப்போற் சோறாக்கி
வாடாமச்சான் சோறு தின்ன
போடடி மச்சான் சட்டியிலே
இப்படிக்கொத்த மச்சானை
வறுத்திடித்து வாயிலை போட்டாலாகாதோ

வேலிக்கு நாட்டிட்ட கட்டைக்கும்-இந்த
வேசைகள் செய்கிற வம்புக்கும்
காலுக்குள் மிதிபட்ட மண்ணுக்கும்
கலிகாலக் கொடுமையைச் சொல்கிறேன்
சின்னவயதில் மயில் ஆடுமோ
வாழை சீக்கிரமாய்க் குலைபோடுமோ
தன்னை யறியாக் குமர் வாழுமோ
குளத்துத் தண்ணீரை
வெள்ளிங்கொண்டோடுமோ
இன்னமும் என்னடி நித்திரை.

ஊரார் உறங்கையிலே
உற்றாருந் தூங்கையிலே
நல்ல பாம்பு வேடங் கொண்டு
நான் வருவேன் சாமத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பாம்பு வேடங்கொண்டு
நடுச்சாமம் வந்தாயானால்
ஊர்க்குருவி வேடங் கொண்டு
உயரப்பறந்திடுவேன்

ஊர்க்குருவி வேடங்கொண்டு
உயரப் பறந்தாயானால்
செம்பருந்து வேடங்கொண்டு
செந்தூக்காய்த் தூக்கிடுவேன்.

செம்பருந்து வேடங் கொண்டு
செந்தூக்காய்த் தூக்கவந்தால்
பூமியைக் கீறியல்லோ
புல்லாய் முளைத்திடுவேன்.

பூமியைக்கீறியல்லோ
புல்லாய் முளைத்தாயானால்
காராம்பசு வேடங்கொண்டு
கடித்திடுவேன் அந்தப் புல்லை

காராம்பசு நீயானால்
கழுத்துமணி நான் ஆவேன்.
ஆலமரத்தடியில்
அரளிச்செடி நானாவேன்.

ஆலமர முறங்க
அடிமரத்தில் வண்டுறங்க
உன்மடியில் நானுறங்க
என்ன வரம் பெற்றேனடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திமரம் நானாவேன்
அத்தனையும் பிஞ்சாவேன்
நத்திவரும் மச்சானுக்கு
முத்துச் சரம் நானாவேன்.

சிற்றாடைதான் உடுத்திச்
சிறுவரம்பே போறவளே
உற்றார் அறியாமல் ஒரு
உற்றகதை சொல்லிவிட்டுப்போ.

உற்றார் அறியாமல் உனக்கு
உற்றகதை சொல்லுவேன்
இக்குடத்தை ஒருகையால்
உயர்த்தி விட்டாலாகாதோ.

குடமும் உயர்த்துவேண்டி உன்றை
கொங்கை இரண்டும் தாங்குவேண்டி
நாடி வந்த காரியத்தை
நாவாலுரைத்திடடி.

தட்டான் அறியாமல் எனக்குத்
தாலி பின்னித் தருவியோடா
தட்டான் அறியாமல்
தாலிபின்னித் தருவேனானால்
அடுப்பு மூன்று கல்லில்லாமல்
எனக்குச் சோறு ஆக்கித் தருவியோடி.

அடுப்புமூன்று கல்லில்லாமல்
சோறு ஆக்கித் தருவேனானால்
கனதனங்களிரண்டும் முட்டாமல்
எனக்கு ஒரு மதலைதருவியோடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடா வெத்திலை வதங்க
வெத்திலை வாய்க்கு நல்லால்லே
நேத்து வைச்ச சாந்துப்பொட்டு
நெத்திக்கு நல்லால்லே
குருவிகொத்தின அரளிப்பூவு
கொண்டைக்கு நல்லால்லே
மாமன் வந்து தோப்பிலே
நிக்கிறது மனசுக்கு நல்லால்லே.

அரிசி விக்கிற விலையிலே
அவள் கிடக்கிற கிடையிலே
இரண்டு பெண்டாட்டிக்கு ஆசை
இளுபடுகிறதே மீசை.

மாமரத்துச் சோலையிலே
வைக்கக்கட்டு மூலையிலே
அந்தக் கோமளத்தின் குட்டிவந்தா
கொஞ்சிக்கிட்டுக் குந்தியிருப்பேன்.

சமத்தி சின்னத்தங்கம்
சுதந்திரப் பெண்ணு
வெகு தாராளமாக
அவளுக்கிட்டே சங்கதி ஒண்ணு
ஒய்யாரமாகக் குலுக்கி நடப்பா
அவளே என்கண்ணு
நான் அடியும் படுவேன்
சிலசமயம் அவகிட்டே நிண்ணு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாண்ணே நமது சொத்து
அதுக்கு மேலே அவளுமுத்து
சாமானியப் பேரு சரியாய்
அவளுக்காசை என்மேலேதான்
என்சொல்வேன் அவளைக்கண்டு
ஏமாந்து போனேன்.
இதுபோலவே வாய்க்காதெடா
மாரிமுத்து அண்ணே
அவஇருந்தாலே இனிக்காதெடா
சர்க்கரையும் அண்ணே.

ஆக்கவேண்டாம் காச்சவேண்டாம்
சுண்டெலிப் பெண்ணே
அருகிருந்தாற் போதுமடி
சுண்டெலிப் பெண்ணே,
குத்தவேண்டாம் கொழிக்க வேண்டாம்
சுண்டெலிப் பெண்ணே,
கூட இருந்தாற் போதுமடி
சுண்டெலிப் பெண்ணே.

மாட்டான் மருக்கொழுந்தே
மாடுமேய்க்கும் சின்னத்தம்பி
நீமேய்க்கும் மாடுகளெல்லாம்
மலையேறிப் போகுதடா
மலையேறிப் போனாலென்ன
மஞ்சம் புல்லு மேய்ந்தாலென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீகுளிக்கும் மஞ்சளுக்கு
நின்று தவஞ் செய்திறேன்டி
நின்று தவஞ் செய்தேனென்று
கண்ணைமூடிப் பேசாதேடா
அண்ணார்ந்து பார்த்தாயானால்
உன்னாக்கைப் பிடுங்கிடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவாலியூர் சோம சுந்தரம் பிள்ளை**

## தமிழ்த் தாய்

மூவேந்தர் தாலாட்ட முச்சங்கத் தேகிடந்து.
பாவேந்தர் செந்நாவில் நடைபழகி மொழிபயின்று
மங்குலுறை வேங்கடமும் வான்குமரிப் பேராறும்
தங்குமிடைத் தமிழுலகும் அரசுபுரி தமிழ்த்தாயே!

ஆடினர் பாடினர் ஆர்த்தனர் செறிந்தார்
அம்மையுன் வாய்மொழி யருமையை அறிந்தார்
தேடினர் ஓடினர் சிறுமையை அறிந்தார்;
தெருவெங்கும் செந்தமிழ்த்தோத்திரம் எடுத்தார்
வாடினர் உன்திருக் கோலத்தைக் காண
வந்தனர் செந்துவர் வாய்ப்பெரு மாட்டி!
ஏடியல் வெண்மலர் முத்தமிழ்க் கடலே!
இன்னமு தே! பள்ளி எழுந்தரு ளாயே!

மாவாழ் பொதிய மலையிற் பிறந்து வரமுனிவன்
பூ வாழ் கரமெனும் பொற்றொட்டி லாடிப் புலவர்சங்கப்
பாவாழ் பலகை இருந்து ஏட்டி லேதவழ் பாவையென்றன்
நாவாழ்வு உகந்தமை நான்முன்பு செய்திட்ட நற்றவமே!

தவந்தரு மேலாந் தனந்தரும் இன்பந் தருந்தணியா
நவந்தரு சீர்தரும் நட்புத் தரும்நல்ல வாழ்வுதரும்
பவந்தரு தீவினை வேரும் மரமும் பறித்தழியாச்
சிவந்தருஞ் செந்தமிழ்ச் செல்வியின் ஞானத் திருவடியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ்ச் செல்வியைத் தாமரை
யாட்டியைத் தென்பொதியச்
சந்தனச் சோலையில் ஏழிசை
கூவுந் தனிக்குயிலைச்
சிந்தையிற் பூத்துச் செந் நாவிற்
பழுத்துச் செவியினிலே
வந்து கனியும் பனுவற்
பிராட்டியை வாழ்த்துதுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவை இரத்தினதுரை

## கூண்டைத் திற

ஆண்டு பலவாக அடங்கி,
குனிந்த தலை
மீண்டும் நிமிர்த்தாது இருக்கின்றாய்
அந்தோ பார்
காலடிகள் பட்டுக் கசங்குகிறது புல்.
நாங்கள்
நாலடிகள் எடுத்து நடப்பதற்குள்
முன்போல,
மீண்டும் நிமிர்ந்து மிடுக்கோடு நிற்கிறது!
யானையைக் கூட அடக்கினாள்,
"அரியாத்தை"
யாரிவள்?
உன் பூட்டி,
பூனைக்கண்ணோடு புகுந்த அந்நியனை
ஓட விரட்டினான் ஒருவன்.
யாரிவன்?
உன் பூட்டான்.
வேண்டும் உனக்கிந்த வீரம்
தமிழனே!
கூண்டைத் திறந்து குதித்து வெளியேவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவை இரத்தினதுரை

## ஊழிக்கூத்து எப்போது?

பெண்ணே! கண்களைத் திற.
விழிநீரைத் துடைத்து எறி.
அதில் திரிபோட்டு விளக்கேற்று.
உலகம் உனக்குத் திறந்தவெளிச் சிறைச்சாலை;
விலங்கிடப்படாத கைதி நீ.
உனது விடுதலைக்குத் தேதி குறிக்கவில்லை;
"என்னை விடுதலை செய்"
என்றாவது 'மகஜர்' கொடுத்தாயா?
அதுகூட இல்லை.
வளையலும், மெட்டியும், கனகாம்பரமும்
உனக்கு வடிவுதான்
அதனால்தானே,
சேலைக்கடைப் பொம்மை போலக்
காலம் கழிக்கின்றாய்,
எனக்குத் தாய்...இன்னொருவனுக்குத் தாரம்...
அடுத்தவனுக்கு அக்கா...மற்றவனுக்கு மகள்...
எததனை அவதாரங்களாகின்றாய்!
என்றாலும் அடங்கிய வாழ்வுதான்.
எத்தனை யுகங்களாக...
புல்லாகி, பூடாய், புழுவாய், மரமாகி
செல்லாத வாழ்வு உனக்கு?
உன் ஊழிக்கூத்து எப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவை இரத்தினதுரை

## இரண்டு வேனிற் காலம்

சென்ற வருடம்
வேனிற் காலத்தில்
முதுகில் எனக்கு வேர்க்குரு போட்டது
நிழலாய் நின்ற தோழனைக் கேட்டேன்
இதமாய் வேர்க்குரு உடைத்தே விட்டான்
இந்த வருடமும் வேனிற்காலம்
மீண்டும் வேர்க்குரு
நிழல் பக்கத்தில்தான் நின்றது
கேட்கத்தான் முடியவில்லை
எதிரியின் பாசறை
எரியிடும் சமரில்
இரண்டு கைகளையும் இழந்து நின்றான்
எப்படிக் கேட்பேன்?
வேர்க்குரு இப்போ முதுகில் அல்ல-
இதயத்தில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில்லையூர்செல்வராசன்**

## தற்பாயிரம்

நல்லார் வதிகின்ற யாழ்ப்பாணக் கோடியிலே
நெல்லாலை சார்ந்து நீர் சூழ்ந் திலங்குவது
எல்லாலை செல்ல இணங்காத சோலைமலி
சில்லாலை என்கின்ற சிற்றூர்; அச்சிற்றூரான்
கல்லான்; நன்னூலொடு தொல்காப்பியமும் யாப்பியலும்
வல்லார் வாய்க்கேட்டறியான்; வாய்க்கால் வயற்களத்தில்
நெல்லடிக்கும் போதினிலே நெஞ்செழுந்த ஆர்வத்தாற்
சொல்லடுக்கும் கிராமியச் சோதாக் கவி அடியேன்

ஏரடிச் சாலில் எழுங்கதிரெடுத்து
போரடித்துலகைப் புரப்பதையன்றி
வேறெடுத்தெதையும் விரித்துரைப்பாவாய்க்
கூறிடத் தெரியாக் குறுஞ் சிற்றூரான்
ஓரடிவழியில் ஒற்றடி வரம்பில்
சீறடி பெயர்த்துச் செல்மடமாதர்
நேரடி தவறா நெறிநடை நேர்த்திச்
சீரிடையுளத்தைச் செலுத்தி இன்புற்றோன்!

எள்ளுப்போலே எனினும் இன்தமிழைக் கற்றறியாச்
சில்லறைகள் கூட்டத்துச் சிறியேன்; செழும்அமுதத்
தெள்ளு தமிழ்ச் சுவையைத் திண்ணைக் குரமரபுப்
பள்ளியிலே கற்றறியாப் பதர் அடியேன்; குன்றம் சார்
பேராதனையிற் பெரும்பெரும் நூற்கட்டுகளை
ஆராதனை பண்ணி ஆகிக் கலாநிதியாய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டங்கள் கட்டிப் பறக்க விடாப்பாமரன் யான்!
எட்டாக் கவிப்பொருளைக் கொட்டாவி விட்டறியேன்!
மேளத்தில் முத்து விரல்கள் விளையாடித்
தாளலய ஞான தரிசனங்கள் காட்டிய நம்
ஈழத் தவிலரசன் எழிலார் இசைக் கணித
வேழமெனவே திகழ்ந்த வித்தகன் எம் சொத்தான
தட்சிணாமூர்த்தி தவிலிற் பொழிந்த
தாளவரிசை தமிழிற் பொழிவோன் யான்
கொள்ளத் தகுமென்றால் கொள்ளும்; தகாததெனில்
தள்ளும்; எனக்குத் தமிழ் என்ன சீதனமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில்லையூர்செல்வராசன்**

## கடவுள் ஆகவேண்டும்

கடவுளாக வேண்டும்-நானோர்
கடவுளாக வேண்டும்-சொல்லின்
கடவுளாக வேண்டும்!

உலகமெங்குமுள மனிதரெல்லாரும்
ஊழி காலம் எனை உளமிருத்தவே
தலைசிறந்ததாய் நான் இனித்த செந்
தமிழிலே கவிதை தான் படைத்திடும்

கடவுளாக வேண்டும் - படைத்தற்
கடவுளாக வேண்டும்!

நல்லதென்றெனது உள்ளம் உள்ளுகிற
நனி சிறந்த உயர் அறமெலாம் உலகில்
வல்ல ஆயுளொடு வாழுமா றெனது
வாக்கினால் அவைகள் காக்கும் ஆற்றலின்

கடவுளாக வேண்டும்-காத்தற்
கடவுளாக வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் நல்லவர்கள் வாழ்விடர்ப் பிடியில்
இட்டெவர் வரினும் எனது தீ உமிழும்
அங்கதக் கவிதைவிழியினால் அவைகள்
அற்று நீற பட இற்றழித்திடும்

கடவுளாக வேண்டும் - அழித்தற்
கடவுளாக வேண்டும்!

கடவுளாக வேண்டும் - ஆமாம்
கடவுளாக வேண்டும் - சொல்லின்
கடவுளாக வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில்லையூர்செல்வராசன்**

## ரயில் விடு தூது!

குக்கூ குக்கூ என்று
கூக்குரலிட் டென் நெஞ்சின்
திக்கிட்ட குரலை ஒலித்
தேம்புதலையே பிரதி
செய்தோடும் ரயிலரசி!
சேதி ஒன்றென் காதலிக்கு-
கண்ணிற் கருத்திற்
கலந்திணைந்த என்கமல
வண்ண மடவாளுக்கு-
வாழ்த்தி உரையாயோ?

நாளும் பொழுதும், எந்
நாழிகையும், நாழிகையிற்
சூழும் கணந் தோறும்,
கணத்தின் ஒரு கூறு தொறும்,
கூறாம் கணத்தின் ஒரு
கோடி துகட் பொழுதும்
நீறாய்க் கனல்கின்ற
நெஞ்சோடிருந்தொருவன்,

கோடி யுகங்களாய்க்
கூடி இணைந்தொருங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடி உறவாடிப்
பல்லாயிரம் பிறப்பிற்
சோடிப் பறவைகளாய்ச்
சுற்றிக் களித்த நினைவு
ஓடி மனத்தை
உலுக்கத் தனது துணை
இந்தப் பிறப்பினிலே
ஏன் பிரிந்த தென்று அயரும்

சிந்தையனாய் வாடுகின்ற
சேதியினைக் கூறாயோ?
அந்த நினைவே அவ்
வாரணங்கின் உள்ளத்தை
நொந்துழல வைப்பதனால்
நொடியும் களிப்பின்றி
ஏங்கித் துடிப்பதனை
இவனும் அறிவான்; அத்
தாங்காத் துயரைத்
தகர்த்தெறிந்து வல்விரைவில்

முந்தியிருந்த நிலை
முகிழ்க்க வழிதேடி
வந்திடுவான்! ஆதலினால்
வாடாத தாமரையாய்,
அந்தத் தினம் வரையும்
ஆறி மனம் தேறி.
சிந்தும் நகைப்பும்
செழிக்கும் மனநிறையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புந்தி பசிக்காப்
புசிப்பும் உயிர்ப்பும் உற்றுக்
கந்தம் கமழ்கின்ற
காரிகையாய், நம்பிக்கை
வைகும் மனவுறுதி
வாய்ந்திருக்கும் வாறாகச்
செய்கும்படி, தேற்றச்
செய்தியினைக் கூறிவிடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## இன்றுலக நனவெல்லாம்
## சென்றவரின் கனவன்றோ!

தினமும் விழிக்கையிலே கனவில் இனிக்கின்றேன்!
தினமும் விழித்தவுடனே கனவோ கசக்கிறது!
மனமோ விழித்தவுடன் மயக்கம் கலைகிறது!
அனர்த்த உலகத்தின் அர்த்தம் புரிகிறது!

யதார்த்தம் என்ற பதத்துக்குப் பதார்த்தம் கிடையாது!
சதார்த்தப் பொருண்மைதரும் சரித்திரங்கள் கிடையாது!
கனவுகளின் ஆனந்தம் நனவுகளில் கிடையாது!
கனவுகளில் வென்றவர்கள் நனவுகளில் தோற்றாலும்

வென்றவர்கள்! வென்றவர்கள்! வேறுலக வாழ்க்கைக்குச்
சென்றவர்கள் ஆனாலும் இவ்வுலகை வென்றார்கள்!
சென்றவர்களின் கனவே இன்றுலகம்! இன்றுலகம்!
இன்றுலகம் வாழ்வதெல்லாம் சென்றவர்களின் கனவில்!
சென்றவரின் அடிச்சுவட்டில்!

இன்றுலக நனவெல்லம்
சென்றவரின் கனவன்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில்லையூர்ச்செல்வராசன்**

## ஆய்வறிவின் தலைமகனுக்கு அஞ்சலி

அன்புள்ள கைலாஸ்! உன் அறிவு சுடரும் முகத்தைக்
கண்டின்னும் மாதம் ஒன்று கழியவில்லை!
சந்திக்க மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிட்டடியில்
வந்து வாய்க்காது; எனவே வரையும் கடிதத்தை
ஏற்றுக் கொள் நண்பனே! இன்றைக்குன் ஆய்வறிவின்
ஆற்றலினைப் போற்றி உவந்து அஞ்சலிக்க யாழ்நகரில்
வீரசிங்கம் மண்டபத்தில் விழா! இங்கு பா அரங்கில்
நீரசித்த நல்ல கவி நெஞ்சர் சிலர் கூடி
என்னைத் தலைமை கொண்டுன் ஏற்றங்களைப் பாட
முன்னுகிறார்! இந்த முகூர்த்தத்தில் உன்னோடு
சின்ன வயது முதல் சேர்ந்து பழகிய நாள்
எண்ணங்கள் நெஞ்சில் எழுகின்றன! நேசக்
கைலாஸ்! உன்னோடுள்ளம் கலந்த பல கணங்கள்,
சர்ச்சை, புரிந்த சமயங்கள் பற்பலவும்
அச்சடித்த சித்திரம் போல் அகத்திரையிலே தோன்ற
நெஞ்சம் நெகிழ்கிறது! நினைவிலிருக்கிறதா?
சஞ்சலங்கள் நெஞ்சத்தில் சாராத வாலிபத்தில்,
பத்திரிகை ஆசிரியப் பணி நான் புரிகையிலே
அத்தருணம் ஏலஎனக் கறிமுகமாய் ஆகிவிட்ட
சிவத்தம்பி தன்னுடைய சிநேகிதன் என்றே எனக்கோர்
சிவத்த, மெலிந்த, சிறுவனைப் 'பேர் கைலாச
பதி' என்றறிமுகங்கள் பண்ணி வைக்கப் பார்த்தேன் நான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி கூர்ந்த கண்கள், அடர்ந்த புருவங்கள்,
கூர்விழுந்த மூக்கின் மேல் கொழுந்த ஒரு கண்ணாடி
சீரொழுக வாராத சிகையில் ஒரு மிடுக்கு.
கடைவாய் முனையில் ஒரு கள்ளக் குறுஞ்சிரிப்பு-ஆம்!
பார்த்த அன்று றோயலில் நீ பள்ளி மாணாக்கன்! அரைக்
காற்சட்டையோடு, கடற்கரையில் போயமர்ந்து
பேசப் பிடித்தோம்! பிறகல்லோ உன்னுடைய
நீ சமர்த்தன என்ற நிசத்தை அன்றே பாரதி
தாசனைப் பற்றி நாம் தர்க்கித்த நெடும் போதே
கண்டு கொண்டேன்! அந்த இளங் காலைப் பருவத்தும்
விண்டு விண்டு கவிதை விழுமங்கள் ஓர்ந்துரைக்க,
ஆய்வறிவின் தலைமகனாய் ஆவாய், கலைக் கடலில்
தோய்வாய், சுடர்வாய், துறை போகக் கற்றெழுத்து
மலைபோல் நிமிர்வாய், மகிமை பல பெறுவாய்,
விலையிலா இலக்கிய விருந்து பல படைப்பாய்,
கொண்டாடும் ஓர் நாள் குவலயமே உன்னை எனக்
கண்டு கொண்டேன் அன்றைக்கே! கைலாஸ்! அதன்பிறகு
ஞாபகமா? சர்வகலா சாலையிலே நிறையக் கடிதங்கள்
வரைவாய் அவையெல்லாம் வாரந் தவறாமல்
நிறைசெய்தென் பத்திரிகை நேர்சீர் குறைசீர் நிறைகள்
பற்றி விமர்சிக்கும்! பழைய இலக்கியங்கள்,
சற்று முன்தான் வந்த கதை நூல்கள், எல்லாமே
வைத்துக் கடிதங்கள் வரும் உன்னிடமிருந்து!
மாதம் ஒருக்காவேனும் வந்தால் கொழும்புக்கு
நீ தவறவே மாட்டாய் நேரிலே சந்திக்க!
காலலூர், சிவத்தம்பி, கைலாசன், சில்லை என்ற
நால்வர் கொட்டாஞ்சேனையிலே நம் அறையில் கூடிவிட்டால்
விடிய விடிய விழாத்தான், கலைவிழா!
பொடியன் சறத்தோடு போட்ட மிதியடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டை சொடுக்கக் கலரியில் போய் 'செக்கன்ட் ஷோ'
கிட்ட இருந்து சிகரெட்பிடித்த படி
பார்த்து விட்டுச் சாமத்தில் படத்தை விமர்சிக்க
நூர்த்திரா இராக் கடையில் நுழைவோம்! பிளெயின்டீயும்
வந்த படியிருக்கும், வாய்ச் சமா ஓயாது!
எந்தப் பொருளெனினும் எங்களுக்கு வாய்ச்ச மா!
போட்டரைப்போம்! போதும் இனிப் போங்கள் என அன்று
தர்பார்
ஹோட்டல் முதலாளி சொல்லார்! கடையைத்தான்
பூட்ட முடியாதே! கதவே கிடையாதே!
கேட்டலுக்க வைத்துக் கிளம்புவோம் காலைக்
கடனென்றும் ஒன்றுள்ள காரணத்தால், எங்கள் கலை
மடமன்று விடிய மடங்கும் மறுதேதி
குறித்து! அந்தச் சந்திப்புக் கூட்டங்கள் அன்று
பொறித்த மனப்பதிவுப் பொக்கிஷங்களே பின்னர்
வளர்ந்த கலை மாளிகைக்கு வைத்த அடிக்கற்கள் என
விளம்பலாம்! இல்லையா? சொல்லையா கைலாஸ்! நம்
ஈழத் தமிழின் இலக்கியப் பேர் மாளிகையில்
ஆளப் பிறந்தே அரசோச்சி, உலகத்தில்
எங்கு தமிழ் உளதோ அங்கெல்லாம் உன் திறனால்
மங்காப் புகழ்பரப்பி வந்தவனே! சொல்லையா?
கண்களில் நீர்; நெஞ்சில் தீ என்று கணேச
லிங்கன் எழுதிய இரங்கலின் வாசகத்தை
மெய்ப்பித்த காட்சி விளைந்த மயானத்தில், தீ
வைப்பதற்கு முன் உன்னை வழியனுப்பி வைப்பதற்காய்ப்
பிரிய விடையாய்ப் பிறந்த என் ஆணையை நீ
புரியா விடின் எங்கள் புலம்பல் தரியாது!
போய் வருக இனிய கலைப்பூபதியே! அழகுப்
பூந்தமிழால் இலக்கியத்தைப் புரந்த பெருவழுதி!
ஆய்வறிவின் தலைமகனே! இங்கிதனே! சித்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியனே! நாவலனுக் கடுத்தபடி ஈழத்
தாயகத்தின் பெருமையெலாம் தமிழ் கூறும் வையத்
தவமனைத்தும் பரப்பிய செந்தமிழ்க்குமர! உன் பெரும் பேர்
மாய்வதற்கு விடுவோமா? மறுபடியும் வருக!
மணி மகுடத் தமிழ்ப் பீட மகிமையினைப் பெறுக!
பைந்தமிழைக் கைலாசபதியில் நிலைபண்ணிப்
பரவெளியில் தேவர்களைப் படிப்பித்து வருக!
செந்தமிழின் வளர்ச்சி நிலை செப்பிடுக! சிவனைச்
சந்தித்துன் தோழர்கள் இச்சகதலத்தில் நவமாய்த்
தமிழுக்குப் புதுவாழ்வு தருவதனைச் சொலுக!
சிந்திப்பின் மகுடபதி! சென்று மறுபடியும்
திரும்பிடுக, உன் பணியால் தமிழ் அழகு பலுக!
நீண்டதாய் இந்த முறை நிருபம் எழுதிவிட்டேன்!
மீண்டும் சந்திப்போம் விடை தருக! இப்படிக்குன்
அன்பு மறவாத சில்லையூர் செல்வரா
சன் என் தான் தோன்றிக் கவிராயனின் வணக்கம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகம் சிவலிங்கம்

## அற்பங்கள்

அற்ப நிகழ்வும்
அர்த்தம் அற்றதும்
என்னுடன் வருக.

உதிரும் மணலும்
உருவழியும் நீர்வரையும்
எனது உவப்புகள்.

மங்கல் நிலவும்
மாலைக் கருக்கலும்
விடியற் கலங்கலும்
எனது விருந்துகள்.

ஒன்றுமிலா வெளியும்
உதிர்ந்து விழும் இலையும்
நெஞ்சை முழுதும் நிரப்பும்.

பாதையின் ஓரம்படரும் சிறுபுல்லும்
கானகத்தில் எங்கோ கண்மலரும் ஓர்பூவும்
போதும் எனக்கு.
(மற்றதெலாம் போக)

அற்ப நிகழ்வும்
அர்த்தம் அற்றதும்
என்னுடன் வருக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகம் சிவலிங்கம்

## அவள் நினைவு

இளைய சிவப்பு அரும்புகளில்
இலை மறையும் புதுரோஜா.

விழிமூடி ஓர் இமை
தன் விளிம்புகளில் ஊறுவதை
துளி துளியாய் சிந்தும்
துயரவெளிப் பனித்திரையில்
அழுது முகம் மறைகிறது.
அலரிகளும் போய் மறையும்.

பளபளன்ற
சிவப்புநிற
பரல் கல்லில்
நீர் ஓடும்.

சரசரெனும் மாவடியில்
சருகுநிறச் கால் தெரியும்.
அலையெறியும் பாவாடை
முழங்காலின் அருகுயரும்
நடைநடையே நடையதுவாய்
நடையினிலே கால் இரண்டு
விட முடியா ஒரு நினைவாய்
விளையும் ஒரு மனத்திரையில்
கடல் அலைகள் மடிநோக்கி
கரையிருந்து மீள்வனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண்முகம் சிவலிங்கம்**

## மென்மையின் தளைகளிலிருந்து

இருட்டில் மிதந்த இசை
எங்கோ தூரத்தில் ஓர் வானொலி
படிப்பு அறுந்து விழ.......
பூர்வ ஜென்ம உணர்வுகள்.......
ஓர் பூ மொக்கு அவிழ்ந்தது.
தங்க மகரந்த துகள்கள்
பிள்ளையார் கோயிலின் முன்னுள்ள வெண்ணிற பூ
வாசனை......

இந்த உணர்வால் என்ன பயன்?
இந்தக் கனவுகள் எதுவரை?

பாலைவனம்
சுடுமணல்
வெட்டுக் கிளி

தார் ரோட்டு
வாகனங்கள்
நிதானம்
சமநிலை தளம்பாத சைக்கிளின் ஹெண்டல்......
இந்தக் கத்தி விளிம்பிலே எப்போது கால்வைத்தோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறாவைப் பொத்திப் பிடித்து
கூட்டினுள் அமுக்கியபின்
புத்தகத்தைத் திறக்கிறேன்
இருட்டிலே இன்னும் அந்த இசை கேட்கிறது
நீண்டு மெலியும் புகைக் கோலம்
அது இப்போது மரண கீதம்
புறா இறந்த ஊர்வலம்
என் விழி நனைகிறது
கறுத்த எழுத்துகள் கரைகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகம் சிவலிங்கம்

## வெறும் வரிகளும் ஒரு முன்இளவேனிலும்

வெறும் வரிகள்...வெறும் dots
வெறும் கோடுகளும்...வெறும் புள்ளிகளும்
வெறும் இதயம்.

வெளியில்
இளம் வெயில்
சிலிர்த்துச் சிலிர்த்திருந்து
திடீரென
திமிறிப் பாயும் இளங்காற்று

தென்னோலைகளின் திரும்பல்கள்,
புரளல்கள்
மிருதுவான நீலவானின்
வெண்பஞ்சு மிதப்புகள்
எனினும்,
வெறும் இதயம்,
வெறும் கோடுகளும்...வெறும் புள்ளிகளும்
வெறும் வரிகள்...வெறும் dots

தளர்ந்த கடமைகள்
தவறிய வாய்ப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்முடியில் மினுங்கிய வைரமணி
புழுதியில்,-
வழியின் ஓரத்தில்-
வண்டித் தடங்களில்
புதைபட்டு, நெரிபட்டு...
எனினும், புதிய
சங்கல்பங்கள் இல்லை,
சவால்களும் இல்லை.
பின்னோக்கல் இல்லை,
முன்னோக்கலும் இல்லை.
முனைவதற்கு அந்தப் பெருமலைகளா?
இன்னும் இன்னுமா?
அவன் என்ன Sisyphus ஆ?
அந்தத் தெளிவும், இந்த வெளியும் போதும்.
வெட்டைவெளி,
வெறும் வெளி.
வெறும் கோடுகளும்...வெறும் புள்ளிகளும்.
எழுத்துகள் துளிர்க்காத
வெறும் வரிகள்...
வெறும் dots

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண்முகம் சிவலிங்கம்**

## துருவத் தரையின் வசந்தப் பூவுக்கு

துருவத் தரையிலும்
வசந்தப் பூக்கள் உண்டல்லோ
வசந்தப் பூக்களின் வருகைக்காக
துருவப் பாளங்கள் கரையத் தொடங்காவோ

துருவப் பாளங்கள் கரையத் தொடங்குகையில்
புத்தம் புதிய புது நீர் அந்த
வெண்பனி வாய்க்கால் விளிம்பில் சலசலென
ஓடிவருகையில்......ஓ!-
வாழ்வின் வனப்பை வரைய முடியுமா?

ஆங்கோர்
சாண் உயரப் பூக்காடு
தள தளத்து நின்றந்தச்
சீதளக் காற்றில் சிலிர்த்து நிமிராதோ?

ஓ!
நான் கரைய வேண்டும்
நான் கரைய வேண்டும்
என்னுள் ஒடுக்கி இருக்கின்ற ஆனந்த
மென் உணர்வின் வித்தெல்லாம் இந்த
மண்ணில் முளைத்து மலர்ந்து சொரியாதோ

நான் கரைய வேண்டும்
நான் கரைய வேண்டும்
துருவத் தரையின் வசந்தப் பூவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

**பண்டிதர் க. சச்சிதானந்தன்**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பருத்தித்துறைப் பகுதியில் பிறந்த இவர், ஆசிரியராக-ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் ஆழ்ந்த புலமை மிக்க பேராசிரியர், அற்புதமான கவிஞர். இது போழ்து யாழ்ப்பாணத்தில் வாழ்கிறார்.

**இராஜபாரதி**

ஈழத்தின் கிழக்குப் பகுதியான மட்டக்களப்புக்கருகிலுள்ள களுவாஞ்சிக்குடியில் பிறந்த இந்தக் கவிஞர், கல்லூரி ஆசிரியராக-அதிபராகப் பணியாற்றியவர். தமிழ் உணர்ச்சி கொப்புளிக்கும் அற்புதக் கவிதைகள் பல யாத்தவர். சில வருடங்களுக்கு முன்னர் அகால மரணமடைந்துவிட்டார். இயற்பெயர் வி.கி. இராஜதுரை.

**காசி. ஆனந்தன்**

மட்டக்களப்பின் மருங்கேயுள்ள அமிர்தகழி என்ற கிராமத்தில் பிறந்த இந்த ஆவேசக் கவிஞர், தமிழ் ஈழ விடுதலைக்காக முனைப்போடு போராடுகிறார். தமிழகத்தில் நன்கு அறிமுகமானவர்.

**நாவற்குழியூர் நடராசன்**

ஈழத்தின் பழம்பெரும் கவிஞர்களில் ஒருவரான இவர் இது போழ்து வெளிநாட்டில் வாழ்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ. முருகையன்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சாவகச் சேரிக்கருகில் அமைந்த கல்வயல் கிராமத்தில் 1935இல் பிறந்தார் இவர். இது போழ்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளராகக் கடமை ஆற்றுகிறார். தமிழ்க் கவிதைத் துறையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய முன்னோடிக் கவிஞரான இவர், பிரபல இலக்கிய விமர்சகருமாவார்.

## க. வேந்தனார்

கல்லூரி ஆசிரியராக-முதல்தர மேடைப் பிரசங்கியாக-நல்ல கவிஞராகச் சுடர்ந்து அமரராகி விட்டார் இவர்.

## பரம ஹம்சதாசன்

ஈழத்தில் மலைநாட்டுப் பகுதியில் சுடர்வீசிய கவிஞர்களில் ஒருவரான இவர், பக்தி ரசம் ததும்பும் பாக்கள் பல வடித்தவர். பிற்காலத்தில் தமிழகம் வந்து வாழ்ந்து மறைந்து விட்டார்.

## இ. நாகராஜன்

இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டை ஒட்டித் தமிழக அரசால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பரிசு பெற்றவர்களில் ஒருவரான இவர், நாவல்கள், சிறுகதைகள் பலவும் எழுதியவர். வாழ்வின் போராட்டங்களுக்கு மத்தியிலும் இறுதிவரை எழுச்சிக் கவிஞராக விளங்கி மறைந்துவிட்டார்.

## வி. கந்தவனம்

யாழ் மாவட்டம் சாவகச் சேரிக்கருகிலுள்ள நுணாவில் கிராமத்தில் 1933இல் பிறந்த இவர், வேகமுள்ள கவிஞர். ஈழத்தில் கல்லூரி ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் இது போழ்து வெளிநாட்டில் ஆசிரியப் பணியைத் தொடர்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மு. சடாட்சரன்**

அழகிய பாட்டெழுதும் ஆற்றல் பெற்ற இவர், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

**வே. குமாரசாமி**

யாழ் சாவகச்சேரிக்கருகிலுள்ள கல்வயல் கிராமத்தில் பிறந்த இவர், முனைப்போடு கவி பாடுபவர், இது போழ்து ஈழத்தில் வாழ்கிறார்.

**மலைமதி சந்திரசேகரன்**

அவ்வப்போது ஈழத்துப் பத்திரிகைகளில் இனிய கவிதைகளை எழுதிய இவர் மலைநாட்டைச் சேர்ந்தவர்.

**மட்டுநகர் முத்தழகு**

ஆர்வங் கொப்பளிக்கப் பலப்பல கவிதைகளைப் பத்திரிகைகளில் எழுதிவந்த இவர், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

**மகாகவி (1927-1971)**

நவீன தமிழ்க் கவிதையில் மகத்தான திருப்பத்தை ஏற்படுத்திய இவர், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அளவெட்டி கிராமத்தில் பிறந்தவர். இயற்பெயர் து. உருத்திரமூர்த்தி.

**பிருமிள் சிவராம்**

ஈழத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள திருக்கோணமலை மாவட்டத்தில் பிறந்த இவர், சீரிய வசன கவிதைகள் பல வடித்தவர். நுட்பமான திறனோடு இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் பல எழுதியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில்லையூர் செல்வராசன் (தான் தோன்றிக் கவிராயர்)**

யாழ் மாவட்டத்திலுள்ள சில்லாலை என்ற சிற்றூரில் பிறந்த இவர், உத்தியோகத்தின் நிமித்தம் தலைநகரான கொழும்பில் வாழ்ந்து மறைந்து விட்டார். பல்கலை வேந்தரான இவர் வாக்கு சாதுர்யத்துடன் கூடிய வளமான கவிபெய்ய வல்லார்.

**எம்.ஏ. நுஃமான்**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்முனையில் 1944இல் பிறந்த இவர், இதுபோழ்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். நவீன் தமிழ்க் கவிதைகளில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியவர்களில் இவரும் ஒருவர். பல இலக்கிய விமர்சனக் கட்டுரைகளையும் எழுதி வருகிறார்.

**வ.ஐ.ச. ஜெயபாலன்**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நெடுந்தீவில் 1944இல் பிறந்த இவர் ஈழத்தின் சிறந்த கவிஞர்களில் ஒருவர். தீவிர அரசியல் சிந்தனையாளர். இது போழ்து நோர்வே நாட்டில் வாழ்கிறார்.

**சண்முகம் சிவலிங்கம்**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாண்டிருப்பு என்ற சிற்றூரில் 1940இல் பிறந்த இவர் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர். இருபது வருடங்களுக்கு முன்பே எம்.ஏ. நுஃமானின் 'கவிஞர்' கவிதை இதழில் அற்புதமான பல கவிதைகளைப் படைத்தவர். இவரின் நீர் வளையங்கள் என்ற கவிதைத் தொகுதி தமிழில் இதுகாறும் வெளிவந்த மிகச் சிறந்த கவிதைத் தொகுதிகளில் ஒன்றாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மு. பொன்னம்பலம்**

ஈழத்தின் மிகச் சிறந்த இலக்கிய விமர்சகர்களில் ஒருவராகவும் தத்துவச் சிற்பியாகவும் திகழ்ந்து மறைந்த மு. தளையசிங்கத்தின் தம்பியான இவர், "அது" என்ற பேரில் அரிய கவிதை நூலைப் படைத்தவர். யாழ் மாவட்டத்தில் உள்ள புங்குடு தீவில் 1939இல் பிறந்தவர். இதுபோழ்து சொந்த ஊரிலேயே வாழ்கிறார்.

**சேரன்**

ஈழத்தின் முன்னணிக் கவிஞராகத் திகழ்ந்து மறைந்த மகாகவியின் மகனான இவர், ஆவேசக் கவிதை இயல்பாக-புதிய முறையில் எழுதும் கவிஞர். விஞ்ஞானப் பட்டதாரி. 1958இல் யாழ் அளவெட்டியில் பிறந்தவர். இது போழ்து ஈழத்தில் வாழ்கிறார்.

**இளவாலை விஜயேந்திரன்**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இளவாலைச் சிற்றூரில் பிறந்த இவர், இன்றைய ஈழத்தின் இளைய தலைமுறைக் கவிஞர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

**முல்லையூரான்**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள முல்லைத்தீவில் பிறந்த இவர், இது போழ்து டென்மார்க் நாட்டில் வாழ்கிறார்.

**கணபதி கணேசன்**

பத்திரிகை ஆசிரியராகவும், கவிஞராகவும் சொந்த ஊரான யாழ்ப்பாணத்தில் சுடர்ந்த இவர் இது போழ்து சென்னை நகரில் வாழ்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரும இரத்தின குமார்**

இன எழுச்சிக் கவிதைகள் எழுதிவரும் ஈழத்துப் போராளிக் கவிஞர்களில் ஒருவர்.

**செல்வம்**

இன எழுச்சியை ஊட்டும் பாக்கள் பல படைத்தவர்

**சன்மார்க்கா**

எழுச்சி மிக்க கவிதைகளை இயல்பாக எழுதிவரும் ஈழத்தின் பெண் கவிஞர்களில் இவரும் ஒருவர்.

**சிந்தியா செல்வராசா**

கலாநுட்பத்துடன் கவி எழுதி வருகிறார் இவர்.

**நீலாவணன் (1931-1975)**

ஈழத்தின் முதல்வரிசைக் கவிஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெரிய நீலாவளை கிராமத்தில் உதித்தவர். கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றியவர். பல சிறுகதைகளையும் எழுதியவர் இயற்பெயர் சின்னத்துரை.

**புரட்சிக்கமால்**

மட்டக்களப்பைச் சேர்ந்த மணியான முஸ்லீம் கவிஞர். இயற்பெயர் எம்.எம். சாலிஹ்

**அண்ணல்**

ஈழத்தின் கிழக்குப் பகுதியான திருக்கோணமலை மாவட்டத்தின் பாலுள்ள கிண்ணியாவில்000000000 (1930) பிறந்தவர் இவர். காதல் கவிதைகள் பலவற்றைப் பாங்கோடு பாடிச் சுடர்ந்த இவர் பிற்காலத்தில் இஸ்லாமிய மார்க்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளையும் அழகுத் தமிழ்ப் பாக்களில் தந்தவர். பள்ளி ஆசிரியராகவும் பணியாற்றியவர். அமரராகி விட்ட இவரது இயற்பெயர் எம்.எஸ்.எம். சாலிஹ்.

**புதுவை இரத்தின துரை**

ஆரம்ப காலத்தில் ஆவேசமான சமத்துவக் கவிதைகளைத் தீட்டியவர். இன எழுச்சி கொப்பளிக்கும் பாக்களைத் தீட்டி வருகிறார். இவர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள புத்தூரில் பிறந்தவர். சிற்பக் கலா நுட்பமும் அறிந்தவர்.

**மேமன் கவி**

குறிப்பிடத்தக்க வண்ணம் நல்ல புதுக்கவிதைகளை இவர் எழுதி வருகிறார். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிராத இவர் புதிய சிந்தனைப் போக்குகள் பொதிந்த கவிதைகளை எழுதித் தமிழுக்குத் தொண்டு செய்கிறார். இது போழ்து கொழும்பில் வாழ்கிறார்.

**சுபத்திரன்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிறந்த இவர், இளம் வயதிலேயே அகால மரணமெய்தி விட்டாலும் தமது புரட்சித் தமிழால் தமிழ் உலகில் நிலைபெற்ற புகழை ஏந்தி விட்டார்.

**சபா. ஜெயராசா**

யாழ் மாவட்டத்திலுள்ள இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இவர். கருத்துச் செறிவுள்ள கவிதைகள் பல எழுதியவர். உளவியல் ஞானம் பொதிந்த ஆய்வுக் கட்டுரைகள் பலவும் தீட்டியவர். இதுபோழ்து யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாருமதி**

எழுத்தாளர் செ. கணேசலிங்கனின் "குமரன்" இலக்கிய இதழ்களில் முனைப்போடு சமத்துவக் கவிதைகள் எழுதி தம்மை வளர்த்துக் கொண்டவர் இவர்.

**அ. யேசுராசா**

யாழ்ப்பாணத்திலுள்ள குருநகரில் 1946இல் பிறந்தவர். "அலை" என்ற பேரில் தரமான இலக்கிய இதழை இணையாசிரியராக இருந்து நடாத்தியவர். நல்ல சிந்தனை வளம் மிக்க கவிஞர்.

**க.பே. முத்தையா**

சீரிய முறையில் கிறிஸ்தவ மதஞ்சார்ந்த கவிதைகளையும், பொதுக் கவிதைகளையும் எழுதியவர். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த இவர் அமரராகி விட்டார்.

**ஆறுமுகநாவலர் (1822-1879)**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நல்லூரில் பிறந்த இவர், தமிழையும், சைவ சமயத்தையும் தமது வாழ்வின் நாதமெனக் கொண்டு வாழ்ந்தவர். தமிழ் உரை நடையின் தந்தை எனக் கற்றோரால் விதந்தோதப்பட்டவர். இவர் புத்துரை எழுதியும், பரிசோதித்தும், இயற்றியும் வெளிக்கொணர்ந்த தமிழ்நூல்கள் 57 ஆகும்.

**சி.வை. தாமோதரம்பிள்ளை (1832-1901)**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சிறுப்பிட்டியில் பிறந்த இவர், சென்னைப் பல்கலைக்கழகம் முதன் முதலாவதாக நடாத்திய பி.ஏ. தேர்வில் முதல் மாணவனாகச் சித்தி பெற்றவர். பின்பு பி.எல் பட்டமும் பெற்ற 1884ஆம் ஆண்டில் புதுக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுப் பணியாற்றினார். இவரே இறையனார் அகப்பொருள் (1883), தொல்காப்பியம் பொருளதிகாரம் (1885), தொல்காப்பியம் சொல்லதிகாரம் (1900), கலித்தொகை (1883) போன்ற அரிய தமிழ் நூல்களைச் சீரிய முறையிற் பதிப்பித்த தமிழறிஞராவார்.

**சுவாமி விபுலானந்தர்** (1862-1947)

இவர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காரைத் தீவில் பிறந்தவர். பதினான்கு ஆண்டுகள் முனைப்பாக ஆய்வு செய்து "யாழ்நூல்" என்ற பெரும் நூலை இயற்றினார்.

தமிழ்நாட்டிலிருந்து வந்த இராமகிருஷ்ண விஜயம் தமிழ்மாத இதழுக்கும், வேதாந்த கேசரி ஆங்கில மாத இதழுக்கும் ஆசிரியராக அமர்ந்தும் பணியாற்றியுள்ளார். சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு அடிகோலியவர்களில் இவரும் ஒருவர். விஞ்ஞானப் பட்டதாரியான இவர், மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதருமாவார்.

**ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை (1860-1944)**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வயாவிளான் சிற்றூரில் பிறந்த இவர், மின் வேகத்தில் பாடுந்திறன் மிக்க ஆசுகவி. நாற்பது ஆண்டுகாலம் சுதேச நாட்டியம் பத்திரிகையை யார்க்கும் அஞ்சாத தீரத்துடன் நடாத்தியவர். கண்டனங்கீறக் கல்லாடியான் எனக் கற்றோரால் சிறப்பிக்கப்பட்டவர். "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" என்ற அரிய சரித்திர ஆய்வு நூலை எழுதியவர்.

**நவாலியூர் சோமசுந்தரப்புலவர் (1878-1953)**

சைவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த ஈடுபாடுமிக்கவர் இவர். பழந்தமிழ் மரபை அடியொற்றிப் பல அரிய கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியவர். இவர் எழுதிய குழந்தைப் பாடல்கள் உணர்ச்சியும் எளிமையும் கொண்டு விளங்குகின்றன.

**வல்வை வயித்தியலிங்கம் பிள்ளை (1852-1901)**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மானமறவர்களின் திரமண்ணான வல்லுவெட்டித்துறையிலே பிறந்தவர் இவர்.

தமிழ்ப்புலமையும், சமஸ்குரத புலமையும் மிக்க இவர், தருக்கம், சோதிடம், வான சாஸ்திரம் போன்ற துறைகளில் தெள்ளிய அறிவு மிக்கவர். "சைவ மகத்துவ திக்கார நிக்கிரகம்" என்ற இவர்தம் நூல் கண்டு வியந்த சென்னை நல்லறிஞர்கள் இவருக்கு "இயற்றிமிழ்ப் போதகாசிரியர்" என்று பட்டமளித்துப் போற்றினர்.

இவர் பதினொரு நூல்களை இயற்றியுள்ளார். மூன்று நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

"சைவாபிமானி" என்ற பேரில் ஓர் பத்திரிகையும் நடாத்தியுள்ளார்.

**நவாலியூர் சோ.நடராசன்**

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த புலமை மிக்கவர். சோமசுந்தரப் புலவரின் மகன். தமது தந்தையாரைப் போவே நற்கவிபாடுந்திறன் மிக்கவர். அரிய சமஸ்கிருத இலக்கியங்களைத் தமிழில் சீரிய முறையில் வெளிப்படுத்தியவர்.

**அல்வாயூர் மு. செல்லையா**

யாழ் மாவட்டத்திலுள்ள அல்வாய் என்ற சிற்றூரில் பிறந்த இவர், "வளர்பிறை" என்ற அரிய கவிதை நூலை எழுதியவர். பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். அழுத்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகப் பிரிவு,
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



மரபுக்கவிஞர். இவரது கவித்திறனை கண்ணதாசன் வியந்து பாராட்டியுள்ளார். இவர் அமரராகிவிட்டார்.

**யாழ்ப்பாணன்**

யாழ் மாவட்டத்திலுள்ள பருத்தித் துறைப்பகுதியில் பிறந்தவர் இவர். இயற்பெயர் வே. சிவக்கொழுந்து என்பதாகும். இவர் பல கவிதைகளை எழுதியவர். மாலைக்கு மாலை, கவிதைக்கன்னி போன்ற நூல்களின் ஆசிரியர். பாலருக்காக, இவரெழுதிய பாடல்களில் இவர்தம் சுயமான ஆற்றலை நாம் தரிசிக்கலாம். பலப்பல கணித நூல்களையும் எழுதியவர்.

**பண்டிதர் க. வீரகத்தி**

க.வீ என்ற புனை பெயரில் செழுந்தமிழ்ப் பாக்கள் பாடி வரும் இவர் யாழ் மாவட்டத்திலுள்ள கரவெட்டி ஊரைச் சேர்ந்தவர். பழந்தமிழ் இலக்கண-இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை மிக்கவர். வாணி கலைக்கழகம் நிறுவி சீரிய இலக்கிய பணிபுரிந்தவர்.

**அரியாலையூர் வே. ஐயாத்துரை**

யாழ்ப்பாணம் மருங்கே உள்ள அரியாலையைச் சேர்ந்தவர் இவர். கருத்துச் செறிவுள்ள தமது பாக்களை இனிய குரலில் பாடுந் திறன் மிக்கவர்,

**சக்தி பாலையா**

ஈழத்தில்-மலைநாட்டில் பிறந்து தமிழ் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர். 1925இல் பிறந்தவர். ஓவியத் திறனும் வாய்க்கப் பெற்று விளங்கியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யுவன்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிறந்த இந்த முஸ்லிம் கவிஞரின் அரிய கவிதைகள் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்துப் பத்திரிகைகளை அலங்கரித்தன.

**அப்துல்காதர் லெப்பை**

கிழக்கிலங்கையிலுள்ள காத்தான் குடியில் 1913இல் பிறந்த இந்தக் கவிஞர், பல அரிய பாக்களைப் படைத்துள்ளார்.

**திமிலைத்துமிலன்**

ஈழத்தின் கிழக்குப் பகுதியான மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள திமிலைத்தீவில் 1937இல் தோன்றிய இவர், ஓசைச் சிறப்பும் பாஷைச் சிறப்பும் பொருந்திய பாக்கள் பல படைத்தவர். நீரர மகளிர், கொய்யாக்கனிகள் ஆகிய இரு கவிநூல்களும் இவர் திறனை அடையாளங் காட்டும். இயற்பெயர் கிருஷ்ணபிள்ளை.

**இ. அம்பிகை பாகன் (அம்பி)**

யாழ் மாவட்டத்திலுள்ள நாவற்குழி ஊரில் 1929இல் பிறந்தவர் இவர். பல நளினமான கவிதைகளைப் படைத்தவர். விஞ்ஞான பட்டதாரியான இவர் இதுபோழ்து அவுஸ்ரேலியா தேசத்தில் வாழ்கிறார்.

**வன்னியூர்க் கவிராயர்**

ஈழத்தின் வட பகுதியிலுள்ள வன்னியூரில் 1924இல் பிறந்தவர் இவர். இயற்பெயர் சவுந்தரநாயகம். பல்கலைப் பாக்களைப் படைத்துள்ளார். சீரிய மரபுவழி வைத்தியராகவும் விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புலவர் ம. பார்வதிநாதசிவம்

"குருகவி" மகாலிங்க சிவத்தின் மகனான இவர், பண்பு நெறி பிறழாத பாக்களைப் பாடி வருகிறார். தனியார் கல்லூரியில் தமிழாசிரியராக முன்பு பணியாற்றியவர். இது போழ்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகை ஒன்றின் வாரமலர் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

### யாழ்-ஜெயம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவரின் இயற்பெயர் விக்டர். எழிலேந்திய பலகவிதைகளை அமைதியாகப் படைத்தவர் இவர். யாழ் நகரில் அமைந்த கல்லூரில் ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்.

### ஏ. பெரியதம்பிப் பிள்ளை

மட்டக்களப்பு மாவட்டத்தில் தோன்றிய மிகப் பெருந்தமிழறிஞர்களில் இவர் ஒருவர். பழந்தமிழ்க் கவிமரபைப் பின்பற்றிப் பல பல கவிதைகள் எழுதியுள்ளார். புலவர்மணி என்று சிறப்பிக்கப்பட்டவர். "பகவத்கீதை வெண்பா" இவரால் ஆக்கப் பெற்றது. 1899இல் பிறந்த இவர் அமரராகிவிட்டார்.

### சி.வி. வேலுப்பிள்ளை

1914இல் ஈழத்து மலைநாட்டுப் பகுதியில் பிறந்த இவர், கவிபுனையும் ஆற்றலோடு சீரிய நாவல்கள் எழுதும் திறனும் கொண்டு திகழ்ந்தவர்.

### இ. சரவணமுத்து

யாழ் மாவட்டத்திலுள்ள உரும்பராயில் 1919இல் பிறந்த இவர், ஈழகேசரி, கிராம ஊழியன் பத்திரிகைகள் மூலம் வளர்ந்த கவிஞர். பண்டிதர் பட்டம் பெற்றவர். கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே. கணேஷ்**

ஈழத்து மலைநாட்டில் 1920இல் பிறந்தவர்.

**காரை. செ. சுந்தரம்பிள்ளை**

யாழ்-மாவட்டத்திலுள்ள காரை நகரில் பிறந்த இவரின் அருமைமிகு கவிதைகளை "தேனாறு" என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். "சங்கிலியம்" என்ற பெயரில் உணர்ச்சி பொங்கும் காவிய நூல் ஒன்றையும் படைத்துள்ளார்.

**ஈழவாணன்**

குறிப்பிடும்படியான சிறந்த கவிதைகளைப் படைத்து மறைந்தவர் இவர்.

**திமிலைக்கண்ணன்**

திமிலைத் துமிலனின் சோதரரான இவர் ஆன்மிக ஒளி வீசும் பல பாக்களை எழுதியுள்ளார். 1939இல் பிறந்தவர்.

**இ. சிவானந்தன்**

ஆற்றல் மிகு கவிஞரான இ. முருகையனின் தமபியான இவர் 1941இல் பிறந்தவர். "கண்டறியாதது" என்ற விஞ்ஞானப் புதுமைமிக்கக் கவிதை நூலொன்றைப் படைத்தவர். நல்ல கவிஞர்.

**சொக்கன்**

பழந்தமிழ் இலக்கிய ஞானமும், படைப்பிலக்கியத் திறனும் நிரம்பிய இவர் நல்ல கவிதைக்காரராக மட்டுமின்றி எழுச்சிமிக்க நாடகாசிரியராகவும் சிறுகதை எழுத்தாளராகவும் தம்மை அடையாளங் காட்டியுள்ளார். 1930இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் பிறந்தவர். கல்லூரி ஆசிரியராகவும், அதிபராகவும் பணி ஆற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புமுகையதீன்**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்முனையில் 1940இல் பிறந்தவர் இவர். பல்லாண்டுகளாகக் குன்றாத ஆர்வத்தோடு பாக்கள் எழுதி வருகிறார்.

**கலியுகன்**

கற்பனை வளமுள்ள நல்ல கவிஞர் இவர்.

**பாண்டியூரன்**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாண்டிருப்பில் 1935இல் பிறந்த இவர், மிகச் சிறந்த மறுமலர்ச்சித் தமிழ்க் கவிஞர்களில் ஒருவர். செழுமையான இவர்தம் கவியாற்றலை இவரெழுதிய ஒவ்வொரு கவிதையும் பறை சாற்றும். இந்த அருமைக் கவிஞனை அநியாயமாக இலங்கை ராணுவம் படுகொலை செய்து விட்டதாக ஒரு இலங்கை நண்பர் என்பால் தெரிவித்தார்.

**ஜீவா-ஜீவரத்தினம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தோன்றிய நல்ல கவிஞர்களில் இவரும் ஒருவர். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னரே "வாழுங் கவிதை" என்ற இவரது தரமான கவிதைத் தொகுப்பு ஒன்று வெளிவந்துள்ளது. இவர் ஆசிரியராகவும் பணியாற்றுகிறார்.

**பஸீல் காரியப்பர்**

பல்லாண்டுகளாய்க் கொழுந்து விட்டெரியும் ஆர்வத்தோடு கவிபாடுகிறார் இவர்.

**ஆனந்தி நடராசா**

இந்தப் பெண் பாவலரின் பாக்கள் சுவைமிக்கவை. கொழும்பில் மலர்ந்த (சுடர்) பத்திரிகையில் ஒன்றைக்கண்டு பிடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பில் சேர்த்துள்ளேன்.

**சிலோன் விஜயேந்திரன்**

எழுதிய நூல்கள் பத்து-தொகுத்த நூல்கள் எட்டு. நடித்த திரைப்படங்கள் இதுவரை எழுபத்தைந்து. நவரசத் தனி நடிப்பு நிகழ்ச்சிகள் ஈழத்திலும் இந்தியாவிலும் ஆயிரம் தடவைகளுக்கு மேல் நடாத்தப்பட்டுள்ளது. பிறந்தது இலங்கை நாவலப்பிட்டி, தந்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தாயார் மதுரையில் பிறந்தவர்.

**கோ. சுதா**

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்தில் வாழ்ந்து கவிதைத் துறையில் தீவிரமாகச் செயற்பட்ட இவர், இது போழ்து தமிழ்ப்படங்களில் இணை இயக்குநராகத் தமிழகத்தில் பணிபுரிகிறார்.

**திருக்கோணமலைக் கவிராயர்**

ஈழத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள திருக்கோண மலையில் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கவிதைத் துறையில் முனைப்போடு செயற்பட்டவர் இவர்.

**ஊரெழு கதிரமலையான்**

யாழ் மாவட்டத்திலுள்ள ஊரெழு கிராமத்தைச் சேர்ந்தவர் இவர். பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இறை உணர்வு மேலோங்கப் பல அழகுப் பாக்கள் படைத்து வருகிறார்.

**யாழ் சுதாகர்**

ஈழத்தின் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவரான யாழ்வாணனின் மகனான இவர் ஆர்வத்தோடு கவித்துறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கிறார். பத்திரிகையாளராகவும் தமிழகத்தில் பணியாற்றி வருகிறார்.

**க. ஆதவன்**

ஈழத்தின் சிறந்த கவிஞர்களில் ஒருவராகத் திகழ்ந்த செ. கதிரேசர் பிள்ளையின் மகன் இவர். யாழ் மாவட்டத்திலுள்ள அளவெட்டியில் பிறந்தவர். தமது சுய அனுபவங்களை உயிர்த்துடிப்புள்ள வசன கவிதைகளாக வடித்து வருகிறார்.

**அ. சங்கரி**

முனைப்போடு, மிக இயல்பாக, அருமையான புதுக்கவிதைகளை எழுதிவரும் பெண் கவிஞர் இவர்.

**சித்தன்கேணி பொன் தன சிவபாலன்**

தமிழார்வமும், தெய்வபக்தியும் அலைமோதக் கவிபாடுகிறார் இவர்.

**அ.ந. கந்தசாமி**

யாழ் மாவட்டத்திலுள்ள அளவெட்டியில் பிறந்தவர் இவர். "மதமாற்றம்" என்ற நாடகத்தை எழுதி அனைவரது கவனத்தையும் கவர்ந்தார். குறிப்பிடும்படியான நல்ல கவிதைகளையும் தீட்டியுள்ள இவர் அமரராகி விட்டார்.

**கதிரேசன்**

உணர்ச்சியும் மொழி வீறும் மிக்க கவிதைகளை எழுதியுள்ளார் இவர்.

**வி. சின்னத்தம்பிப் புலவர் (1716-1780)**

யாழ்ப்பாணப் பகுதிலுள்ள நல்லூரில் பிறந்தவர். மிகச் சிறந்த கவிஞர். மறையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன் கோவை, பறாளைப்பள்ளு ஆகிய நூல்களை இயற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேனாதிராய முதலியார் (1750-1840)

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள இருபாலை ஊரில் இவர் பிறந்தவர். ஆங்கில மொழிப் புலமையும் மிக்கவர். தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிகுந்த ஆற்றல் பெற்றவர். நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி போன்ற பல நூல்களைப் படைத்தவர். தமிழ் வானில் அறிவுச் சுடர்க் கொளுத்திய ஆறுமுக நாவலரின் ஆசிரியர்.

## சு. நமச்சிவாயப் புலவர்

யாழ்ப்பாண மாவட்டத்திலமைந்த ஆவரங்கால் என்ற ஊரிலே பிறந்தவர். செய்யுட்கள் பல பாடியதோடு இசைப் பாடல்கள் பலவும் வடித்துள்ளார். ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளைக்கு ஆசிரியராக அமைந்தவர்களில் இவரும் ஒருவர்.

## சிவசம்புப் புலவர் (1830-1910)

யாழ்மாவட்டத்திலுள்ள உடுப்பிட்டி ஊரில் பிறந்த இவர், ஈழநாட்டுப் புலவர்களில் அதிகப் பிரபந்தங்களைப் பாடியவர். ஆறுமுகநாவலரிடமிருந்து புலவர் பட்டம் பெற்றவர்.

## முத்துக்குமார கவிராயர் (1780-1852)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுன்னாகத்தில் பிறந்தவர். முருகப் பெருமான் மீதும் விநாயகர் மீதும் நயமான பல கவிதைகள் பாடியுள்ளார். இவர்தம் தனிப் பாடல்களிலும் கவித்துவம் மின்னுகிறது. கவிராகசேகரம் எனக் கற்றோரால் சிறப்பிக்கப்பட்டவர்.

7373C C

*****

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி
குறிஞ்சி
20எ, டீச்சர்ஸ் கில்டு காலனி,
இராஜாஜி நகர் விரிவு,
வில்லிவாக்கம், சென்னை-600 049.
போன்: 26502086.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org